கனடாவின் மூத்த தமிழ் இதழ் 19 வது வருடத்தில்

# விளம்பரம் ™
VLAMBARAM ™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 19 | பாலம் 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2009

# வன்னியில் பாரிய மனித புதைகுழிகள்!

## செய்மதி படங்களின் மூலம் அம்பலம்

கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி செய்மதி படங்கள் எடுக்கப்பட்ட போது அங்கு புதைகுழிகள் காணப்படவில்லை. எனினும் மே மாதம் 24ஆம் திகதியளவில் சுமார் 342 புதைகுழிகள் காணப்பட்டதாக லண்டனை தலைமையகமாக கொண்ட மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது

வன்னியில் போர் உக்கிரமடைந்திருந்த இறுதி நாட்களில் சிறிலங்கா அரசு அறிவித்த பாதுகாப்பு வலயத்துக்குள் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததும், மக்களின் தற்காலிக தங்கும் இடங்களுக்கு மிக அருகிலேயே படையினரின் கனரக ஆயுதங்கள், மோட்டார் நிலைகள் இருந்ததும் மிகத் தெளிவாக செய்மதிப் படங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவியல் மேம்பாட்டுக்கான அமெரிக்க சங்கம் தனது முழுமையான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

போர் நடைபெற்ற பகுதியில் பல உடல்கள் புதைக்கப்பட்டிருக்கக்கூடிய புதைகுழிகள் அடங்கிய பெரிய பிரதேசம் இருப்தையும் சில நாட்களிலேயே அந்தப் புதைகுழிப் பிரதேசம் விரிவாக்கமடைந்து சென்றதையும் செய்மதிப்படங்கள் உறுதிப்படுத்தியுள்ளன என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

போர் முடிந்துவிட்டதாக சிறிலங்கா அரசு அறிவித்த ஓரிரு நாட்களிலேயே, பாதுகாப்பு வலயத்தின் மீது அரச படையினர் தாக்குதல் நடத்தியதற்கான ஆதாரங்களாக இந்த செய்மதிப் படங்களை அறிவியல் மேம்பாட்டுக்கான அமெரிக்க சங்கம் வெளியிட்டிருந்தது.

குறித்த செய்மதிப்படங்களை ஆராய்ந்து முடிவுகளைத் தெரிவிக்குமாறு அனைத்துலக மனித உரிமைகள் காப்பகம் மற்றும் அனைத்துலக மன்னிப்புச் சபை ஆகியன கேட்டிருந்தன. அதன் அடிப்படையில் தான் நடத்திய ஆய்வுகளின் முழுமையான அறிக்கையை சங்கம் இப்போது வெளியிட்டுள்ளது.

மே மாதம் 9 ஆம் நாள் முதல் 24 ஆம் நாள் வரை எடுக்கப்பட்ட செய்மதிப் படங்களை அலசி ஆராய்ந்து, அவற்றினை ஆதாரமாகக் கொண்டே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வன்னியில் இறுதிப் போர் நடைபெற்ற நாட்களில் சிறிலங்கா அரசு அறிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்துக்குள் கடுமையான சண்டை நடைபெற்றுள்ளது என்பதை தமது ஆய்வு உறுதிப்படுத்துவதாகச் சங்கம் தெரிவித்துள்ளது.

செய்மதிகள் மூலம் எடுக்கப்பட்ட படங்கள், பாதுகாப்பு வலயத்துக்குள் புதிதாகத் தோண்டப்பட்ட புதைகுழிகளை வெளிக்காட்டும் அடையாளங்கள் நிலத்தில் காணப்படுவதையும் கனரக ஆயுதங்களால் ஏவப்பட்ட குண்டுகள் வீழ்ந்து வெடித்ததையும் உறுதிப்படுத்துகின்றன.

மே மாதம் நடந்த போரின்போது புதைகுழிகள் இருக்கும் ஒரு பிரதேசத்தில் எடுக்கப்பட்ட செய்மதிப்படங்களில் குறைந்தது 342 புதைகுழிகள் காணப்படுகின்றன என்று லார்ஸ் புரோம்லே தெரிவித்தார். இவர் சங்கத்தின் அறிவியல் மற்றும் மனித உரிமைகள் நிகழ்ச்சித் திட்ட இயக்குநர்களில் ஒருவர்.

குண்டுத் தாக்குதலால் சல்லடையாக்கப்பட்டதில் அகதிகளின் ஆயிரக்கணக்கான தங்கும் இடங்கள் துடைத்து அழிக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான நிரந்தர வதிவிடங்கள் சேதமடைந்துள்ளன. பாதுகாப்பு வலயமாகப் பிர-கடனப்படுத்தப்பட்டிருந்த மிகக்குறுகிய குடாப்பரப்பானது தெளிவான, வியப்பூட்டுகிற வகையிலான பௌதீக மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது என்று உறுதிப்படுத்தினார் புரோம்லே.

முன்னர் எடுத்த படங்களையும் பின்னர் எடுத்த படங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில், அந்தப் பகுதியில் இருந்த மக்கள் தொகை எவ்வாறு நகர்ந்தது என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

எறிகணைத் தாக்குதலால் ஏற்பட்டதை ஒத்த - எரிமலையின் வாய் போன்று தெரியும் - பகுதிகளையும், புதைகுழிகள் அமைந்திருந்த பகுதி விரிவாகியுள்ளதையும், பல மோட்டார்கள் நிறுத்தப்பட்ட சந்தேகத்துக்குரிய பகுதிகளையும் எம்மால் அந்த ஒளிப்படங்களில் இருந்து அடையாளம் காண முடிகிறது என்று மேலும் தெரிவித்தார் புரோம்லே.

மே மாதம் 6 ஆம் நாள் ஒளிப்படத்துடன் ஒப்பிடும்போது மே மாதம் 10 ஆம் நாள் படங்கள், ஆயிரக்கணக்கான தங்கும் இடக் கட்டுமானங்கள் அகற்றப்பட்டிருப்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

மொத்தத்தில் பார்த்தால் அந்தப் பிரதேசமே ஒப்பீட்டளவில் துடைத்தழிக்கப்பட்டது போன்று தோன்றுகிறது என அறிவியல் மேம்பாட்டுக்கான அமெரிக்க சபையின் அறிக்கை கூறுகின்றது.

மனித புதைகுழிகளும் மோட்டார் எறிகணை தளங்களும் மக்கள் தங்கியிருந்த இடங்களுக்கு அருகில் காணப்படுகின்றமையே இந்த செய்மதி படங்கள் காட்டுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

செய்மதி படங்களின் படி மூன்று பாரிய புதைகுழிகளும் அதனை தவிர மொத்தமாக ஆயிரத்து 346 மனித புதைகுழிகளும் காணப்படுவதாக மன்னப்புச் சபை தெரிவித்துள்ளது.

எனினும் இந்த குழிகளில் பொதுமக்களா அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளா புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என அந்த சபை தெரிவிக்கவில்லை. எட்வான்ஸ் மென் ஒப் சயன்ஸ் என்ற அமெரிக்க நிறுவனமொன்றே இந்த செய்மதி படங்களை எடுத்துள்ளதாக மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

புதிய செய்மதி படங்களின் அடிப்படையில் அரசாங்கம் பொது மக்களுக்காக அறிவித்த பாதுகாப்பு வலயங்களை சுற்றி 17 மோட்டார் தளங்கள் உள்ளதையும் காணமுடிகிறது.

இந்தநிலையில் இலங்கை படையினரும் தமிழீழ விடுதலை புலிகளும் பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தியமை தெரிய வந்துள்ளதாக மன்னிப்புச் சபையின் அலுவலரான கிறிஸ்டோப் கோடடெல் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த தகவல்களின் அடிப்படையில் வன்னியில் யுத்தம் இடம்பெற்ற இறுதி கட்டத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார். எனினும் இந்த குற்றச்சாட்டை இலங்கையின் பாதுகாப்பு பேச்சாளர் கேஹலிய ரம்புக்வெல்ல உண்மைக்கு புறம்பானதென குறிப்பிட்டுள்ளார்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

Sales & LEASING
MARKVILLE TOYOTA


➤KUMAR JEGASOTHY◀
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கௌ்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

SATHYA SAIRAM DRIVING SCHOOL

• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

RBC Royal Bank

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
• 1st Time Home Buyers • Pre-Approvals
• Debt Consolidation
• Home Equity Line of Credit
• New Immigrant & Self-Employed Programs
• Over 20 years of experience with RBC
• Fast and Efficient Service
Always with a Smile!!!
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

VASANTHAM HOME SERVICES
வசந்தம் வீடு சேவைகள்
• Cleaning: Carpet, Duct, Sofa, Car, Window, Home & Office
• Painting & Home Renovation
• Moving to any town
• Airport Services

வீடு, ஜன்னல், சோபா, காரியாலயம் சுத்தம் செய்தல். வர்ணம் பூசுதல். விமானநிலைய சேவை. வீட்டு பொருட்கள் நகர்த்தல்.
Call: 647.296.9374/ 416.836.6791

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

# ஓய்வுகாலமும் நிதியமும்

ஓய்வு காலமும் கனடாவும் பற்றிய முந்தைய கட்டுரை பலராலும் வரவேற்கப்பட்டுள்ளது. பலபேர் இந்த நாட்டில் ஏற்கனவேயே அரசு தரும் ஓய்வூதிய பணத்தினால் பயனடைந்து வருகிறார்கள். முந்தைய கட்டுரையின் தொடர்ச்சியாக மேலும் சில சிந்தனைகள் ஓய்வு காலம் பற்றியும், அதற்கான நிதியம் பற்றியும் இங்கே பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

சென்ற கட்டுரையில் சொல்லப்பட்ட விபரங்களைச் சுருக்கமாக, தொடருமுன் நினைவு கூர்வோம். பணியில் இருப்போர்க்கு வேலை செய்யும் நிறுவனம் பொதுவில் கீழ்க் கண்ட இருவகைகளில் ஏதேனும் ஒருவகையில் ஓய்வூதியம் கிடைக்க வழிவகை செய்கின்றது.



1. Divined Benefit Pension Plan - வேலை செய்த காலத்திற்கு ஏற்பவும், கடைசியாகப் பெற்ற சம்பளத்திற்கு ஏற்பவும், வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட தொகை ஓய்வுக்குப் பின் கிடைக்கும். பணியில் இருக்கும் காலத்தில் சம்பளத்திலிருந்து ஒரு மிகச் சிறிய பகுதி இவ்வூதியத்திற்கு என எடுத்துக் கொள்ளப்படுகின்றது. வேலை செய்யும் நிறுவனமும் இவ்வூதிய நிதியத்திற்குச் சமபங்களிப்பு தரும். பின்னாளில் பணம் பற்றாமல் போனால் அதைச் சரிக்கட்டி ஒப்புக்கொண்டபடி ஓய்வூதியம் வழங்க வேண்டிய பொறுப்பு அல்லது ரிஸ்க் நிறுவனத்தையே சாரும். அரசுத் துறையிலும் மற்றும் அதன் நிறுவனங்களிலும் பணி புரிவோரும் பத்து சதத்துக்கும் குறைவான தனியார்துறை பணியாளர்களும் இவ்வூதிய திட்டத்தால் பயன் பெறுவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

2. Defined Contribution Pension Plan - இந்தத்திட்டத்தின் கீழும் பணியில் இருக்கும் காலத்தில் சம்பளத்திலிருந்து ஒரு மிகச் சிறிய பகுதி இவ்வூதியத்திற்கு என ஒதுக்கப்படுகின்றது. வேலை செய்யும் நிறுவனமும் பங்களிப்பு தரும். ஆனால் முக்கியமான வித்தியாசம் ஒன்று உள்ளது. பின்னாளில் எவ்வளவு ஓய்வூதியம் கிடைக்கும் என்பது இன்றைக்கு தெரியாது. ஓய்வூதிய காலம் வரையும், அதற்குப் பிறகு பணத்தை எடுக்கும் காலம் வரையும் பணத்தை எதில் முதலீடு செய்ய வேண்டும்? அதன் இலாப நட்டங்களுக்கு யார் பொறுப்பு? இதற்கு விடை நிறுவனம் அல்ல, பணியாளர் தான். உதாரணத்துக்கு நீங்கள் என்று வைத்து கொள்வோமே. அந்த முதலீடுகள் நன்றாக வந்தால் பயன் அடையப் போவது நீங்கள் தான். இல்லையேல் துக்கப்படப் போவதும் நீங்கள் தான்.

இது தவிர பலரும் கனடா பென்ஷன் (CPP) வயதானவர்களுக்கு பென்ஷன் (OAS) போன்றவற்றை அரசிடமிருந்து பெறுகிறார்கள். இவ்விபரங்கள் சென்ற கட்டுரையில் தரப்பட்டிருந்தது. 2008இல் ஏற்பட்ட சந்தை வீழ்ச்சி பலரின் சேமிப்புக்களை குறிப்பாகப் பங்குச் சந்தையில் பணம் போட்டிருந்தவர்களைப் பாதித்துள்ளது. இந்தப் பாதிப்பினால் பலபேர் ஓய்வு பெற நினைத்திருந்த வயதையும் மனத்தளவில் தள்ளிப் போட்டிருக்கிறார்கள்.

நாம் முன்னர் குறிப்பிட்ட இருவகை Pension Plan களை எடுத்துக் கொண்டால், சந்தைச் சரிவால் Benefit Plan இல் இருப்பவர்கள் நிச்சயம் பாதிக்கப்படவில்லை என்று சொல்லலாம். Contribution Plan இருப்பவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருப்பார்கள். அத்தகையோரின் ஓய்வு காலம் தள்ளிப் போடப்பட்டிருக்கின்றது என்று சொல்லவும் வேண்டுமா?

ஒன்ராரியோ மாநிலத்தில் கட்டாய ஓய்வு பெற அதிகார பூர்வ வயது வரம்பு ஒன்றும் இல்லை. விரும்பும் காலம் வரையில் பணியில் இருக்கலாம். அதற்காக ஓய்வே தேவையில்லையா என்ன?

ஓய்வு பெற நினைக்கும்போது ஐந்து நாட்களிலிருந்து நான்கு நாட்களுக்கோ மூன்று நாட்களுக்கோ மாறிக் கொள்ளலாம். அல்லது முழுநேரப் பணியைப் பகுதி நேரப் பணியாகவும், பகுதி நேர ஓய்வாகவும் மாற்றிக் கொள்ளலாம். அல்லது பனிக் காலத்தில் ஓய்வு, கோடை காலத்தில் வேலை என்று இயற்கைக்கும், உடல் ஆரோக்கியத்துக்கும் ஏற்ப மாற்றிக் கொள்ளலாம். வாய்ப்பு இருக்குமானால்.

பணம் என்பது வாழும் நாள் வரை இன்றியமையாதது. பணம் இல்லையேல் ஓய்வு காலம் நரகமாகும். மற்றோரை குறிப்பாகப் பிள்ளைகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இன்றைய அவசர வாழ்க்கையில் பெற்றோரே கவனித்துக் கொள்ள நேரம் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.

இயன்றவரை தன்கையே தனக்குதவி என்றிருப்பது ஓய்வு காலத்திலும் நிறைவையும், மகிழ்வையும் தரும். உங்கள் ஓய்வு காலத்திட்டம் என்ன?

இக்கட்டுரை ஆசிரியடம் ஆலோசனை பெற ஸ்கோஷியா வங்கி தொலைபேசி எண் 416.439.3040 Ext 2010



**பெரி. முத்துராமன்**




விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**
For All your Real Estate & Investments Needs!
**Raja M. Mahendran**, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE HIGHER STANDARDS
**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# கனடாவின் கதை - 3

சென்ற கட்டுரையில் மத்திய ஷீல்ட் கலாச்சாரத்தில் எவ்வாறு கற்களைச் செதுக்கிய ஆயுதங்கள் காணப்பட்டன என்றும், மக்கள் கூடாரங்களை அமைத்து நீர் நிலைகளுக்குப் பக்கத்தில் வாழத் தலைப்பட்டனர் என்றும், மனிற்றோபா, ஒன்ராரியோ, கியூபெக் மாகாணங்களில் பெருவாரியான கல், செப்பு, ஆயுதங்கள் காணப்பட்டன என்றும் பார்த்தோம். இன்று மத்திய தரைக்கலாச்சாரம் பற்றிப் பார்ப்போபோம். இதை கனடாவின் பூர்வீகக் கதையின் மூன்றாம் பகுதி எனக் கொள்ளலாம். இது பிளானோ கலாசாரத்தின் இறுதியிலிருந்து ஆரம்பித்து நியோஇந்தியன் காலம் வரை 8000 முதல் 2000 வரையிலான ஆண்டு காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இதனை மீசோ இந்தியன் காலம் என வரலாற்று ஆசிரியர் அழைக்கின்றனர். இக்காலப்பகுதியின் சிறப்பியல்கள் பின்வருவன; வெப்பத்திலான வரட்சி குறைவடைந்தது, மறைந்து போன பைசல் மாடுகளிலிருந்து புதிய இனம் தோன்றியது. வீட்டுப் பொருள்களை இழுப்பதற்கு நாய்களைப் பாவிக்கத் தொடங்கியதால் போக்கு வரவு அதிகரித்தது, கற்களினால் வளையங்களும், சடங்குகளுக்கான அமைப்புகளும் கட்டுதல் காணப்பட்டது. பெமிக்கின் (உலர் இறைச்சி) தயாரிப்புகுத் தேவையான கொழுப்பைப் பெறுவதற்குச் சூடான கற்களைக் கொண்டு நீர் கொதிக்க வைக்கும் முறை கண்டறியப்பட்டது.




சஸ்கச்சுவான் பகுதியிலிருந்து பெறப்பட்ட பைசன் மாட்டின் என்புக்கூட்டின் பாகங்கள். மாடுகள் கொல்லப்பட்ட இடத்திலிருந்து பெரும்பாலும் கொழுப்பும் மச்சையும் நிறைந்த என்புகளே கூடாரத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டன தலையின் தாடைப்பகுதியும் மச்சை யும், ஆயுதங்கள் செய்வதற்கான என்புகளைக் கொண்ட அவயவங்களும் தசைகளோடு கூடாரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. பிற்பகுதிகள் அங்கேயே விடப்பட்டன. (இது ஒரு வரைபடம்)

இந்த மீசோ இந்தியன் காலப்பகுதி (3ஆம்பகுதி) பலபுதைபொருள் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மூன்று உபபகுதி களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது ஒக்ஸ்மோ என அழைக்கப்படுகிறது. இது தென்கிழக்கு சஸ்கச்சுவானின் ஒக்ஸ்மோ அணைக்கட்டுப் பகுதியில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இது மம்மி குகை, பிற்றறூட் சமன் ஆற்று வாழ்விடங்களிலிருந்து அபிவிருந்தி அடைந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அடுத்தது மக்கீன் எனப் படுகின்றது. இது நெவாடா, யூற்றா பெரும் பள்ளத்தாக்குப் பகுதிகளிலிருந்து ஆரம்பமாகி இப்பகுதிக்குள் புகுந்த ஒரு கலாச்சாரமாகக் கருதப்படுகிறது. மூன்றாம் உபபகுதி பெலிக்கன் வாவி என அழைக்கப்படுகிறது. இது மக்கீனிலிருந்து ஆரம்பமாகியிருக்கலாம் என எண்ணப்படுகிறது. ஒக்ஸ்போவின் காலம் கி.மு. 4000 முதல் 3,000 வரையானது. மக்கீன் கி.மு 3,000 முதல் 2,000 வரையானது. பெலிக்கன் வாவி கி.மு 2500 - 1000 வரையானது. பெலிக்கன் வாவிக்கலாச்சாரம் நான்காம் பெரும்பிரிவுக்குள் செல்கின்றது.

கி.மு 3500 ஆண்டளவில் வெப்பமான உலர்காலநிலை மறைந்து போக, புற்றரைகள் நன்கு பரவ ஆரம்பித்தன. கி.மு 2000 ஆண்டளவில் ஈரப்பதனுக்குள்ள குளிர்கால நிலையில் காடுகள் 50 கி.மீற்றர் முதல் 100 கி.மீ வரை புற்றரைகளுக்குள் தோன்ற ஆரம்பித்தன. கி.மு 500 ஆம் ஆண்டளவில் தற்கால காலநிலை ஓரளவுக்கு நிலைபெறத் தொடங்கியது. கி.மு 2000 ஆண்டுக்கு பின்னரே பைசன் கூட்டங்கள் பெருமளவில் கொல்லப்பட்டதற்கான சான்றுகள் கிடைக் கின்றன. இக்காலப்பகுதியில் அவை பெருவாரி யாகக் காணப்பட்டன. இக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் காடுகளிலும் மலையடிவாரங் களிலும் காணப்பட்ட வளங்களைப் பெரிதும் பயன்படுத்தினர் எனவும் அறியப்படுகிறது. பிரிட்டிஷ் கொலம்பியாவின் கூட்டினே (Kootenay) பீஸ் றிவர் பிரதேசங்களின் வடபகுதியில் ஒக்ஸ்போ கலாச்சாரமும், தென்பகுதியில் ஒக்ஸ்போவும் மக்கீனும் காணப்பட்டதாக ஆய்வாளர் கூறியுள்ளனர்.

**- துறையூரான் -**

மத்திய தரைக் கலாச்சாரத்தில் பெரும்பாலும் கல்லாலான கூரான எறி ஆயுதங்களும், சுரண்டும் ஆயுதங்களும், இருமுனைக் கத்திகளும் காணப்படுகின்றன. இதில் கி.மு 2700 ஆம் ஆண்டளவில் பாவிக்கப்பட்ட தனிக்கல்லால் செய்யப்பட்ட குழாய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது அல்பேட்டாவி லுள்ள கக்ரஸ் பூ ஆய்விடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இது புகைபிடிப்பதற்குப் பாவிக்கப்பட்டிருந்தால் கனடாவில் முதல் முதலில் புகைபிடித்தல் ஆரம்பித்த சான்றாக இதனைக் கொள்ளலாம். இது மக்கீன் கலாச்சாரத்தைச் சேர்ந்தது. மேலும் இக்காலப்பகுதியில் தோல், மரம் தாவரநார்கள் கொண்டு செய்யப்பட்ட பொருட்கள் எதுவும் அகழ்வுகளின் போது காணப்படவில்லை. எனினும் இவை அழிந்து போயிருக்கலாமென நம்பப்படுகிறது. இக்கலாச்சாரத்தின் மூன்று உப பகுதிகளிலும் ஏறக்குறைய ஒரே மாதிரியான சவ அடக்க முறைகள் காணப்படுகின்றன. கல்லாயுதங் களையும் பிறபொருட்களையுஞ் சேர்த்து பிணத்தோடு புதைக்கும் வழமை இருந்துள்ளது.

## மத்திய பள்ளத்தாக்கும் கலாச்சாரம்

இக்கலாச்சாரம் பற்றிய தகவல்கள் போதிய சான்றுகளின்மையால் பலவகையான மாறுபட்ட முடிவுகளுக்கு ஆளாகியுள்ளது. இக்கனடியப் பள்ளத்தாக்கு கரையோரத் தொடர்களுக்கும் றொக்கி மலைத்தொடர்களுக்கும் இடைப்பட்ட பிரதேசங்களையும், தெற்கே அனைத்துலக எல்லைப்பகுதி வரைக்கும் வடக்கே $54^0$ பாகை நெடுங்கோட்டிலுள்ள பிறேசர் ஆறு வரைக்குமான பகுதிகளை உள்ளடக்கும். இக்கலாச்சாரம் இதற்கு முந்தைய ஆரம்ப பள்ளத்தாக்குக் கலாச்சாரத்தைப் பின்பற்றி எழுந்தது. கி.மு 4000 ஆண்டளவில் செவ்வாளை மீன்கள் கிடைத்ததைப் பொறுத்து இக்கலாச்சாரம் ஓரளவுக்கு நிலையான தொன்றாய் அமைந்தது. இக்காலகட்டத்தில் ஈட்டி எறிந்து மிருகங்களைக் கொல்வது ஏற்பட்டிருக்கலாம். கி.மு 2500 ஆம் ஆண்டளவில் பள்ளத்தாக்கு குழி வீடுகள் அமைக்கும் முறை தோன்றியிருக்கலாமெனத் கருதப்படுகிறது. அத்துடன் செவ்வாளை மீன்கள் களஞ்சியத்திலிடும் தொழிநுட்பம் தோன்றியது. ஆரம்பப் பள்ளத்தாக்கு கலாச்சாரமே இக்கலாச்சாரத்திலும் தொடர்ச்சியாய் இருந்தது எனக் கருதுவதற்குச் சான்றுகள் உள்ளன. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் ஐரோப்பியர் வந்தபோது சலிஷ் மொழி பேசிய மக்களின் கலாச்சார அடித்தளமாக இக்கலாச்சாரம் இருந்தது என எண்ண இடமுண்டு. இக்கலாச்சாரத்தின் இருப்பிடங்களை நன்கு



தொடர்ச்சி 12ஆம் பக்கம்

**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

***Very respectfull instructor to ladies.***

**உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்**
**நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்**



**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**

***Get your G licence through me.***
***If you fail G test, we will pay your test-booking fee.***
(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

**சேவைகள்:** ***Brampton - Mississauga - Toronto***

***Road test available in out cities***

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# ஐம்புலன்களின் குறுகிய எல்லை

## வெறும் பிழைப்பைக் கடந்து எதையாவது நீங்கள் தேடுகின்றீர்கள் என்றால், இந்த ஐம்புலன்களின் புரிதல்கள் உங்களுக்குப் போதாது.



**சத்குரு வாசுதேவ்**

இயற்கையைத் தவிர உங்களைவிடப் பெரிய சக்தி எதையும் நீங்கள் இதுவரை உணர்ந்ததில்லை. இப்போது காற்று வீசுகிறது. இந்தக் காற்றை நீங்கள் வீசச் செய்யவில்லை. இது உங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது. மிகுந்த வேகத்தோடு காற்று வீசுகிறது. நீங்கள் அதை நிகழ்த்தவில்லை. நீங்கள் உங்களை உருவாக்கிக் கொள்ளவில்லை. நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். உங்களைக் கடந்து இருக்கின்ற சக்தியோ அல்லது வேறொன்றோ இல்லாமல் இங்கு எதுவும் நிகழ்ந்ததில்லை. உங்களை ஏதோ ஒன்று உருவாக்கியிருக்க வேண்டும். ‘உங்களை எது உருவாக்கியது?’ என்பது உங்களுக்குத் தெரியவில்லையென்றால், உடனே அதைக் கடவுள் செய்திருக்க வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் ஒரு மனிதராக இருக்கிற காரணத்தினாலேயே கடவுள் என்றால் இன்னும் பெரிய அளவிலான மனிதர் என்று கருதிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஓர் எருமையாக இருந்திருந்தால் கடவுளை எருமை வடிவத்தில் உருவகித்து இருப்பீர்கள். எனவே, கடவுள் என்ற உங்கள் கருத்துருவாக்கமே உங்களுக்கு நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அந்தக் குறுகிய எல்லைக்குட்பட்ட அனுபவத்தில் இருந்துதான் எழுகிறது. உண்மையான அனுபவத்திலிருந்து வரவில்லை. இப்போது கூட அது குறுகிய கற்பனைதான். எனவே கடவுள் என்றும், சக்தி என்றும் எதைச் சொன்னாலும் ஒன்று, அதைப் பற்றி சிந்திக்கிறீர்கள் அல்லது அதைப்பற்றி கற்பனை செய்து கொண்டிருக்கிறீர் கள். அது உங்கள் மனதில் தான் இருக்கிறது. உங்களுக்குள் இருக்கிற ஒன்றைத்தான் உண்மையில் உங்களால் உணர முடியும். ஆனால் உங்களுக்குள் இருக்கிற அந்தத் தன்மையை நீங்கள் உரிய ஆழத்தில் இதுவரை உணர்ந்ததேயில்லை.

இதுவரை நீங்கள் உணர்ந்ததெல்லாம் உங்கள் ஐம்புலன்களின் குறுகிய எல்லைக்குட்பட்டவை தான். இந்த உலகமாகட்டும், நீங்கள் ஆகட்டும், இவை அனைத்துமே பார்த்தல், கேட்டல், நுகர்தல், தொடுதல், சுவைத்தல் ஆகிய ஐம்புலன்கள் வழியாகத்தான் உங்களுக்கு வந்திருக்கின்றன. ஐம்புலன்களும் ஆழமான தூக்கத்தில் போய்விட்டால் நீங்கள் உங்களையும் உணரமாட்டீர்கள், உலகையும் உணரமாட்டீர்கள். இந்த ஐம்புலன்களும் குறுகிய அளவு புரிதல்களையே கொண்டுள்ளன. மற்றவற்றோடு ஒப்பிட்டே எல்லாவற்றையும் உணருகின்றன. நான் ஒரு இரும்புக் கம்பியை தொடுகிறேன் என்றால், என் உடலினுடய உஷ்ணம் எப்படி இருக்கிறதோ, அதைப் பொறுத்து அது எனக்கு குளுமையாகப்படுகிறது. என் உடம்பில் உள்ள உஷ்ணத்தை நான் குறைத்துக் கொண்டு அந்த இரும்புக் கம்பியைத் தொட்டால் அது சூடாக இருப்பதாகத் தோன்றும். எனவே, இந்த அனுபவம் உண்மையான அனுபவம் அல்ல. மனநிலையிலான வாழ்க்கையை வாழ்வதற்கு மட்டும் இந்த அனுபவம் போதுமானது. இந்த உலகத்தில் வெறுமனே பிழைப்பு நடத்துவதற்கு மட்டும்தான் இந்த ஐம்புலன்களின் புரிதல் உங்களுக்கு உறுணையாக இருக்கிறது.

ஆனால், பிழைப்பைக் கடந்த ஒரு நிலையை நீங்கள் தேடினால், இந்த ஐம்புலன்கள் உங்களுக்குப் போதாது. எனவே, அத்தனை யோகப்பயிற்சிகளும் ஐம்புலன்கள் கடந்த ஒரு புரிதல் உணர்வை ஏற்படுத்வதற்காகவே உருவாக்கப்பட்டு இருக்கின்றன. ஐம்புலன் களைக் கடந்து நீங்கள் உணருகிற அனைத்துமே ஸ்தூல எல்லைகளைச் சார்ந்தவை அல்ல. அவை முற்றிலும் வேறு ஒரு பரிமாணத்தை சார்ந்தவை. இந்த பரி-மாணத்தை நீங்கள் ‘கடவுள்’ என்றும் அழைக்கலாம், ‘சக்தி’ என்றும் அழைக்கலாம். ‘நீங்கள்’ என்று அழைக்க நினைத்தால் அழைக்கலாம். அதற்கு என்ன பெயர் கொடுத்தாலும் மக்கள் அதைத் தவறாக புரிந்து கொள்ளப் போகிறார்கள். சிவா என்றோ, அல்லா என்றோ, கடவுள் என்றோ, தெய்வீகம் என்றோ சொல்லி ஒரு 10 நிமிடங்களுக்குள் மனிதர்கள் வேறுவிதமாக புரிந்து கொள்வார்கள்.

எனவே, இப்போது உங்கள் எல்லைகளக் கடந்து போவது என்பது உங்களுக்குள்ளிருந்து வரலாம். அது உங்களுக்குள்ளிருந்து வருகிறதா? வெளி யில் இருந்து வருகிறதா? என்பது தான் அடிப்படையான கேள்வி. நீங்கள் வேறொரு நிலைக்கு உயர வேண்டுமென்று கருதினால் நீங்கள் முழுமையாக விரும்பினால் மட்டுமே அது நிகழும். பூமியிலோ, வானிலோ இருக்கிற வேறு எந்தச் சக்தியாலும் அதை நகர்த்த இயலாது.

## Inner Engineering

**Date:** 19 - 25 Aug. 2009

**Location:** Latvian Canadian Cultural Centre, 4 Credit Union Drive
Toronto, ON M4A 2N8 Canada

**Free Intro talk:** Wed 19 August - 9–10am & 6:30–7:30pm
*ALL ARE WELCOME*

**Session Info:** TIMINGS: Attendance on all 7 days is mandatory.
Please select Morning or Evening session for weekdays.
Weekend sessions are common.

**Weekday Morning Session:** 9am to 12pm OR
**Weekday Evening Session:** 6:30pm to 9:30pm
Saturday: 10am to 1pm Sunday: 8am to 5pm
**Tel.: 1-866-424-4742**
website: www.ishafoundation.org www.ishayoga.org

**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



**KENNEDY / SHEPPARD** New Condo. 1000 sq.ft.
2 bedroom + Den. Low maintenance.

**House with Mechanic shop Scarborough**

**Church for sale Toronto**

*Buy low, Sell high - 40 years* *Low Interest*
**வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out**
*5 year plan 3.9% interest* **Power of Sale**
***Properties with Tenant's* Pay the cost**
**What's your Risk?**

*We look after* **seniors over 70 years** *peaceful life.*

**Country Style**
*Coffee shop - Oshawa*
*Good Income*

**வீடும் வியாபாரமும் *Business Zoning***

**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
**416.230.7820 / 905.696.7310**
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.



**SMILE....**

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**
**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**
24 hrs, 365 days

# கணினி உலகம் - எண் ரகசியங்கள்

தரவுகளில் பலவகை உண்டு. அவை எண்கள், உரை, தேதி, படம், ஒலி, ஒளிக்காட்சி போன்றவை. உரையில் எழுத்து, எண்கள் மற்றும் சிறப்பு குறியீடுகள் இருக்கும். படத்தில் வரை-படங்களும், புகைப்படங்களும் அடங்கும். இசை, ஓசை போன்றவை ஒலியில் அடங்கும். சலனபடங்களுக்கான தரவுகள் ஒளிக்காட்சியில் அடங்கும்.

இந்த தரவுகள் எல்லாம் கணினிக்கு புரியும் வகையில் இருக்க வேண்டும். இவற்றை கணினி அலசவும் செயல்பாடு களில் பயன்படுத்தவும் முடிய வேண்டும். தரவுகளை ஒப்புமைவகை, மற்றும் இலக்க வகை எனப் பிரிக்கலாம். ஒப்புமை வகையில் மதிப்புகள் தொடர்ச்சியாக, இடைவெளி எதுவும் இல்லாமல் இருக்கும். ஒலி, வெப்பம் இவற்றின் அளவு இந்த வகையில் இருக்கும்.

**- Bala -**

*A1 Ink Rainbow Inc.*
Email: balag2005@yahoo.com

இலக்க வகையில் தரவுகளின் மதிப்பு தனித்தனியாக இருக்கும். இவற்றை இரு நிலை எண்கள் எனலாம். நாம் சாதாரண மாக பயன்படுத்தலும் கணினி இத்தகைய தரவுகளையே கையாளுகிறது.

பிட் (Bit) மற்றும் பைட் (Byte) எனனும் சொற்கள் இலக்க வகையில் முக்கியமானவை. சுழி (O) அல்லது (1) என்பது ஒரு பிட் எனப்படும். எட்டு பிட்டுகள் சேர்ந்த தொகுதி ஒரு பைட் (Byte). கணினி ஒரே சமயத்தில் எத்தனை பிட்டு தரவுகளை கையாளுகிறது. எவ்வளவு பைட் தரவுகளை நினைவில் வைக்க முடியும். வன் வட்டின் கொள்ளளவு எத்தனை பைட்டுகள் என்பவை எல்லாமே பிட்டுகள் மற்றும் பைட்டுகளை கொண்டுதான் அளக்கப்படு கின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு கணினி 32 பிட் பென்டியம் செயலி 128 மேகாபைட். நினைவகம் (Ram) மற்றும் 40 கிகாபைட் வன்வட்டு கொண்டது என கூறலாம்.

மைய செயலகத்தில் உள்ள கணித ஏரணச் செயலகம் (Arithmetic Logic Unit Alu) எண் செயல்பாடுகளையும், ஏரணச் செயல்பாடுகளையும் செய்கிறது. கணினி எண்களை இருவகையாக கையாளு கிறது. முழு எண்கள் (Integer numbers) மற்றும் பின்னங்கள் (Fraction) இதில் பின்னங்கள் மிதக்கும் புள்ளி முறையில் (Floating Point Representation) வைக்கப்படுகின்றன. முழு எண்களைச் கையாள்வது எளிது. பின்னங்களைக் கையாள்வது சற்று கடினம். அதனால் இந்த இருவகைகளுக்கும் தனித்தனி சுற்றுக்கள் தேவை.

இந்த எண்கள் எப்படி கையாளப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள பிட், பைட்டுகளை பற்றியும் எண் முறைகள் பற்றியும் அறிந்து கொள்வது அவசியம்.

### பிற்றும்-பைற்றும்



ஒரு எண்ணை எப்படி குறிப்பிடுகிறோம். அதன் மதிப்பை எப்படி கணக்கிடுறோம் என்பதைக் கூறும் அமைப்பு எண்முறை எனப்படும். இதில் பலமுறைகள் உள்ளன. நாம் சாதாரணமாகப் பயன்படுத்துவது பதின்மநிலை. (தசம - Decimal) முறை எனப்படும். ஏனென்றால் இது பத்து என்பதை அடிப்படையாக கொண்ட முறை.

இருநிலை முறையில் (Binary) எண்கள் வைக்கப்பட்டால், கணினி அதை விரைவாக கையாளும். அதனால் இருநிலை முறையும், அதை சார்ந்த எண்ணிலை (Octal) பதினாறுநிலை (Hexadecimal) முறைகளையும் அறிந்து கொள்வது அவசியம்.

பிற் (Bit) என்பது 'Binary Digit' என்பது குறுக்கம். இது 0,1 என இருமதிப்புகளை மட்டும் பெறும். இருநிலை எண் என்பது இந்த பிற்றுக்களை கொண்டு 256 வரிசைகளையும் உருவாக்கலாம். அவை 0 முதல் 255 வரை உள்ள எண்களை, கீழே காட்டப்படுவது போல் குறிப்பதாகக் கொள்ளலாம்.

0 = 0000 0000
1 = 0000 0001
2 = 0000 0010
3 = 0000 0011
.............
.............
254 = 1111 1110
255 = 1111 1111

உரையில் உள்ள ஆங்கில எழுத்துக்கள், பதின்ம இலக்கங்கள் மற்றும் சிறப்பு குறியீடுகளையும், ஒரு பைற்றைக் கொண்டு குறிப்பிடலாம். இதற்கான ஒரு ஆஸ்தி குறியீடு (ASCII - American Standard Code for Information Interchange). இது கணினியில் பெருமளவு பயன்படுகிறது. இதில் 0 முதல் 127 வரையில் உள்ள மதிப்புகள் பயன்படுகின்றன. ஆங்கில எழுத்துக்களில் கீழ்நிலை எழுத்துக்கள் 26ஐ ஆஸ்தி குறியீடுகள் 65 முதல் 90 வரையும், 0 முதல் 9வரை உள்ள இலக்கங்கள் 48 முதல் 57 வரையும் குறிப்பிடுகின்றன. இடைவெளிக்கான குறியீடு (Space) 32

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

**பிள்ளைகள் வளர்ந்து வரும்போது நன்மையளிக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பெற்றுப் பயனடைய அவர்கள் தகுதியுடையவர்கள்**



**ஒன்றாறியோ பிள்ளைகளுக்கான நலனுதவி The Ontario Child Benefit**

சிறியதொரு உதவியால் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

உங்கள் குடும்பம் அண்மையில் அதிகரிக்கப்பட்ட இந்த மாகாண நலனுதவியைப் பெற தகுதி கொண்டிருக்கக் கூடும்.

18 க்கும் குறைந்த வயதினரான பிள்ளைகள் உங்களுக்கு இருந்தால் மற்றும் அவர்கள் குறைந்த வருமானமுடைய குடும்பத்தில் இருந்தால், நீங்கள் வருடாந்தம் ஒவ்வொரு பிள்ளைக்கும் $1,100 டொலர்கள்வரை தகுதி பெறக்கூடும். இதனைப் பெறுவதற்கு நீங்கள் முதலில் உங்கள் வருமான வரிகளைப் பதிய வேண்டும்.

**மேலும் அதிகமான தகவலுக்கு ontario.ca/childbenefit என்ற இணையத்தளத்திற்கு செல்லுங்கள் அல்லது கட்டணமின்றி 1-866-821-7770 என்ற இலக்கத்தை அழையுங்கள்.**

ஒன்றாறியோ அரசினால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# ஒருசோடி கால்களுக்கு £90 மில்லியன்!

கிரிஸ்டியானோ ரொலான்ல்டோவின் கால்கள் 90மில். பவுண்டுகளுக்கு காப்பீடு



**விளையாட்டுத் தகவல்கள் 266**

போர்ச்சுகல் அணி வீரரும், தற்போது ரியால் மேட்ரிட் அணிக்கு மிகப்பெரிய தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டவருமான கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் கால்களை ரியால் மேட்ரிட் கிளப் 90 மில்லியன் பவுண்டுகள் தொகைக்கு காப்பீடு செய்துள்ளது.

80 மில்லியன் பவுண்டுகள் தொகைக்கு மான்செஸ்டர் யுனைடெட் அணியிடமிருந்து ரொனால்டோவை விலைக்கு வாங்கிய ரியால் மேட்ரிட், அவரது கால்களுக்கு ஏற்படும் காயங்களை உத்தேசித்து இந்த காப்பீட்டை செய்துள்ளதாக பிரிட்டன் ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன. சமீபத்தில் முழங்காலில் ரொனால்டோவிற்கு காயம் ஏற்பட்டதால் பதறிய ரியால் மேட்ரிட் கிளப் நிர்வாகம் உடனடியாக அவரது கால்களை காப்பீடு செய்துள்ளது. இவரை வைத்து சாம்பியன்ஸ் லீக் யுரோப்பியன் சம்பியன் பட்டம் வெல்ல ரியால் மேட்ரிட் திட்டம் வகுத்துள்ளது.

## முரளி அதிரடி

தம்புல்லாவில் நடைபெற்று வரும் இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் முரளிதரன் கடைசியில் களமிறங்கி 15 பந்துகளில் 32 ரன்களை விளாச 131/6 என்று தடுமாறிக் கொண்டிருட்ந்த இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 232 ரன்கள் எடுத்துள்ளது. தரங்கா, ஜெயசூரியா துவக்கத்திலேயே ஆட்டமிழக்க, சங்கக்காரா 36 ரன்கள் எடுத்து அஜ்மல் பந்தில் ஆட்டமிழந்தார். இதனால் இலங்கை 93.்.3 என்று ஆனது. அதன் பிறகு கபுகேதரா (8), சமரவீரா (10), ஜெயவர்தனே (33) ஆகியோர் ஆட்டமிழக்க இலங்கை 131.்.6 என்று சரியும் நிலைக்கு வந்தது. ஆனால் அஞ்சேலோ மேத்யூஸ், குலசேகரா இணைந்து ரன் எண்ணிக்கையை மெல்ல 44.3 ஓவர்களில் 173 ரன்களுக்கு உயர்த்தினர். குலசேகரா 16 ரன்களில் ஆட்டமிழந்தார். அந்த ஓவர் முடிந்தவுடன் பவர் பிளே எடுத்தார் யூனிஸ் கான். அதில் மேத்யூஸும், முரளியும் நன்றாக ரன் குவிப்பில் ஈடுபட்டனர். 4 ஓவர்களில் 31 ரன்கள் எடுக்கப்பட்டது. மேத்யூஸ் 50 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 43 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன் பிறகு முரளிதரன், உமர் குல் பந்து வீச்சில் ஒரே ஓவரில் இரண்டு பவுண்டரி ஒரு சிக்சர் அடித்தார். அதன் பிறகு அ.்.ப்ரிடி பந்தில் 13 ரன்களை விளாசினார் முரளி. துஷாரா 8 ரன்கள் எடுத்தார். இலங்கை 9 விக்கெட் இழப்பிற்கு 232 ரன்கள் எடுத்துள்ளது.

பாகிஸ்தான் தரப்பில் அப்துல் ரசாக் 10 ஓவர்களில் 33 ரன்களை மட்டுமே கொடுத்து 2 விகெட்டுகளையும், மொகமட் ஆமீர் 3 விக்கெட்டுகளையும், அஜ்மல், குல், அ.்.ப்ரிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## பாகிஸ்தானை வீழ்த்தியது இலங்கை

தம்புல்லாவில் நடைபெற்ற இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை 232 ரன்கள் சேர்க்க, இலக்கை துரத்திய பாகிஸ்தான் 44.4 ஓவர்களில் 196 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வி தழுவியது. 51/3 என்று இருந்த பாகிஸ்தான் 27 ரன்கள் எடுத்து பொறுமையாக விளையாடிய ஷாஹித் அ.்.ப்ரிடி விக்கெட்டை திலன் துஷாராவிடம் இழந்தது. பிறகு யூனிஸ் கானும் 12 ரன்கள் எடுத்து துஷாராவிடம் ஆட்டமிழக்க பாகிஸ்தான் 78/5 என்று ஆனது. பிறகு மிஸ்பா உல் ஹக் 9 ரன்கள் எடுத்து முரளிதரனின் முதல் விக்கெட்டாக முடிந்து போனார். பிறகு பவாத் ஆலமும், அப்துர் ரசாக்கும் ஸ்கோரை 37-வது ஓவரில் 134 ரன்களுக்கு உயர்த்தினர். அப்போது 31 ரன்களில் ஆலம், ஜெயசூரியா பந்தில் ஆட்டமிழந்தார். அதற்கு அடுத்த ஓவரிலேயே தடுமாறிய ரசாக் 17 ரன்களில் முரளியின் பந்தில் ஆட்டமிழந்தார். பவர் பிளே எடுக்கப்பட்டவுடன் உமர் குல், ஆமிர் இணைந்தனர் இருவரும் சில அதிரடி ஷாட்களை விளையாடினர். உமர் குல் 21 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 33 ரன்களை விளாசினார். ஆமீர் 23 ரன்களை எடுத்து ரன் அவுட் ஆகும்போது ஸ்கோர் 196 ரன்களாக இருந்தது.

உமர் குல், ஆமிர் இணைந்து 7 ஓவர்களில் 62 ரன்களை விளாசி இலங்கை அணிக்கு கிலி ஏற்படுத்தினர். ஆனால் ஆமீர் ரன் அவுட் ஆனவுடன், குல் மலிங்கா பந்தில் பௌல்டு ஆனார். ஆட்ட நாயகனாக 32 ரன்களையும், 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய முரளிதரன் தேர்வு செய்யப்பட்டார்.

## வீனஸை வீழ்த்தி பர்டோலி சாம்பியன்

ஸ்டன்.்.போர்டில் நடைபெற்ற பேங்க் ஆ.்.ப் வெஸ்ட் கிளாசிக் டென்னிஸ் இறுதிப் போட்டியில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்சை பிரன்ஸ் வீராங்கனை மரியோன் பர்டோலி 6 - 2, 5 - 7, 6 - 4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். தனது சர்வ்களில் அதிக சக்தியை கூட்டுவதற்காக பர்டோலி சில உத்தி ரீதியான மாற்றங்களை இந்த ஆண்டில் செய்து கொண்டார். இதனால் வீனஸிற்கு இவர் அதிக சிரமங்களைக் கொடுத்தார். இந்த சாம்பியன் பட்ட வெற்றியினால் உலக தரவரிசையில் பர்டோலி 12-வது இடத்திற்கு முன்னேறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

15,000 ரன்கள் 2011 உலகக் கோப்பை வெற்றி - சச்சின் டெண்டுல்கர் இலக்கு. தனது சாதனைகள் திருப்தி தருவதாயில்லை என்றும், டெஸ்ட் கிரிக்கெட்டில் 15,000 ரன்கள் எடுப்பதும், அனைத்திற்கும் மேலாக உலகக் கோப்பையை வெல்வதும் தனது எதிர்கால இலக்கு என்று இந்தியாவின் நட்சத்திர பேட்ஸ்மென் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

விஸ்டன் கிரிக்கெட்டர் இதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், "நான் இது வரை சாதித்தது திருப்தி அளிக்கவில்லை, நான் 15,000 ரன்களை எடுப்பது அவசியம் என்று சுனில் கவாஸ்கர் என்னிடம் கூறியுள்ளார், அவ்வாறு நான் செய்யவில்லை எனில் என் மீது அவர் கோபம் கொள்வார் என்று அவர் ஏற்கனவே ஒரு முறை கூறியிருக்கிறார்" என்று கூறியுள்ளார் சச்சின்.

தனது மற்றொரு மிகப்பெரிய லட்சியம் 2011 உலகக் கோப்பை சாம்பியனாக இந்திய கிரிக்கெட் அணி விளங்கவேண்டும் என்பதே என்று கூறியுள்ளார் சச்சின்.

மேலும் தான் எப்போதும் ஏதாவது ஒரு வலியுடந்தான் கிரிக்கெட் விளையாடி வருகிறேன் என்று கூறிய டெண்டுல்கர் கடைசி 3 மாதங்களாக கைவிரல் காய வலியுடன் விளையாடி வருவதாக கூறினார். 25 வயதில் என்ன செய்தேனோ அதனை இன்றும் செய்ய முடியும், ஆனால் உடல் மாறிக் கொண்டிருக்கிறது, அதனால் சிந்தனையையும் மாற்றவேண்டியுள்ளது. நான் எப்படி யோசிக்கிறென் என்பதையே தற்போது மாற்ற வேண்டியுள்ளது. அதாவது "ரிஸ்க்" குறைவாக எடுக்கவேண்டும்.

ஆஸ்வுரேலிய முன்னாள் பயிற்சியாளர் ஜான் புக்கானன், சச்சின் டெண்டுல்கர் இன்னிங்ஸ் துவக்கத்தில் ஷாட் பிட்ச் பந்துகளுக்கு வீழ்ந்து விடக்கூடியவர் என்று கூறியுள்ளது குறித்து சச்சினிடம் கேட்டதற்கு "அது அவரது கருத்து, ஜான் புக்கானன் எப்போதும் எல்லாவற்றையும் சரியாக கூறவேண்டும் என்ற அவசியமில்லை. ஷாட் பிட்ச் பந்துகளை சரியாக எதிர்கொள்ளவில்லை எனில் நான் எவ்வாறு இன்னமும் ரன்களை என்னால் குவித்துக் கொண்டிருக்க முடியாது. அவர் தனது கருத்தை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று நினைக்கிறேன், உலகத்தில் உள்ள அனைத்து பந்து வீச்சாளர்களிடம் ஏதோ ஒரு தவறு உள்ளது, இதனால்தான் என்னை இவ்வளவு ரன்களை அடிக்க விட்டுள்ளனர்".

டான் பிராட்மேன், ஒரு முறை சச்சினின் ஆட்டம் தன் ஆட்டம் போல் இருப்பதாகக் கூறிய புகழ் பெற்ற அறிக்கைக்குப் பின்னர், சச்சின் தற்போது விரேந்திர சேவாக் கிட்டத்தட்ட தன் பாணியில் ஆடி வருவதாக தெரிவித்தார் சச்சின்.

அதே போல் ஓய்வு பெறுவது குறித்து பேசியுள்ள சச்சின், தன்னை வெளியே இழுக்கவேண்டிய அவசியமில்லை. எப்போது எனக்கு சரியான நேரம் என்று தோன்றுகிறதோ அப்போது ஓய்வு பெறுவேன் என்று கூறியுள்ள சச்சின் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பிறகான ஒரு வாழ்க்கையை நினைத்தாலே தனக்கு அச்சமூட்டுவதாக உள்ளது என்றும், தனது வாழ்க்கை முழுதும் கிரிக்கெட்டுடனேயே இருந்து வந்துள்ளதால் ஓய்வு பெற்ற பிறகும் இன்னொரு 10 பந்துகள் விளையாடவேண்டும் என்ற ஆவல் தீரவே தீராது என்றும் கூறியுள்ளார் சச்சின்.

*டெஸ்ட் கிரிக்கெட் உலகக்கோப்பை சாத்தியமா: எம்.சி.சி.யுடன் நவம்பரில் ஐ.சி.சி. பேச்சு*

டெஸ்ட் கிரிக்கெட்டில் உலகக் கோப்பைத் தொடர் நடத்துவது சாத்தியமா என்பது பற்றி மெரில்பான் கிரிக்கெட் கிளப் (எம்.சி.சி) உடன் சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐ.சி.சி) வரும் நவம்பரில் பேச்சு நடத்த உள்ளது.

இதுதொடர்பாக 'தி டெய்லி டெலிகிரா.்.ப்' நாளிதழில் வெளியாகியுள்ள செய்தியில், டெஸ்ட் கிரிக்கெட்டுக்கென தனியாக உலகக்கோப்பைத் தொடர் நடத்துவது பற்றி துபாயில் வரும் நவம்பரில் நடக்கும் எம்.சி.சி-ஐ.சி.சி. மாநாட்டில் விவாதிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட் அழியும் அபாயத்தில் இல்லையென்றாலும், அதனை முதன்மையான நிலைக்கு மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை கிரிக்கெட் வாரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் எம்.சி.சி.



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி25ஆம் பக்கம்

S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்
மக்கள் சேவை சதாசிவ சேவை

மூத்தோருக்கான சேவைகள்
- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

சதாசிவா - 416.454.2810
ASATHN@hotmail.com

மற்றைய சேவைகள்
> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

# ஆஸ்தி சந்தையின் இன்றைய நிலவரம்

மேற்குலக நாடுகளின் ஆஸ்தி விற்பனையை மிகவும் கவனமாக ஆராய்ந்தால் ஒருவித ஒழுங்குமுறையை (Pattern) அவதானிக்க லாம். இதற்கு கனடா நாடு விதிவிலக்கல்ல. பொதுவாக விலை ஒருகுறிப்பிட்ட காலத்திற்கு அதிகரிக்கும், பிற்பாடு இறங்கும். அதன் பின்னர் அதிகரிக்கும். இந்த நிலைமை தொடர்ந்து வருகிறது. இது இயற்கையா? செயற்கையா?

இன்றைய காலகட்டத்தில் நடக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது, இது உண்மையா என்ற கேள்வி நியாயமாகத் தோன்றுகின்றது. ஆனால் இன்றைய சுழல் வட்டத்தில் (Cycle) விலையிலும், விற்கப்படும் வீடு - மனைகளிலும் நடப்பது சற்று வித்தியாசமானதாவே காணப்படுகின்றது.

பொதுவான வியாபார ஏற்ற இறக்கம் 5 தொடக்கம் 8 வருடத்தில் மாற்றம் ஏற்படும். இதுவே கடந்தகாலக் கணிப்பீடு.

ஆனால் 1997 இற்குப் பிற்பாடு ஆஸ்தியின் விலை ஏறுமுகமாகவே காணப்படுகின்றது. 1989 இற்கு பின் விலை இறங்கத் தொடங்கி மீண்டும் 1997 இற்கு பின்னர் அதிகரிப்பு ஏற்பட்டது. ஒவ்வொரு வருடமும் விலையில் அதிகரிப்பே ஏற்பட்டது. 2005ஆம் ஆண்டிற்கு பிற்பாடு எந்த சந்தர்ப்பத்திலும் ஆஸ்தி விலை இறங்கலாம் என பொருளாதார நிபுணர்கள் எதிர்வு கூறியே வந்தார்கள். இதனால் விற்பனர்களும், வாங்குனர்களும் மிகவும் கவனமாக தமது நிலைப்பாட்டை உறுதி செய்தார்கள்.

இருந்தபோதிலும் உலக நாடுகளிலும், குறிப்பாகவும் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார இறக்கம், எதிர்பாராதளவிற்கு அடிமட்டத்தை அடைந்தது. வீடு - மனைகளிலும் இதன் பாதிப்பு மிகவும் பாரதூரமாக காணப்பட்டு வருகின்றது. கடந்த 4 - 5 வருடங்களாக அமெரிக்க ஆஸ்தி சந்தை கேட்பாராற்று இருந்தது. அமெரிக்க சில நகரங்களில் மக்கள் வீடுகளை கைவிட்டே சென்று விட்டார்கள். பேய் வீடு மாதிரி சில பகுதிகளைக் காணக்கூடியதாக இருந்தது.

உதாரணத்திற்கு 10 - 15 வீடுகள் இருக்கும். சில தெருக்களில் 4 அல்லது 5 வீட்டில் மட்டும் மக்கள் இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இன்று நிலமை சற்று வித்தியாச மாகக் காணப்படுகின்றது. இது அமெரிக்க நிலைமை. இந்த நிலைமை ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக பெரிய பிரித்தானியா விற்குப் பொருந்தும். இதே நிலைமை கனடா விலும் ஏற்படலாம் என எதிபார்க்கப்பட்டது. எனினும் கனடிய பொருளாதார நிலைமை, அமெரிக்காவில் ஏற்பட்ட பாதிப்பை போலல்லாமல் இருந்த போதிலும் ஒருவகை பாதிப்பு இருந்தது அல்லது இருக்கின்றது என்றே கூறமுடியும். ஆஸ்தி வியாபாரத்தின் பாதிப்பு கடந்த வருடம் (2008) செப்ரெம்பரில் ஆரம்பித்தது. இந்நிலைமை சிலகாலம் தொடரலாம் என சகலராலும் எதிர்பார்க்கப்பட்டது. கனடிய மத்திய அரசு, மாநில அரசுகளின் முன்னேற்பாட்டால் உதாரணமாக சரித்திரத்தி லேயே மிகக்குறைந்த அடமானக் கடனின் வட்டி வீதம் (Mortgage Rate), கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 0.25% மேலதிக ஊக்குவிப்புகள், உதவிகள் முதல் தடவையாக ஆஸ்தி வாங்குபவர்களிற்கு பல சலுகைகள் என புதிய புதிய ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன. உதாரணமாக முதல் தடவை ஆஸ்தி வாங்குபவர்கள் RRSP இல் இருந்து $25,000வரை பாவிக்கலாம். (முன்பு $20,000 வரை மட்டுமே பாவிக்கலாம்). முதல் தரம் ஆஸ்தி வாங்குபவர்களிற்கு வரிச்சலுகை 15 வீதம், ஆகக்கூடிய $5000 வரை வழங்கப்படுதல் (First Time Home Buyers Tax Credit). ஆஸ்தியை திருத்துவதற்கான வரிச்சலுகை (Home Renovation Tax Credit) 15% வரையான தனிப்பட்ட வருமான வரி இறக்கம் (Personal Income Tax Credit) ஆகக்கூடியதி $10,000 வரையானதாக இருக்கும். $2000 வரையான நிலமாற்று வரிக்கான சலுகை, 20% முதலீடு செய்து (Down Payment) ஆஸ்தி வாங்கும் போது, மேலதிக காப்புறுதி (CMHC Insurance or Gmac Insurance) செலுத்த வேண்டிய தேவை இல்லை. முன்பு 25% வரை முதலீடு செய்தால் மட்டும் இந்தக் காப்புறுதி விலக்கு அளிக்கப்பட்டது). இவை போன்ற பல சலுகைகள், முதல் தடவை ஆஸ்தி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 304


HomeLife GTA Realty Inc., Brokerage*

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng. (Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga Tel.: 905.712.2666

DETACED HOUSE FOR SALE

- Morningside & Sheppard
- 2 Storey
- 4 Bedrooms
- 3 Washrooms
- Newer roof
- Unfinished Bsmt
- single Garage
- upgraded windows
- Asking Only $289,000



NEW CONDO. for Sale

- Markham & Sheppard
- Brand new 1 bedroom + den, lower floor Previous buyer selling the property, 5 appliances
- Asking $170,000



Condo. for Sale

- Mccowan & Steeles
- 2 Bedroom, highrise, corner unit Asking $189,900

Condo. for SALE

- Finch & Middlefield

2 Bedroom, low highrise, less than 5 years old complex. Asking $179,900

எதிர்பாருங்கள்

Townhouse Project

"MORNINGSIDE HEIGHTS"

- 4 Buildings
- 21,000 sqft. & 27 units
- Medical Building units available
- Restaurant units available
- Food / Retail units available
- Starting Price $169,900

Nantha Aiyadurai

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# பண்டைய கிரேக்க நாடக அரங்கம்

## தோற்றம்



மேலைநாடுகள் அறிந்து இக்காலத்திற் போற்றிவருகின்ற நாடகக்கலையின் தோற்றம் கிரேக்கத்துக்குரியது. அதனால் கிரேக்க நாட்டுக்கு நாடகத்தை வளர்த்த தொட்டில் என்ற ஒரு பெயரும் உண்டு. பண்டைய கிரேக்கத்தில் நாடகக் குழந்தையைத் தாலாட்டி வளர்த்த முன்னோடியாக அதன்ஸ் நகரம் பேசப்படுகின்றது. கி.மு. 6க்கும் 4க்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளில் நாடகக்கலை அதன்சில் பூத்து மலர்ந்தது. அங்கு நடை-பெற்ற சமய விழாக்கள் நாடகத்தின் தோற்றத்துக்கு வழிவகுத்தன.

கிரேக்கத்தின் முதன்மைக் கடவுளுக்கு சூஸ் (Zeus) என்று பெயர். இவர் எமது சிவபெருமானைப் போன்று எல்லாம் வல்லவர். உரோமரின் கடவுள் யுப்பிட்டருக்கு இணைய-ானவர். இவரது சக்தி ஏரா (Hera) எனப்படுவர். இவர்களது புதல்வர் தையோனிசஸ் (Dionysus) கிரேக்க நாட்டில் பெரிய பெயர்பெற்ற தெய்வம், கேட்டதெல்லாம் தந்து வாழ்க்கையை வளப்படுத்த வல்லவரெனக் கிரேக்கர் வணங்குவர். எமது நாட்டில் முருக வழிபாடு எப்படியோ அப்படி அங்கு தையோனிசஸ் வழிபாடு. அவருக்கு அக்காலத்தில் அதன்சில் நடத்தப்பட்ட சமய விழாக்களிலிருந்தே நாடகம் உருவாகியது என்பது ஆய்வாளர் முடிவு.

தையோனிசஸ் வழிபாட்டில் dithyramb எனப்படும் கூட்டுப்பாடல் பாடப்படுவது வழக்கம். இதில் தையோனிசசின் வரலாறு மற்றும் அற்புதங்கள் எல்லாம் சொல்லப்படும். பத்தர்கள் இப்பாடலைச் சேர்ந்து பாடுகையில் பரவசப்பட்டு ஆடவுஞ் செய்வர். நாளடைவில் பிற தெய்வங்களினதும் கிரேக்க வீரர்களினதும் கதைகளும் ஆடல்முறையிற் பாடிக் காட்டுதல் சமய விழாக்களின் சிறப்பியல்புகளாயின. அவற்றின் விளக்கங்களைப் பத்தருக்கு முன்னால் நின்று குருமார் கூறும் முறையும் தோன்றியது. குருமாரை நடிகர்களாகவும் பத்தர் கூட்டத்தை அவையோராகவும் ஒருவகையிற் கொள்ளலாம். இவ்விதமாகவே நாடகம் வளர்த்தெடுக்கப்பட்டது என்று தத்துவ அறிஞர் அரிஸ்டோட்டல் கருதுகின்றார்.

## அரங்கம்



கிரேக்கத்தில் நாடகங்கள் வெளி அரங்குகளிலேயே நடத்தப்பட்டன. அரங்குகள் வட்டவடிவமானவை. அவை நிலச்சரிவுகளில் அமைக்கப்பட்டன. சரிவுகள் ஒன்றுக்குமேல் ஒன்றாக இருக்கைகளை அமைக்க வசதியாக இருந்தன. சுற்றியிருக்கும் பார்வையாளருக்கு முன்னால் ஆடற்களம் இருந்தது. அதுவும் வட்டவடிவமுடையதே. அதற்குப் பின்னால் ஒரு மேடை. அது தெய்வத்துக்குரிய கோயிலாகும். காலப்போக்கில் மேடைக்குப் பின்னால் நடிகர் உடைமாற்றும் அறைகள், காட்சிப் பொருள் அறைகள் என்று பிற கட்டிடங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. எனினும் அடிப்படையில் கிரேக்க அரங்கம் முற்குறிப்பிட்ட மூன்று அங்கங்களைக் கொண்டிருந்தது. அதாவது (1) அவையிருக்கை, (2) ஆடற்களம், (3). மேடை. இவ்வித அமைப்பில் உள்ள அரங்குகளிற் பெயர்பெற்றவையாக அதன்ஸ், தெல்பி(Delphi), எப்பிடோரொஸ் ஆகிய நகர அரங்குகள் விளங்கின.

அதன்ஸ் அரங்கம் தையோனிசஸ் அரங்கம் என்று சிறப்பாக அழைக்கப்படும். இது அக்கிரோப்போலிஸ் குன்றின் தென் சரிவில் கி.மு. 5ஆம் நூற்றாண்டளவிற் கட்டப்பட்டது. ஆசனங்கள் மரப் பலகைகளால் அமைகப்பட்டன. பிற்காலத்தில் இவை கற்களாற் கட்டப்பட்டன. இந்த அரங்கத்திலேயே பெயர்பெற்ற கிரேக்க நாடக ஆசிரியர்களான ஈஸ்கிலஸ், சோபக்கிளிஸ், யூரிப்பிடிஸ், அரிஸ்டோபனிஸ் ஆகியோரின் நாடகங்கள் நடிக்கப்பட்டன.

நாடகங்கள் சமய விழாக்களின் அங்கமாக அரங்கேற்றப்பட்டதால் கிரேக்கத்தின் பெரும்பாலான பெருங் கோயில் நகரங்களில் அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் எப்பிடோரொஸ் நகரத்தில் கி.மு. 4ஆம் நூற்றாண்டிற் கட்டப்பட்ட அரங்கம் நன்கு பேணப்பட்டுவந்த அரங்காக விளங்குகின்றது. இது அஸ்கிளிப்பியொஸ் என்ற தெய்வத்தின் ஆலயக் கோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நடிகரின் மெதுவான பேச்சுக்கைளைக் கூட அவையோர் வடிவாகக் கேட்கக்கூடிய வகையில் இந்த அரங்கம் கட்டப்பட்டிருப்பதைக்கொண்டு அக்காலக் கிரேக்க விஞ்ஞானிகள் ஒலியோசைக் கலை நுணுக்கங்களிற் பெற்றிருந்த அறிவு நன்கு புலப்படுகின்றது. 14,000 பேர் இருந்து பார்க்கக்கூடிய பெரிய அரங்கம் இது.

ஆதிக் கிரேக்க நாடகத்திற் காட்சிப்பொருள்கள் அரிதாகவே பயன்படுத்தப்பட்டன. காட்சியிலும் சொல்வதைப் பார்வையாளர் செவிமடுக்க வேண்டும் என்பதே நாடக வல்லாளர் கருத்தாக இருந்தது. பாடகர்குழு (chorus) கிரேக்க நாடகத்தின் இன்றியமையாத ஒரு அங்கமாகும். தொடக்கத்தில் நின்று பாடியவர் பின்னர் ஆடியும் பாடினர். பின்னர் அவர்களில் ஒருவர் பாட்டில் வரும் பாத்திரம் ஒன்றைப் பாவனை பண்ணிக் குழுவுக்கு முன்னால் நின்று நடிக்கத் தொடங்கினார். காலப்போக்கில் இன்னும் இரண்டொருவர் அவருடன் சேர்ந்து நடிக்கலாயினர். இந்த வளர்ச்சிக்கேற்ப நாடகங்கள் எழுதப்பட்டன. எனினும் முதன்மை நடிகர் ஒரே பாத்திரத்துக்குரியவராகவும் மற்றையவர் பல பாத்திரங்களைத் தாங்குபவராகவும் கதைகள் அமைக்கப்பட்டன. நடிகர் பாத்திரங்களுக் கேற்ற உடைகளையும் முகமூடிகளையும் அணிந்தனர். ஒரு நடிகர் முகமூடியை மாற்றினால் அவர் வேறு பாத்திரமாகிவிட்டார் என்பதைப் பார்வையாளர் புரிந்துகொள்வர்.



**கவிஞர் வி. கந்தவனம்**


# APARTMENTS FOR RENT




*In a NEWLY Renovated High-Rise Apartment Building Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby*

**Pl. Call: 416.264.2818**

# Driving School



- ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை
- நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
- ***G1, G2*** தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
- வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்
- நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி - General Driving School

**Ministry of Transportation Approved Instructor - பேரின்பநாதன் வேந்தன் - 416-731-2829**

**Email: venthanctr@yahoo.com**


***Personal Prayer To The Holy Spirit***



Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - R.R

Our Mother of Perpetual Help

# நீரிழிவு நீங்க யோகாசன சிகிச்சை

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய



சென்ற இதழில் நீரிழிவு என்னும் சர்க்கரை வியாதியின் தோற்றத்தையும் அதனை உருவாக்கும் காரணங்களைப்பற்றியும் பார்த்தோம். அடுத்து அதன் அறிகுறிகளும் அதற்குரிய தீர்வுகள் பற்றியும் பார்ப்போம்.

### நீரிழிவு நோயின் அறிகுறிகள்.

1. வாய் உலர்ந்து லேசாகத் தாகம் எடுத்தல்.
2. வழக்கத்திற்கு அதிகமாக சிறுநீர் கழிதல்.
3. சிலர் அதிக நேரம் தூங்குவார்கள். சிலருக்கு தூக்கக் குறைவு ஏற்படும்.
4. கலக்கம் பொருந்திய முகமும் சோர்ந்த உடல் நிலையும்.
5. உடலின் எடைகுறைதல்.
6. மூத்திர நாளங்களில் அரிப்பு உண்டாதல்.
7. கண்பார்வை மங்கலாதல்.
8. சிறுநீரில் வெண்ணிற நுரைகள் தோன்றுதல்.
9. உடல் பலவீனப்படுதல்.
10. மனோபலமும் உடல் வலிமையும் நாளுக்கு நாள் குறைதல்.
11. கட்டி தொப்புளம் உண்டாதல்.
12. பற்கள் ஈறுகள் பாதிக்கப்படுதல்.
13. சிலருக்கு புளிப்பு சுவையும், தித்திப்பு சுவையும் உருவாதல்.
14. அடிக்கடி பசியெடுத்தல்.
15. கல்லீரல் பாதிக்கப்படுவதால் அடிக்கடி அஜீரணம் ஏற்படுதல்.
16. கீழ் முதுகுப்புறத்தில் வலி.
17. பொதுவாக எந்த நேரமும் சோர்வு உணர்ச்சி.
18. கைகள், கால்கள் மரத்துப்போதல், தொடைப்பகுதியில் உணர்வு குறைதல்.
19. அடிக்கடி கோபம் வருதல்.
20. கண், காது, மூக்கு, வாய் முதலியவற்றில் சில கோளாறுகள் ஏற்படுதல்.

### நீரிழிவு நோயாளிகள் 3 பிரிவினர்.

1. தீவிரமாகப் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் ஈடுபாடின்றி படுத்த படுக்கையில் இருப்பவர்கள். இவர்களுக்கு இன்சுலின் ஏற்றப்பட்டு கண்டிப்பான உணவுமுறைகள் கடைப்பிடிக்க வேண்டும்.

2. நோய் இருந்த போதிலும் அன்றாட வாழ்வில் ஈடுபடுபவர்கள். இவர்கள் யோகாசன நிபுணர்களின் உதவியுடன் ஒருமுறையான பயிற்சித் திட்டத்தினை வகுத்துத் தாமாகவே தொடங்கலாம். பின்பு இரண்டு வாரங்களின் பின் சர்க்கரை வெளியேற்றத்தின் அளவை பரிசோதனை செய்து அதற்குத் தகுந்தபடி யோகாசன பயிற்சியை மேற்கொள்ளும்போது நாளடைவில் நோய் நீங்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

3. நோய் ஆரம்பித்து நோயாளியைப் பாதிக்காது இருக்கும் நிலையில் உள்ளவர்கள் மூன்றாவது வகையினர். இவர்கள் தமது சுய புத்தியை உபயோகித்து சிகிச்சை மற்றும் உணவு முறைகளையும் ஆராய்ந்து அதனைக் கைக்கொண்டு கட்டுப்பாடாக நடந்தால் நோயிலிருந்து விடுதலை பெறுவர்.

### யோக சிகிச்சையின் பலன்கள்

நமது உடலின் வெளி உறுப்புகளை நாம் பாதுகாப்பது போல நமது உடலின் உள் உறுப்புகளை பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்த உள் உறுப்புகளை இயக்குவது நல் முறையில் வைத்திருப்பது என்பதற்கு சரியான வழிமுறை யோகாசனப் பயிற்சிகள் ஒன்றுதான் நிரந்தர தீர்வு. இப்பயிற்சி நமது முன்னோர்கள் உடல் ஆரோக்கியத்திற்காக நமக்கு அளித்திருக்கும் ஒரு பொக்கிஷம். இது ஒவ்வொரு உறுப்புகளையும் செம்மைப்படுத்த திறம்பட இயங்க வழி செய்கிறது. இனி நீரிழிவு நோய்க்கு உகந்த பயிற்சிகளைப் பற்றி ஆராய்வோம். அத்துடன் உணவு முறையின் விதி முறைகளையும் கவனிப்போம்.

### உணவுத் திட்டம்

சர்க்கரை நோயாளிகள் தாம் உண்ணும் உணவில் எதனைச் சேர்ப்பது, தவிர்ப்பது என்பதை அறிய வேண்டியது அவசியம். பொதுவாக காப்பி, தேனீர், மதுவகைகள் நீக்க வேண்டும். பொதுவாக பாதிக்கப்பட்டவர்கள் தானியவகைகள், கீரைகள் (முக்கியமாக முருங்கை கீரை), அதிக இனிப்பு இல்லாத பழங்கள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். அரிசி, சர்க்கரை சத்து நிரம்பிய உணவுகளைத் தவிர்ப்பது சிறந்தது. அத்துடன் இந்தவகை நோயாளிகள் அதிகமாக உண்பதும், பட்டினி உபவாசம் இருப்பதும் நோயின் அளவை அதிகரிக்கவே செய்யும்.

அடுத்த இதழில் யோகாசனங்கள், சுவாசப் பயிற்சிகள், தியான முறைகள் (Meditation Technique) நீரிழிவு நோயை எவ்வாறு நீக்கி அதனை பூரண கட்டுப்பாட்டில் வைப்பதற்கு உதவுகின்றன என்பனபற்றி அறிவோம்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

15 Years of EXPERIENCE

Math & Science
New Classes
Starts in Aug.
For
All Grades
K.G, Gr1 to Gr 12
Scarborough/Markham

Mr.& Mrs Sharma
416-666-5515

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? காது

# Ear

இதனைச் செவி எனவும் கூறுவர்.

நமது உடம்பின் மேற்பகுதியில் அதாவது முகத்தின் வலது, இடதாக இருகாதுகள் அமைந்துள்ளன. காது, மூக்கு, தொண்டை ஆகிய உறுப்புக்கள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. இவற்றில் எதுவித குறையும் ஏற்படாதபடி அமைவது சாலச்சிறந்தது. இதில் காதைப் பற்றிப் பார்ப்போம்.

**காதின் உறுப்புப் பகுதிகள் பின்வருமாறு.**
செவி எலும்புகள் - Bones of the Ear
பட்டையுரு எலும்பு - Anvil
சம்மட்டியுரு எலும்பு - Hammer
ஏந்தியுரு எலும்பு - Stirrup
அரைவட்டக் கால்வாய் - Semicircular Canals
செவி நரம்பு - Auditory Nerve
உட்செவி - Inner Ear
நடுச்செவி - Middle Ear
வெளிச்செவி - Outer Ear
நத்தைச்சுருள் - Cochlea
செவிப்பறை - Eardrum
காதுமடல் - Earlobe
புறக்காது கால்வாய் - Auditory Canal
என்பவற்றைக் குறிப்பிடலாம்.

நமது காதை மூன்று பெரும்பகுதியாகப் பிரிக்கலாம். வெளிக்காது, நடுக்காது, உட்காது ஆகும். வெளிக்காதில் ஒலி உள்வாங்கப்பட்டு காற்றின் உதவியால் உள்ளே வருகின்றது. நடுக்காதில் செவிப்பறையுடன் இணைந்துள்ள சுத்தி எலும்பு (Hammer), பட்டறை எலும்பு (Anvil), திடப்பொருள் (Solid) மூலமாகச் சத்தம் அதிர்வுகளாகின்றது. அவை உட்காதில் எண்டோலியம் என்ற திரவத்தின் மீது மிதந்து கொண்டு, செவியுணர்வு நரம்புகளைத் தூண்டி மின் அலைகளாக மாற்றப்பட்டு மூளையை அடைகின்றது. எனவே நமது காதில் நுழையும் ஒலி, காற்று, திடப்பொருள் (Solid), திரவப்பொருள் ஆகியவற்றால் கடத்தப்பட்டு மூளையை அடைகின்றது என்பது புலனாகின்றது.

ஒலி அளவு டெசிபல் (Decibel) எனக் கூறப்படுகின்றது. நாம் முணுமுணுப்பது 20 டெசிபலும் (Decibel) நாம் உரையாடுவது 60 டெசிபலும் ஆகும். இது ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒரு வினாடியில் கடக்கும் ஒலி அலைகளின் எண்ணிக்கையைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது.

பொதுவாக 80 டெசிபல் அளவுக்கு இருந்தால் பாதிப்பில்லை. இதற்கு மேற்பட்டால் காதில் பாதிப்பு ஏற்பட இடம் உண்டு எனக் கூறப்படுகின்றது.

**காதில் ஏற்படும் வியாதிகள் பற்றிப்பார்ப்போம்.**

கேட்கும் தன்மை குறை - Deafness
காதினால் சீழ்வடிதல் - Discharge from the Ear
காதுவலி - Ear Ache
நடுச்செவியில் ஊநீர் - Glue Ear
காதுக்குள் இரைச்சல் - Tinnitus
குரும்பி அதாவது மெழுகு அடைப்பு - Impacted Wax
நடுச் செவ்வியில் தொற்று - Otitis Media
செவிட்டுத்தன்மை - Deafness
செவிடு - Deaf
புறக்காதுக் கால்வாயில் கட்டு - Abscess in the auditory canal
புறக்காதுக்கால்வாயில் தொற்று - External Otitis
செவிப்பறை வெடிப்பு - Ruptured Ear Drum
காதில் இருந்து இரத்தம் வடிதல் - Bleeding from the Ear
காதில் இருந்து ஊநீர் வடிதல் - Fluid Comes out of the ear
என்பனவாகும்.




நாம் அழுக்கு எனக் கருதப்படும் குரும்பி அதாவது மெழுகு (Wax) காதுக்கு முக்கியமானது. காதைப் பாதுகாக்கக்கூடியது. இது காதில் உள்ள செருமினல் (Cermenal) என்ற சுரப்பியினால் சுரக்கப்பட்டு செவிப்பறைக்கு பாதுகாப்பைக் கொடுக்கின்றது.

வெளியில் இருந்து வரும் அழுக்கு காதினுள் செல்லாது தடுக்கின்றது. இந்த மெழுகு (Wax) சிலவேளையில் அதிகமாக வருவதும் உண்டு. இதனைச் சிந்திக்காமல் வெளியே எடுப்பதற்கு முயற்சிப்பவர்களும் இருக்கின்றார்கள். உரிய வைத்தியர்களிடம் சென்றால் எதுவித தாக்கமும் இல்லாமல் இலகுவாக எடுத்து விடுவார்கள். நாம் குச்சி, பஞ்சு போன்றவற்றால் எடுக்க முயற்சித்தால் சில வேளையில் தீங்காகவும் ஆகிவிடும். எதற்கும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

மேலும் அளவுக்கு மிஞ்சிய சத்தங்களினால் காதில் பாதிப்பு ஏற்படும். இதனால் இரத்த அழுத்தம், சீரணக் கோளாறு போன்றவை ஏற்பட ஏதுவாக இருக்கும்.

பிறப்பிலே ஒருவருக்கு காது கேட்காமல் இருந்தால் அது தாய், தகப்பன் குறைபாடாக இருந்தாலும் வரலாம். அல்லது உட்காதுப்பகுதியில் அணுக்கள் உணர்வு இல்லாமல் இருக்கும் நிலை இருந்தாலும் வரலாம். எதற்கும் இதற்கு உரிய தகுந்த வைத்தியர்களை நாடி ஆரம்பத்திலேயே சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். இதனால் காது கேட்பதற்கு வழியாகிவிடும். மேலும் இதற்குரிய கருவிகளும் உண்டு. தங்கள் வைத்தியர் கூறிக்கொள்வார்.

அடுத்து கருவுற்றிருப்போர் முதல் மூன்று மாதம் கதிர்படச்சோதனை (X-Ray) செய்யக்கூடாது. இரசாயன மருந்துகளை அளவுக்கு மிஞ்சி எடுப்பதை குறைக்க வேண்டும். இல்லையேல் பிறக்கும் குழந்தைக்கு காது கேட்பது தடைப்படும்.

சிலவேளையில் நமது காதினுள் சிறு பூச்சிகள் செல்வதுண்டு. இதனால் பெரும் உபத்திரவம் ஏற்படும். இதனை வெளியகற்ற சிலர் நீரை காதினுள் விட்டு வெளியேற்ற முயற்சிப்பர். சிலவேளை அது சரிவரலாம். எண்ணெய் விட்டால் சிலவேளை பூச்சி இறந்து விடும். பயன் உடன் கிடைக்காவிடில் அண்மையில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைபெற்று சுகமடையுங்கள்.

வயது வந்தோர் சிலருக்கு காது கேட்க முடியாத நிலை வருவதுண்டு. இதற்கு அவர்கள் கொழுப்புள்ள உணவை அதிகம் உண்ணாமல் இருப்பது நன்று. கொழுப்பு இரத்தத்தின் மூலம் காதின் இரத்தக் குழாய்களில் படிந்து காது கேட்க முடியாத நிலை வரலாம்.

வயது முதிர்ந்த 60 வயதிற்கு மேற்பட்ட சிலருக்கு காது கேட்காமல் போவதுண்டு. இவர்களுக்கு சலரோகம் அல்லது இரத்த அழுத்தம் இருந்தாலும் இது நிகழலாம். எதற்கும் வைத்தியர்களை நாடிச் செல்ல வேண்டும்.

சிலருக்கு காதுகளின் கீழ்புறத்தில் அடிக்கடி வெடிப்பு (Cut) ஏற்படுவதுண்டு. இது ஒருவகை எக்சிமா (Eczema) நோயாகவும் இருக்கலாம். இதற்கு சர்மரோக வைத்தியர்களிடம் சென்று தகுந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளவும். அலட்சியமாக இருந்தால் தோல் சம்பந்தமான தொழுநோய் ஆகவும் வரும் எனவும் கூறப்படுகின்றது

சிலர் காதில் ஒருவித அரிப்பு நிலை ஏற்படும்போது சிறு குச்சி கொண்டு காதை நன்கு குடைந்து கொண்டே இருப்பர். இதனால் ஓரளவு அரிப்பு நிலை மாறிக் கொள்ளும். மீண்டும் மீண்டும் குடைந்து கொண்டிருந்தால் வலிப்புத்தன்மை கூடி காது தாக்கத்திற்குள்ளாகி விடும். காதின் உட்புறம் புண்ணாகிச் சீழ் பிடித்து கிருமி குடிகொண்டு தீங்குகளை விளைவிக்கும்.

சிலருக்கு காதினால் சீழ் வடிவதை நாம் அறிவோம். அத்துடன் துர்நாற்றமும் வீசும். இது காதின் உட்புறத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதைக் குறிக்கும். வலியும் காது கேட்க முடியாத நிலையும் வந்துவிடும். சிலவேளை மயக்கம், முக வீக்கம் என்பனவும் தோன்றக்கூடும். எனவே கண்டபடி வைத்தியம் செய்து தாமதிக்காமல் காது தொடர்பான விசேட வைத்தியர்களை நாடிச்சென்று பாதுகாத்துக் கொள்ளுங்கள். இந்நிலையில் அலட்சியமாக இருந்தால் சீழ் ஆனது மூளைக்கும் நாளடைவில் உங்களை அறியாமல் பரவக்கூடும். அப்படி நேருமாகில் மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடும். எதற்கும் சிந்தித்து செயலாற்றவும்.

மேலும் சிலருக்கு காதால் சீழ் வரும். ஆனால் காதில் வலி இருக்காது. காது நன்கு கேட்கும். இதற்கு காரணம் செவிப்பறையில் துவாரம் (துளை) எப்போதாவது ஏற்பட்டிருக்கலாம். இந்நிலையைக் கவனித்தால் காதில் நீர் சென்றாலோ, காதைக் குடைந்தாலோ, மூக்கடைப்பு, சளிபிடிப்பு ஏற்பட்டாலோ உடன் அழற்சி ஏற்பட்டு காதில் சீழ்வடிய ஆரம்பிக்கும். இந்நிலை சிறுவர்களுக்கு ஏற்பட்டால் மூக்கடைப்பு, தொண்டைவலி, ரொன்சில்லைரிஸ் நிலை இருக்கும். உரிய வைத்தியரிடம் சென்றால் சிகிச்சை பெறுவதுடன் செவிப்பறை துளையை அடைபதற்குரிய அறுவைச் சிகிச்சை பற்றிய விபரம் கூறுவார். அதன்படி நடந்து கொள்ளவும்.

காது, மூக்கு, தொண்டைக் குழாய்களில் உள்ள அமைப்பு மாற்றத்தினால் மூச்சுக்குழாய் குட்டையாகவும், பெரிதாகவும், நேராகவும் இருந்தாலும் காதில் சீழ் வரலாம். குழந்தைக்கு படுத்துக் கொண்டு பால் கொடுக்கும் போது குழந்தையின் உணவுக் குழாய் மூலம் பால் செல்லாமல் காதினுள் சென்று நாளடைவில் சீழாக வருவதுண்டு. எனவே படுத்துக்கொண்டு சிறுவர்களுக்கு பால்கொடுப்பது நன்றன்று. கவனிப்பின்றி இருந்தால் காது கேட்காத நிலை ஏற்படும்.

ஒருவருக்கு காதில் சீழ் ஏற்படும் போது காதுவலி, சுரம், தலைவலி, உடல்வலி, வாந்தி, மயக்கம் போன்றவை ஏற்படும். அத்துடன் மூளையில் சீழ் வருவதற்கு காதுகளில் ஏற்படும் சீழ் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மூளையில் சீழ் பிடித்தால் உயிர்பிழைப்பது கஷ்டம். உயிர் தப்பினாலும் மனிதனாக வாழ முடியாது. பெரும்பாலும் மூளையில் சீழ் தானாக ஏற்படுவதில்லை. பிற உறுப்புக்களில் இருந்துதான் ஏற்படும்.

இந்தச் சீழ் ஆனது காது எலும்புகளில் சீழ், மூளைநரம்புகளில் சீழ் ஏற்பட்டு செயல்திறன் பாதிக்கப்படும். மற்றும் இருதய நோய், மூளைக்காய்ச்சல், சிறு நீரகநோய் போன்றவை ஏற்பட இடமுண்டு. ஆகையினால் உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள்.

அதிக சத்தம் வரும் தொழில்சாலைகளில் வேலை செய்வோருக்கு காதுகள் பாதிப்படையும் நிலை ஏற்படும். இதை தவிர்ப்பதற்கு தொழில்

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# சந்திகளில் இரகசியமாக சிவப்பு நிற ஒளி சைகைகளில் வாகன ஓட்டங்களை படம் பிடிக்கும் கமராக்கள்

## கனடிய தகவல் தொடர் 107

## *Red Light Traffic Camera*

### பத்துக்குறிப்புகள்

1. சந்திகளில் இருந்து இயங்கி கொண்டிருக்கும் இக்கமராக்கள் சிவப்பு நிற சைகை ஒளியில் மட்டும் சந்தியினுள் பிரவேசிக்கும் வாகனங்களை (சந்திகளின் பிரவேச எல்லையில் உள்ள தடித்த வெள்ளை கோட்டினை கடந்து வாகனம்



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

சந்தியினுள் பிரவேசிக்கும் போது) முதல் ஒருமுறை படம் பிடிக்கும். அதேவாகனம் சந்தியின் நடுவே போகும் போது மீண்டும் ஒரு முறை படம் பிடிக்கும். ஆனால் திடீர் என நிறுத்த முடியாத காரணமாக மஞ்சள் நிற சைகை ஒளியில் பிரவேசித்தால் பிரச்சினையில்லை. படம் பிடிக்கப்பட மாட்டாது. ஆனால் இந்நிலையில் பொலீசார் நேரடியாக பிடித்தால் தண்டனை ரிக்கற் வழங்கலாம். பலருக்கு வழங்கியும் உள்ளனர். இதேநேரம் இடது பக்கம் திருப்புவதற்காக சிவப்பு ஒளி சைகையில் சந்தியின் நடுவே நிற்கும் போது சில நேரங்களில் நேரே வாகனங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருந்தால் இந்நிலையில படம் படம் பிடிக்கப்பட்டால் அந்த நிலை இக்குற்ற சாட்டுகளில் உள்ளடக்கப்படமாட்டாது.

2. வாகன உரிமையாளரின் பெயரில் வாகனத்தின் பின் பக்கமாக இலக்க தகடு தெளிவாக தெரிய பிடிக்கப்பட்ட படத்துடன் எந்த இடத்தில் எந்த நேரம் பிடிக்கப்பட்டது என்ற விபரத்துடன் $180 டொலருக்கு தண்டனை ரிக்கற் தபாலில் தேடி வரும். பிடிக்கப்பட்ட படங்கள் யாவற்றினையும் நன்கு பயிற்சி பெற்ற வீதி ஒழுங்கு சட்ட உத்தியோகத்தர்கள் துல்லியமாக பரிசீலனை செய்த பின்பே தண்டனை ரிக்கற்றினை சரியாக உறுதிப்படுத்தி தபாலில் அனுப்பி வைப்பார்கள்.

3. வாகனம் தடித்த வெள்ளை கோட்டினை கடந்து முழுமையாக சந்தியினுள் பிரவேசித்த பின்பே முதல் படம் பிடிக்கப்பட்டு, தொடர்ந்து இரண்டாவது படமும் பிடித்து கொள்ளப்படுவதால் கையும் மெய்யுமாக தப்பு நிகழும்போது இப்படங்கள் பிடிக்கப்படுவதால் இங்கு நிரபராதி என்று சொல்லி தப்பித்து கொள்ள எதுவித வழியும் இருக்கமாட்டாது.

4. வாகனத்தினை அந்த நேரம் ஓட்டியவர் எவர் என்று தெரியாத காரணத்தினால் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு மட்டுமே தண்டனை ரிற்கற் தபாலில் தேடி வரும். ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை (De Merit Points) எதிர் கொள்ள வேண்டி வராது. இதே குற்றத்தினை நேரடியாக சந்தியில் வைத்து பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் பிடித்தால் இதேதண்டனை பணத்துடன் புள்ளி மதிப்பீட்டு இழப்பினையும் அந்த நேரம் வாகனத்தினை செலுத்தியவர் எதிர் கொள்ள வேண்டிவரும்.

5. கனடாவில் பல நகரங்களின் பிரதான சந்திகளில் இக்கமராக்கள் பொருத்தப் பட்டுள்ளது. ரொறொன்ரோ நகரத்தில் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 38 சந்திகளில் பொருத்தப்பட்டு இப்போது மேலும் பல சந்திகளிலும் இதனை பொருத்தி வருகின்றார்கள். ஒரு கமராவினை பொருத்துவதற்கு ஒரு இலட்சம் டொலர் மக்கள் வரி பணத்திலிருந்து ரொறொன்ரோ நகர சபையினர் செலவழிக்கின்றனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

6. இரகசியமாக படம் பிடிக்கும் இக்கமராக்கள் பொருத்தப்பட்ட பின்பு விபத்துகள் குறைந்துள்ளதாக அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டாலும் கமரா பொருத்தப்பட்ட சந்தி இது என்ற அறிவிப்பு பலகையினை சந்தியில் பார்த்ததும் திடுக்கிட்டு பிரேக் பிடிப்பது நீள் தூர பார்வை இல்லாத (Long Distance Observation Attitude) பல சாரதிகளின் சுபாவம் என்பதால், இவ்வாறு பிரேக் பிடிக்கும் வாகனங்களுக்கு பின்னால் வந்து மோதும் ஏனைய வாகனங்களினால் ஏற்படும் விபத்துகள் சுமார் சில வீதத்தினால் அதிகரித்துள்ளது என மார்ச் 18ஆம் திகதி 2008 இல் வெளியான 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் ஒரு ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. இதே அறிக்கைகள் அமெரிக்காவிலும் வெளியிட்டிருந்த இந்த நிலையில் பின்னால் வந்து மோதியவர் எந்த சந்தர்ப்பத்திலும் நிரபராதி என தப்பிக்க முடியாது. ஆனால் பல சந்திகளில் நடந்த விபத்துகளில் நிரபராதி யார்? குற்றவாளி? யார்? என்பதனை இப்படம் பிடிக்கும் கமராக்கள் காட்டி கொடுத்துள்ளன.

7. ஆனால் சையிக்கிள்களில் அல்லது பாதசாரதிகளாக சிவப்பு நிற சைகை ஒளியில் கடந்து படம் பிடிக்கப்பட்டாலும், அவர் களுக்கு எதுவிதமான பிரச்சினையும் இல்லை.

ஆனால் பொலீசார் நேரடியாக பிடித்தால் மட்டும் வீதி ஒழுங்கு சட்டத்தின் ஒரு பிரிவினை தேடி பிடித்து அந்த பிரிவின் கீழ் தண்டனை வழங்கிய சந்தர்ப்பங்கள் பல நடந்துள்ளது.

8. இத்தானியங்கி கமராக்கள் சிவப்பு நிற சைகை ஒளியில் மட்டுமே இயங்கும். பச்சை, மஞ்சள் நிற சைகை ஒளியில் இயங்குவதில்லை.

9. சிவப்பு நிறசைகை ஒளியில் படம் பிடிக்கப்பட்டு தண்டனைக்குரிய குற்றவாளி ஒருவருக்கு அதே இடத்தில், அதே குற்றத்திற்காக பொலீசார் மாற்று தண்டனை (Not Replace by Police) ரிக்கற் எந்த சந்தர்ப்பத்திலும் வழங்கமாட்டார்கள்.

10. கனடாவில் பிரிட்டஷ்கொலம்பியா, அல்பேட்டா மாகாணத்திலும் மேலதிகமாக இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒன்ராரியோ மாகாணத்தில் ரொறொன்ரோ, ஹமில்ரன், ஒட்டாவா, வாட்டலூ, பீல் பிராந்தியம், ஹோல்ரன் பிராந்தியத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதே போல் உலகில் அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், ஜேர்மனி, இஸ்ரேல், நெதர்லாந்து, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, சுவிற்சலாந்து, தாய்வான், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# தைரொயிட்டு சுரப்பி நோய்கள்

**1. தைரொயிட்டுச்சுரப்பி நோய்களை தமிழில் எவ்வாறு அழைப்பார்கள்?**

கண்டமாலை, கழுத்துமாலை, உடம்புருக்கி என்று பலவாறாக அழைப்பார்கள்.

**2. இச்சுரப்பி உடலில் எப்பாகத்தில் அமைந்துள்ளது?**

எமது கழுத்தின் முன்புறம் சுவாசப்பெருவாதனாளியின் முன்பாக குரல் வளைப் பகுதிக்குக் கீழே அமைந்துள்ளது. இதன் வடிவம் வண்ணத்துப்பூச்சி உருவில் அமைந்திருக்கும். தட்டையாக அமைந்திருக்கும் இச்சுரப்பியின் நான்கு மூலைகளிலும் 'பரா தைரொயிட்டுச் சுரப்பிகள்' நான்கு தெறிகள் போன்ற உருவில் காணப்படுகின்றன.

**3. தைரொயிட்டு, பரா தைரொயிட்டுச் சுரப்பிகளின் தொழிற்பாடுகள் என்ன?**

தைரொயிட்டுச் சுரப்பி தைரொக்சின் ($T_4$) மற்றும் மூவயடோ தைரொனின் ($T_3$) ஆகிய ஹோர்மோன்களைச் சுரக்கின்றன. பராதைரொயிட்டுச் சுரப்பி எமது உடலில் உள்ள கல்சியத்தின் சமநிலையைப் பேணும் தொழிலைச் செய்கின்றது.

**4. தைரொக்சினின் தொழிற்பாடு என்ன என்று கூறவில்லையே?**

இங்கு உருவாகும் தைரொக்சின் சுரப்புக்கள் அதாவது ($T_4$) ($T_3$) இரண்டும் குருதி மூலம் உடல் பூராகவும் பரவி எல்லாத் தசைகளையும் சென்றடைகின்றன. எமது உடலானது எப்படி உணவைச் சமிபாடடையச் செய்து அதை உடனடித் தேவைகளுக்குப் பாவிப்பதா அல்லது எதிர்காலத் தேவைகளுக்குச் சேர்த்து வைப்பதா என்பதை பல சிக்கலான பொறி முறைகளூடே ஒழுங்குபடுத்திக் கொண்டுவரக் கூடிய ஹோமோன்கள் தான் இவை இரண்டுமாகும்.

**5. இச் சுரப்பிகள் எப்படி, எவ்வளவு தூரம் தொழிற்பட வேண்டும் என்பதைக் கட்டுப்படுத்துவது யாது?**

மூளையின் அடியில் காணப்படும் கேடயப் போலிச் சுரப்பி T.S.H (Thyroid Stimulation Hormone) என்ற ஹோமோனைச் சுரக்கும். குருதி T.S.H ஐ தைரொயிட்ச் சுரப்பிக்கு இட்டுச் சென்று தைரொக்சினைக் கூடுதலாகச் சுரக்கத் தூண்டும்.

**6. இச்சுரப்புக்களின் பயன் யாது?**

தைரொயிட்டு ஹோமோன் உடலின் ஒவ்வொரு அங்கங்களையும் எவ்வளவு விரைவாகவோ அல்லது மெதுவாகவோ தொழிற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும், பிராணவாயுவின் பாவனையையும், உடலில் உற்பத்தியாகும் வெப்பத்தின் அளவையும் கட்டுப்படுத்துகின்றன.

## நலந்தானா! - 5

**Dr. K. Senthilnathan**
Health Educator
(Certified First Aid and CPR Instructor)

***To learn and receive certificates on First aid and CPR courses. Pl. call 416-502-9252***

**7. எத்தனை நோய்கள் இச்சுரப்பியினால் ஏற்படும்?**

Hyper-Thyroidsm - கூடிய தைரொக்சின் சுரப்பு.
Hypo-Thyroidsm - குறைந்த தைரொக்சின் சுரப்பு

**8. கூடிய தைரொக்சின் சுரப்புநோய் எத்தகையது?**

இதை ஒரு தற்பீடன (Auto Immune) நோய் என்று கூறுவார்கள். இதன் பொழுது அதிக அளவில் தைரொக்சின் ஹோமோன் சுரக்கப்படுகின்றது. இது ஒரு பரம்பரை வியாதி என்று கூறலாம். கூடுதலாகச் சுரப்படும் ஹோமோன் உடலின் தொழிற்பாட்டைக் கூட்டி பல உறுப்புகளையும் தாக்குவதால் நோய் உருவாகிறது.

**9. தைரொக்சின் சுரப்பு கூடியுள்ள நோய் உள்ளவர்களது குணங்குறிகள் என்ன?**

1. கை நடுக்கம்
2. அதி கூடிய இதயத்துடிப்பு
3. களைப்பு
4. நிறைகுறைதல்.
5. வயிற்றோட்டம்
6. மனப்பதட்டம்
7. பார்வையில் கோளாறு - முழிகள் வெளித்தள்ளுதல்.
8. மாதவிடாய் ஒழுங்கீனம்.
9. வெப்பத்தை தாங்கமுடியாமை.
10. மலட்டுத் தன்மை.

**10. தற்பீடன நிலையால் மாத்திரம் இச்சுரப்பின் அளவு கூடுகிறது என்பதை விட வேறு காரணிகளும் உண்டா?**

இச்சுரப்பின் அளவை வேறு காரணிகளும் கூட்டலாம். அதாவது - அதிகளவில் தைரொக்சின் வில்லை உட்கொள்ளுதல்.
தைரொயிட்டுக் கட்டிகள் கூடிய சுரப்பைச் சுரத்தல்.
தைரொயிட்டுச் சுரப்பியை வைரசுக்கிருமிகள் தாக்குதல்.
என்பனவற்றைக் கூறலாம்.

**11. தைரொக்சின் அளவு உடலில் கூடியிருப்பதனால் ஏற்படும் நோய்க்குரிய சிகிச்சை என்ன?**

தைரொயிட்டுச் சுரப்பைக்குறைக்கும் மருந்துகள் கொடுக்கப்படும் இவை ஏற்கனவே சுரக்கப்பட்டு குருதியில் விடப்பட்ட $T_4$,$T_3$ தைரொக்சின் அளவுகளை குறைக்கமாட்டாது. இம்மருந்துகள் தைரொக்சின் சுரக்கும் அளவைக்குறைத்து கட்டுப்பாட்டில் கொண்டுவருகின்றன. இதன் காரணத்தால் முதன் முதலாக மருந்து உட்கொள்ளத் தொடங்கும் பொழுது மருந்தின் பலன் 3 தொட்டு 7 கிழமைகளுக்குப் பின்புதான் தெரியவருகிறது. இக்காலகட்டத்தில் ஏற்கனவே சுரக்கப்பட்டு குருதியில் ஓடும் தைரொக்சின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு சரியான அளவிற்கு வந்துவிடும்.

- Beta Clockers - பீற்றாக் கலவாங்கிகளின் தொழிற்பாட்டை தடை செய்தவன் மூலம் கைநடுக்கம், படபடப்பு, இருதயத்துடிப்பின் வேகம், உடல் வெப்பம் என்பனவற்றைக் கட்டுப்படுத்தலாம்.
- கதிர்வீச்சு அயடீன்
- சத்திரசிகிச்சை - சுரப்பியின் பகுதிகளை அகற்றுதல், சுவாசத்தைத்தடை செய்யும் பெரிய கழலைகளை அகற்றுதல்.

**12. சிகிச்சையின் பொழுது கண்காணிப்பு அவசியமானதா?**

ஆம், மருந்துகளின் தொழிற்படுதிறனை அதன் அளவுகளோடு (Dose) ம், குருதியில் உள்ள ($T_4$, $T_3$, TSH என்பவற்றின் அளவுகளோடு ஒப்புநோக்கி மருந்துகளின் பிரமாணத்தைச் சீர் செய்தல் அவசியம், ($T_4$) ன் அளவு விரைவாகக் குறைந்தாலும், ($T_3$, TSH ன் அளவுகள் குறைவதற்குக் காலம் எடுக்கலாம்.

சாதாரணமாக ஒன்று அல்லது இரண்டு வருடங்களில் வைத்தியர்கள் உங்கள் சிகிச்சையை இடைநிறுத்திய பின்பு 2 அல்லது 3 கிழமைகள் கழித்து உங்களது குருதியில் ($T_4$,$T_3$,TSH) என்பவற்றின் அளவுகளைக் கவனிப்பார்கள். தொடர்ந்து 6 மாதங்களாக இவற்றின் அளவு சாதாரணமாக இருந்தால் நோயின் தீவிரம் குறைந்து விட்டது என்று கூறலாம். TSH இன் அளவு மிகவும் குறைந்தால் நோய் மீண்டும் அரும்பியுள்ளதைக் குறிக்கும். எனினும் நோய் மீண்டும் அரும்பியுள்ளதைக் குறிக்கும். எனினும் 10% மானவருர்களுக்கு மீண்டும் நோயரும்பும் ஆபத்து உண்டு.

**13.மருந்துகளின் பெயர்களைக் கூற முடியுமா?**

1. Methimazole
2. Carbimazole

மருந்துகளின் அளவு கழலைகளின் அளவு, குருதியில் தைரொக்சின் அளவு என்பனவற்றுடன் வேறு பலகாரணிகளிலும் தங்கியிருக்கும். வேறும்பல மருந்துகள் உண்டு. உங்கள் வைத்தியர்களிடம் கலந்தாலோசிக்கலாம்.

## கனடாவின் கதை...

03ஆம் பக்கத்தொடர்ச்சி





மத்திய பள்ளத்தாக்கு குழிவீடு கட்டல், இப்படம் அண்மையில் மீள அமைக்கப்பட்ட குழிவீட்டின் மூன்று படி நிலைகளைக் காட்டுகின்றது. இவ்வாறான வீடுகள் கி.மு 2500 ஆண்டளவில் கட்டப்பட்டன.

வரையறுக்க முடியாதுள்ளது. இது பெரும்பாலும் ஆற்றுப் பள்ளத்தாக்கு களிலேயே காணப்பட்டது. செவ்வாளை மீனும், மான்களும் முக்கிய உணவாக இருந்தன. எனினும் நன்னீர் சிப்பிகளும், ஸ்கங் போன்ற விலங்குகளும் பயன்படுத்தப்பட்டன. தாவர உணவுகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. இப் பிரதேசத்தில் காணப்பட்ட கற்களை பயன்படுத்தி ஆயுதங்கள் செய்யப்பட்டன. அயல் பிரதேசங்களிலிருந்து கலாச்சாரங்க ளோடு தொடர்பு எதுவும் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக கடற்சிப்பிகளில் செய்யப்பட்ட கைவண்ணப் பொருட்கள் அரிதாகவே காணப்பட்டன. இப்பிரதேசத்தில் பெரும்பாலும் சலிஷ் (Salish) மொழி பேசும் மக்களே வாழ்ந்தனர். நிக்கோலா - இயக் - அதபஸ்கன் மொழி பேசுபவர்களும் கூட்டினே (Kootenay) மொழி பேசுபவர்களும் சிறுகுழுக்களாக வாழ்ந்தனர். கூட்டினே பேசுபவர்கள் சலிஷ் மக்களோடு தூரமான மரபுவழித் தொடர்பைக் கொண்டிருந்தனர். வடமேற்கு, வடஅமெரிக்க மொழிகள், வட ஒறிகன் முதல் அலாஸ்கா வரைக்கும் கிழக்கே றொக்கி மலைத்தொடர் அடிவாரங்கள் வரைக்கும் பரவி இருந்தன. இவைக்கும் மத்திய பள்ளத்தாக்கு மொழிகளுக்கும் இடையே ஒரு பொதுவான அடிப்படை காணப்படுகிறது. ஏனெனில் இவை சில பொதுவான இயல்புகளைப் பகிர்ந்து கொள்வது காணப்படுகிறது. மொழி அடிப்படையில் இந்த அமைப்பு வடஅமெரிக்காவில் காணப்படும் ஒரு தனிச் சிறப்பாகும். இக்கலாச்சாரத்தின் விசேட இயல்பு யாதெனில், வேட்டையாடும் நாடோடிகளாக இருந்த மக்கள் ஓரளவுக்கு நிலையான குடியேற்றங்களாக, களஞ்சியத்திலுள்ள செவ்வாளை மீனை குளிர்கால உணவாக நம்பி வாழ்ந்தனர்.

தொடரும்...

ஆதாரம்: History of native people canada

## ஆளுமையும்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

அனுபவங்கள் கவனத்தில் கொள்ளப்படுவது அவசியமாக இருப்பினும் குடும்ப அமைப்பின் தலைமைக்கு இவ்வாறான முன் தெரிவுகள் முன் அனுபவங்கள் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஒரு ஆணும் - பெண்ணும் குடும்பம் என்ற பந்தத்துக்குள் வரும்போது உருவாகும் இந்த அமைப்பு எந்தவிதமான அட்டவணையையோ அல்லது பட்டியலையோ அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்படுவதுமில்லை. நாளாந்த வாழ்வியல் நகர்வின் ஊடாகப் பெறப்படும் அனுபவங்களின் தொகுப்பாகவே குடும்பத்தின் வெளிப்பாடு அமைகின்றது. அத்துடன் குடும்பத்தில் ஆணும் - பெண்ணும் தனித்துவ மானவர்களாகவும் அதேநேரத்தில் சம உரிமையும், சம அந்தஸ்தும் உள்ளவர் களாகவும் இருத்தல் வேண்டும் என்பதற்கும் இரண்டாம் கருத்துக்கு இடமிருத்தலாகாது.

### ஆம் வாசகர்களே!

ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் மட்டுமல்ல சம உரிமையும், சம அந்தஸ்தும் உள்ளவர்கள் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். குடும்பம் ஒரு அமைப்பு என்பதாலும் அந்த அமைப்புக்கு ஒரு தலைமை அவசியம் என்பதாலும் அந்தத்தலைமை தகுதி அடிப்படையில் வழங்கப்படாமல் ஆளுமையின் எதிர்பார்ப்புடன் ஒரு ஆணிடம் எதிர்பார்க்கப்படு வதும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். ஆண்மை என்பது ஆளுமையின் வெளிப்பாடாத லால் ஆளுமையின் அடிப்படைகளான பணிவும் துணிவும் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும். பணிவும் துணிவும் நிறைந்த ஒரு ஆளுமை சிறந்த புரிந்துணர்வுடன் கூடிய குடும்பத்தின் சிறப்பாக அமையும். அதுமட்டுமன்றி குடும்பம் என்பது முடிவில்லாத காலத்துக்கான ஒரு பயிர் என்பதால் ஆதிக்கம் முற்றாக அழிக்கப்பட்டு ஆளுமை முழுமையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். அப்போது தான் குடும்பம் என்பது அதன் அங்கத்தவர்கள் அனைவருக்கும் கிடைக்கப் பெற்றுள்ள வாழ்வியல் வரப்பிரசாதம் என்பது புரியும்.

# ஆளுமையும் ஆதிக்கமும்

## ஓடும் நீர் உறைவதில்லை 86

**KG Master-kgmaster@rogers.com**

மனித வாழ்வில் எமக்குத் தரப்படும் அதி உன்னதமான வாய்ப்பு குடும்ப வாழ்க்கை ஆகும். குடும்பம் என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான புனிதமானதும், தூய்மையானதும் நட்பை அடித்தளமாகக் கொண்டதாகும். இந்த அடித்தளத்தின் உறுதிக்குச் சிறந்த புரிந்துணர்வும் பிரதிபலன் பாராத சேவை மனப்பான்மையும் அவசியமாகின்றன. அதாவது குடும்பம் என்ற அமைப்புக்குள் இணைகின்ற ஒரு ஆணும், பெண்ணும் வெவ்வேறு சூழல்களில் வளர்க்கப்பட்டு அதன் செல்வாக்குகளுக்கு உட்பட்டிருப்பினும் இந்த வேறுபட்ட சூழல்களின் தாக்கங்களுக்கு இடையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்றங்களை உருவாக்கி அவற்றின் இடையில் ஒரு இணக்கப்பாட்டை உருவாக்குவது அவசியமாகின்றது. இந்த மாற்றங்கள் எவையாக இருக்க வேண்டும் என்பதையும் அதன் மூலம் பெறக்கூடிய சிறப்புக்களையும் விளக்குவதே இக்கட்டுரையாகும்.

முதலில் ஒரு குடும்பத்தின் அமைப்பு எப்படியானது என்பதைப் பார்ப்போம். குடும்பத்தின் ஆணிவேராக அமைவது நட்பு. புனிதமான, தூய்மையான, கள்ளம் கபடமற்ற நட்பு. இந்த நட்புக்கு அடிப்படையாக அமைவது இணக்கம். இணக்கத்திற்கு அடிப்படையாக அமைவது புரிந்துணர்வு. புரிந்துணர்வுக்கு அடிப்படையில் அமைவது மற்றவரது எதிர் பார்ப்பை முன்னுணர்தல். இந்த முன்னுணர்தலுக்கு அடிப்படையாக அமைவது பிரதி பலன்பாராத சேவை. இந்தச் சேவைக்கு அடிப்படையாக அமைவது தூய்மையான உள்ளம். தூய்மையான உள்ளத்தின் வெளிப்பாடு அன்பு. அன்பின் அடிப்படை இணக்கம். இணக்கத்தின் அடிப்படை நட்பு. நட்பின் உச்ச வெளிப்பாடு குடும்பம். எனவே ஒரு குடும்பமானது நட்பின் மீது ஆரம்பித்து நட்புடன் நகர்த்தப்படுவது. நட்பு இல்லையேல் குடும்பம் இல்லை.

ஒரு ஆணும் - பெண்ணும், கணவன் - மனைவி என்ற பந்தத்துக்குள் வந்ததும் முற்றுமுழுதான புரிந்துணர்வுடன் குடும்பத்தை ஆரம்பிப்பதில்லை. குடும்பவாழ்க்கை என்ற நகர்வில் எதிர் நோக்கப்படும் பல்வேறுவிதமான ஏற்றத்தாழ்வுகள், மேடுபள்ளங்கள், தவறுகள், (தப்புக்கள் அல்ல) எதிர்பார்ப்புக்களில் ஏற்படும் ஏமாற்றங்கள் எனப்பல விடயங்களுக்கு முகங்கொடுப்பதன் மூலம் பெறப்படும் அனுபவக் கல்வியின் ஆழம் இந்தப் புரிந்துணர்வின் சிறப்பையும் உறுதியையும் நிர்ணயிக்கின்றது. இந்த அனுபவக்கல்வியானது மிகுந்த பொறுமையின் வெளிப்பாடாக அமைகின்றது. குடும்பம் என்ற அமைப்புக்குள் உள்ளவர்கள் வெளிப்புற கவர்ச்சிக்கு அடிமைப்படாமல் சுய சிந்தனையும், தன்னம்பிக்கையும் உள்ளவர்களாக ஒருவர் மற்றவருக்காக என்ற உணர்வுடன் வாழ்வை நகர்த்தும் போது தரப்பட்ட வாய்ப்பின் அதிசிறப்பைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

குடும்பவாழ்க்கைக்கு பழமை, புதுமை என்று விளக்கம் கொடுப்பது அறியாமையாகும். பெரும்பாலானவர்கள் குறிப்பாக இடம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நமது மக்கள் மீது புதிய அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. ஒரு ஆணும் - பெண்ணும் திருமணமாவதற்கு முதல் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கான கால அவகாசமும் சந்தர்ப்பமும் கொடுக்கப்படல் வேண்டும் என எண்ணுகிறார்கள். மேற்கத்தைய கலாச்சாரத்தில் காணப்படும் முன்னறிதல் (Dating) ஒருவரை ஒருவர் திருமணத்துக்கு முன்னரே பாடிக் பழகுவதன் மூலம் ஒரு புரிந்துணர்வு அடிப்படையில் குடும்ப வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு வழிவகுக்கும் எனக் கருதுகிறார்கள். ஒருவரை ஒருவர் திருமணத்திற்கு முன்னர் அறிந்து கொள்வது நல்லது. அதில் தவறு ஏதும் இல்லை. ஆனால் நீண்டகாலத்துக்குத் திருமணம் செய்யாமல் பழகிக் கொண்டிருப்பது அல்லது முற்றுமுழுதாக ஒருவரையொருவர் புரிந்ததன் பிற்பாடுதான் திருமணம் செய்தல் வேண்டும் என்பது நடைமுறையில் சிறந்த பெறுபேற்றைக் கொடுப்பதில்லை என்பதை இவ்வாறு திருமணம் புரிந்தவர்களது விவாகரத்து எண்ணிக்கையின் அளவும் அதிகரிப்பும் சிறப்பாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. அதேநேரத்தில் குடும்பம் ஒன்றை ஆரம்பித்த பின்னர் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது நீண்டகால நிலையான ஒருமித்த வாழ்க்கைக்கு வழிவகுக்கின்றது என்பதும் நூற்றுக்கு நூறு விழுக்காடு பொருத்தமானதல்ல. எனவே புரிந்துணர்வு என்பது திருமணத்திற்கு முன் அல்லது பின் என்றில்லாமல் நாளாந்த வாழ்வியல் நகர்வின் ஒரு அம்சமாக அமைதல் வேண்டும்.

நாம் வாழ்கின்ற நாடுகளில் குறிப்பாக மேற்குலகில் குடும்ப அமைப்பின் உண்மையான அடித்தளம் பற்றிய தவறான கணிப்பீடுகள் எம்மத்தியில் முன்வைக்கப்படுகின்றன. கணவன் - மனைவி - குழந்தைகள் என்ற அமைப்பில் நமது கலாச்சார முறையில் இருந்து ஏறத்தாழ முற்றிலும் முரண்பட்ட வாழ்வியல் முறை இருப்பதாகப் பலர் கூறுகிறார்கள். ஒரு நாட்டின் உண்மையான கலாச்சாரப் பண்பாட்டு வெளிப்பாடுகள் அந்த நாட்டின் கிராமச் சூழல்களால் மட்டுமே வெளிப்படுத்தப்படுகின்றன என்ற உண்மையில் பலர் அறிந்து கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். ஒரு நகரத்தில் அதிலும் பல சமூகங்கள், பல கலாச்சாரங்கள் இணைந்திருக்கும். நகரங்களில் வாழ்ந்து கொண்டு அங்கு இடம்பெறும் நகர, வியாபார, வாழ்வியல் முறையை அடிப்படையாக வைத்து அதுவே அந்த நாட்டின் கலாச்சாரம் என்ற கருத்து முற்றிலும் தவறானதாகும். அடிப்படையில் கிராமப்புற வாழ்க்கையின் பிரதிபலிப்பே அந்த நாட்டின் கலை, கலாச்சார, பண்பாட்டின் பிரதிபலிப்புக்களாக அமைகின்றன.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டின் கிராமப்புறங்களில் வாழும் அந்த நாட்டு மக்களது வாழ்க்கை முறையை உற்றுநோக்கும் போது நாமே ஆச்சரியப்படக்கூடிய அளவுக்கு நமது குடும்ப அமைப்பு முறைகளும், கணவன் - மனைவி - குழந்தைகளுக்கிடையிலான வாழ்காலப் பந்தமும், இறுக்கமும், ஒத்துழைப்பும், உணர்வு ரீதியான இணைப்பும் இருப்பதைக் காணாலாம். அதாவது ஒரு ஆசிய நாட்டில் காணப்படும் குடும்ப இணைப்பும் உணர்வும் எந்த அளவிலும் குறைவாக இருப்பதில்லை. அது மட்டுமன்றி இங்கே நகரவாசிகளிடம் காணப்படும் குழப்பங்களும் இருப்பதில்லை. மரபு ரீதியாகச் சிறந்தமுறை என பின்பற்றப்பட்டுவரும் வாழ்வியல் வழிமுறைகளும் பழமை, புதுமை என்றில்லாமல் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதுமட்டுமன்றி உறுதியான அடிப்படைகளைப் பின்பற்றிய குடும்பங்கள் நகரவாழ்க்கைக்கு உட்பட்டாலும் தமது அடிப்படை விழுமியங்கள் மாறாத நிலையில் மிகச் சிறந்த முறையில் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருப்பதை நாம் மறந்து விடலாகாது.

ஒரு குடும்பமானது ஒரு வியாபார அமைப்பில் இருந்தோ, ஒரு அரசியல் அமைப்பில் இருந்தோ அல்லது சமூக அமைப்பில் இருந்தோ வேறுபட்டதல்ல. எந்த ஒரு அமைப்புக்கும் அடிப்படையில் தேவைப்படுவது ஒரு தலைமையாகும். ஒரு தலை இல்லாமல் ஒரு அமைப்பானது உருவாக்கப்பட முடியாது. அந்தத் தலைமையும் தெளிவாக இனங்காணப்பட வேண்டியது மிக அவசியமாகும். ஒரு அமைப்பின் செயற்பாடு, அதன் குறிக்கோளில் ஏற்படும் வெற்றி என்பன தலைமையின் நகர்வின் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது. எனவே தலைமையில்லாமல் அமைப்பு இருக்கமுடியாது என்பதும் அந்தத் தலைமை ஒருமையில் இருக்க வேண்டும் என்பதும் ஒரு மாறாத விதியாகும். எனவே தலைமை தவிர்க்கப்பட முடியாதது என்பது நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிதாகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதைப் போல் ஒரு குடும்பம் என்பது ஒரு அமைப்பு என்பதும் அதற்கு குறுகிய, நீண்டகாலக் குறிக்கோள்கள் இருப்பதும், ஒட்டுமொத்தமாக குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும் உழைக்க வேண்டும் என்பதும் அதன் அடிப்படைகளாக அமைகின்றன. அதேநேரத்தில் அக்குடும்பத்தின் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பவற்றை குறிக்கோளுக்கு ஏற்ப நெறிப்படுத்துவதற்கு ஒரு தலைமை அவசியம் என்பதும் தவிர்க்க முடியாததே.

ஒரு குடும்ப அமைப்பு கணவன், மனைவி, குழந்தைகள் என அமைந்திருப்பின் அக்குடும்பத்தின் தலைமை என்பது கணவனுக்குரியதே. அதாவது கணவன் - குழந்தைகளின் தந்தையே தலைமைத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாறான குடும்ப அமைப்பில் இந்தத் தலைமை பற்றிய கேள்விக்கு இடமிருத்தலாகாது. இவ்வாறு குறிப்பிடும் போது பலர் இது ஆணாதிக்கத்தை வலியுறுத்தும் கருத்து எதுவும் பெண்ணடிமைக்கு வழிவகுப்பதாகவும் கூறுவது வியப்புகுரியதே. ஏனெனில் ஒரு குடும்பத்தின் தலைமை ஆணிடம் இருக்க வேண்டும் என்பது ஒரு கசப்பான உண்மையாகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தத் தலைமையில் உண்மையான இயல்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் பல ஆண்கள் தவறிழைப்பதால் தலைமை பற்றிய குழப்பங்கள் உருவாகிவிடுகின்றன. இதனால் ஆளுமைக்கும் ஆதிக்கத்துக்கும் இடையில் இவர்கள் தடுமாற்றத்துக்குள்ளாகி விடுகிறார்கள்.

ஒரு தலைமையில் ஆளுமை என்பது அந்தத் தலைமையானது தனதும் தன்னைச் சார்ந்தவர்களதும் உயர்ந்த குறிக்கோளை அடைவதற்கு அனைவரையும் ஒருங்கிணைத்துச் சிறந்த நெறிப்படுத்தல் மூலம் நகர்வதாகும். இதற்கு அந்தத் தலைமைக்கு அடிப்படையில் தேவைப்படுவது பணிவும் துணிவுமாகும். அங்கத்தவர்களது கருத்துக்கு மதிப்பளிப்பதுடன் புரிந்துணர்வுடன் கூடிய அணுகுமுறைக்குப் பணிவும் குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்கு முயற்சிக்கும் போது ஏற்படும் சோதனைகள், வேதனைகள், இடர்பாடுகள், ஏளனங்கள் போன்றவற்றைத் தாண்டிச் செல்வதற்கான துணிவும் தலைமைக்கு அடிப்படைகளாகின்றன. ஒரு குடும்பத்தில் பணிவும், துணிவும் கொண்ட தலைமையே அக்குடும்பத்தின் அங்கத்தவர்களான குழந்தைக்கு ஒரு முன்மாதிரியாக அமையமுடியும்.

மாபுறத்தில் ஆதிக்கம் என்பது அடக்கு முறையே. தனது சொந்தக் கருத்துக்களையும் எண்ணங்களையும், மற்றவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல், சொந்த நலனை மட்டுமே முன்னிலைப்படுத்திச் செயற்படுத்துவது ஆதிக்கத்தின் வெளிப்பாடாகும். உண்மையில் இது தாழ்வு மனப்பான்மையின் உச்சக்கட்ட வெளிப்பாடே. எந்த ஒரு அமைப்பு முறையிலும் அது குடும்பமாக இருந்தாலும் சரி, வேறு அமைப்புக்களாக இருந்தாலும் சரி ஆதிக்கத்தை கொண்ட தலைமை தற்காலமானதாகவும், காலப்போக்கில் முற்றாகப் புறக்கணிக்கப்படுவதாகவும் அமைவதும் தவிர்க்க முடியாததே.

ஒரு அமைப்பின் தலைமையைத் தெரிவு செய்யும்போது அதற்கான தகைமைகள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3223 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3223

On TV

Saturdays at 10:30 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219



# காற்று

காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா! என்பதிலிருந்து உணவிலும் பார்க்க காற்றே உயிருக்கு உறுதுணையானது என்பதை உணரலாம். உணவில்லாமல் சிலநாட்கள் உயிர்வாழக்கூடும். ஆனால் காற்று இல்லாமல் ஒரு கணமேனும் உயிர்வாழ்தல் அரிது. மூச்சு நின்று விட்டால் பேச்சு வராது. போனது உயிராகி உடலை சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டியேற்படும். ஐம்பூதங்களில் ஒன்றான காற்று கண்ணால் காண முடியாது. உடம்பில் படும் போதும், மரத்தின் இலைகள் ஆடும் போதும், செடி கொடிகள் அசையும் போதும், கடலில் அலை எழும்பும் போதும் காற்று வீசுகின்றது என்பதை உணர்கின்றோம்.



சூரிய ஒளி பூமியைத் தாக்கும் போது சில பகுதிகள் வெப்பமடைகின்றன. வெப்பமடைந்த பகுதியிலுள்ள காற்று உஷ்ணமடைந்து மேலே செல்ல அந்த இடத்தை நிரப்ப குளிர்காற்று விரைகின்றது. இதனாலேதான் காற்று ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்தை நோக்கி வீசுகின்றது.

பகல் நேரத்தில் தரைப்பகுதி வெப்பமாகி அதன் மேலுள்ள காற்று மேல் நோக்கி எழும். அப்பொழுது குளிர்ந்த காற்று கடலில் இருந்து தரையை நோக்கி வீசும். இது கடல்காற்று எனப்படும். இது பகலில் வீசும். இதேபோன்று சூரியன் மறைந்த பின்பு பூமி குளிர்ந்து விடுகின்றது. ஆறுதலாக வெப்பமடையும் கடலின் மேலுள்ள காற்று மேலே செல்ல அந்த வெற்றிடத்தை நிரப்ப தரையிலிருந்து கடலை நோக்கி காற்று வீசும். இது தரைக் காற்று எனப்படும். இது இரவு நேரத்தில் வீசும்.

எந்தப் பரப்பின் மீது காற்று காணப்படுகின்றதோ அந்தப் பரப்பின் தன்மையை அது பெற்றுவிடுகின்றது. பாலை வனத்தில் வீசும் காற்று வெப்பமாகவும் உலர்ந்த நிலையிலும் காணப்படும். உயர்ந்த மலைப்பகுதிகளிலும் பனிபடர்ந்த பகுதிகளிலும் வீசும் காற்று குளிர்ச்சி பொருந்தியதாக இருக்கும். கடற்பரப்பின் மேலுள்ள காற்று அதிக அளவு நீராவியைக் கொண்டிருக்கும். இதனை மழைக்காற்று என்பர்.

பூமி எப்போதும் சுழன்று கொண்டேயிருக்கின்றது. தனது சுழற்சியோடு காற்றையும் இழுத்துச் செல்கின்றது. துருவங்களின் அயலில் உள்ள காற்று துருவங்கள் சுழலும் வேகத்தில் வீசுகின்றது. பூமத்திய ரேகைப் பகுதியில் வீசும் காற்று பரந்து வீசுகின்றது. துருவங்களில் வீசும் காற்று வடகிழக்காகவும், தென்கிழக்காகவும் வீசும். இந்தக் காற்றுகள் பசுபிக் சமுத்திரத்திலும் அந்திலாந்திக் சமுத்திரத்திலும் மிக வேகமாக வீசும். ஏனெனில் அவற்றின் பாதையை மாற்றுவதற்கு நிலத்திணிவுகள் இல்லாததே காரணமாகும்.

காற்று எந்தத் திசையிலிருந்து வீசுகின்றது என்பதை காற்றின் திசைகாட்டும் கருவி மூலம் அறிந்து கொள்ளலாம். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசும். அத்துடன் மேலிருந்தும், கீழிலிருந்தும் வீசும். வாடைக்காற்று, சோழகக்காற்று, பருவக்காற்று, வெப்பக்காற்று, குளிர்காற்று, வர்த்தகக் காற்று, புயல்காற்று, சூறாவளி, தென்றல்காற்று, உப்புக்காற்று என காற்றை வகைப்படுத்தலாம். பாய்மரக்கப்பல்களை செலுத்த காற்று உதவியதால் வர்த்தக காற்று என்ற பெயர் ஏற்பட்டது. வீசுகின்ற காற்று எந்தக்காற்றாக இருந்தாலும் அது மாற்றங்களை ஏற்படுத்தவே செய்யும். பருவ காலங்களில் வீசும் காற்றுக்களும் உண்டு. குறிப்பிட்ட பருவங்களை அவை உணர்த்துகின்றன. பவனத்தில் அமுக்கக் குழிவு ஏற்படும் போது நாலாபக்கங்களிலும் இருந்து காற்று அதனை நோக்கி வீசும். சுழன்று சுழன்று வீசுவதால் அது சுழல் காற்று எனப்படும். ஹரிக்கேன், ரோணாடோ என்று புயல் காற்றிக்கு இடத்துக்கு இடம் பெயர் உள்ளது. ஹரிக்கேன் லாந்தர் எனப்பெயர் வரக்காரணம் அப்பெயருடைய காற்று வீசினாலும் அவ்விளக்கு அணையாது என்பதே யாம். புயல்காற்று பேரழிவை உண்டு பண்ணக் கூடியது. அமைதியாக வீசும் காற்று தென்றல் காற்று. இது வசந்தம் எனவும் அழைக்கப்படுகின்றது. அதி வேகத்துடன் வீசும் காற்று புயல்காற்று. பூனையாய் இருப்பவர் புலியாய் மாறுவதைப் போன்று தென்றலாய் வருடுவது அமைதியை குலைக்கும் புயலாக மாறிவிடுவதும் இயற்கை. இயற்கையின் சீற்றங்களில் புயல் காற்றும் ஒன்று. அரசியல் தலைவர்கள் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்வதும் உண்டு. சில வேளைகளில் வேகமாக வீசும் காற்று ஆட்களையும் தூக்கிக் கொண்டு போய்விடும். பாலைவனங்களில் மணல்வாரி இறைக்கும்.

காற்றினை தூதாக அனுப்பியதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பது சந்தர்ப்பத்தை நழுவவிடாதே என்பதை உணர்த்துகின்றது. உயிருக்கு ஆதாரமாக விருக்கும் காற்று பெரிய அழிவையும் உண்டு பண்ணி விடுகின்றது. காற்றே பூங்காற்றே என்று சிந்து பாடும் அதேநேரம் காற்றே உன் ஆக்ரோசத்தை காட்டிவிடாதே என்று வேண்டுதல் செய்யவும் வேண்டியுள்ளது. கடற்கரையோரத்தில் வசிக்கும் மீனவர்கள் உப்புக் காற்றோடு உறவாடுவதால் உடல் உறுதி மிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள். அசையாது நிலையாக இருக்கும் போது பவனம் எனவும் அசையும் போது காற்று எனவும் பெயர் பெறுகின்றது. வாயு என்பது மற்றொரு பெயர். வாயு புத்திரன் அநுமன். அதுவே அவனது வீரத்திற்கும், வேகத்திற்கும் காரணம்.

இயற்கையில் இறைவனைக்கண்டு இன்புற்ற தமிழ் மக்கள் காற்றிற்கு ஒரு தலம் அமைத்து வழிபாடு ஆற்றியதில் வியப்பில்லையன்றோ! பஞ்ச பூத தலங்களில் வாயுத்தலம் திருக்காளத்தி. சிலந்தி, பாம்பு, யானை மூன்றும் வழிபட்டதலம். கண்ணப்பர் கண்ணை இறைவனுக்கு அப்பிய தலம் இது. காற்றுத் தீப்புனலாகி நின்றான் என்று அப்பர் அடிகள் இறைவனை கூறியுள்ளதால் காற்றும் கைதொழுது ஏற்றப்பட வேண்டும் என்பது தெளிவு. காற்று புகாத இடமே இல்லை எனலாம். விசா இல்லாமல் உலகை வலம்வருவது அது.



**நா. க. சிவராமலிங்கம்**

**YOGA - MEDITATION CLASSLESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

தொடர்புகளுக்கு: *Scarborough - Markham* - செல்வ சோதி - *416.289.2033*




# ஆஸ்தி...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

வாங்குபவர்களிற்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், செப்ரெம்பர் 2008 இல் ஏற்பட்ட மந்த நிலை மார்ச் 2009 வரை தொடர்ந்தது. மிகவும் மந்த நிலையில் காணப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் பலர் தமது வீட்டு முகவர் லைசென்ஸ் (License) ஐ



கைவிட்டார்கள். அத்துடன் பல ஆஸ்தி முகவர் நிலையங்களும் வியாபாரக் கதவை மூடிக்கொண்டன. வியாபாரத்தின் மந்த நிலையே காரணமானது.

அரசாங்கத்தின் பங்களிப்பை, ஆஸ்தி சந்தை ஏப்ரல் 2009 இலிருந்து மீண்டும் உற்சாக நிலையை அடைந்தது. கடந்த வருடத்தில் பொருளாதார எதிர்வு கூறுபவர்களின் கணிப்பீட்டின் படி 2009ஆம் ஆண்டு 12 வருடங்களிற்கு பிற்பாடு முதல் தடவையாக விலையிலும் இறக்கம் ஏற்படும் எனக் கூறப்பட்டது. இதற்கு ஏற்றாற்போல ஆரம்ப மாதங்கள் அவ்வாறே இருந்தன. ஆனால் கடந்த 4 மாதங்களில் இதன் நிலைமை முற்றிலும் தலைகீழாக மாறிவிட்டது. இந்நிலைமை தொடருமாயின் (?) இந்த வருடமும் விலை அதிகரிப்பு வருடமாகவே காணப்படலாம். இருந்தும் எதிர்வரும் மாதங்களைப் பொறுத்தே நிலைமை தெரியும். பொருளாதார நிலையில் அதிகமாற்றம் ஏற்படக் கூடாதென்பதற்காக கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் மார்க் காணி அடுத்த வருட இளவேனிற்காலம் வரை வங்கியின் வட்டி வீதத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கான (?) நோக்கம் இல்லை எனக் கூறியுள்ளார்.

எது எப்படி இருப்பினும், தொழில் இழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனை நிறுத்த முடியாமல்தான் உள்ளது. இதன் பாதிப்பு ஆஸ்தி வியாபாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா அல்லது புதிதாக கனடாவிற்கு குறிப்பாக ரொறொன்ரோவிற்கு குடி புகுபவர்களினால் சரி செய்யப்படுமா? மேலும் பல தகவல்களை எதிர்காலத்தில் பார்ப்போம். எது எப்படியாயினும் இன்றைய நிலைமையில் வீடு விற்பவர்களின் நிலைமை குதூகலமாகத்தான் உள்ளது. எவ்வளவு காலம் தொடரும்?

# "கதையை கேட்காமலேயே என் உருவத்தைப் பார்த்து புறக்கணித்தாங்க"

## நேர்காணல்: 'பசங்க' பாண்டிராஜ்

'தமிழில் இவ்வளவு அற்புதமான ஒரு குழந்தைகள் படம் இதுவரை வந்ததில்லை' என்று சிற்றிதழ்கள் தொடங்கி வெகுஜன ஊடகங்கள் வரை புகழப்பட்ட படம் 'பசங்க.' அந்த வெற்றிச்சுவடு இன்னும் மீதமிருக்கையிலேயே அடுத்த படத்துக்கான வேலைகளில் இறங்கியிருக்கிறார் 'பசங்க' படத்தின் இயக்குநர் பாண்டிராஜ். 'விளம்பரம்' இதழுக்காக மனம் திறந்து பேசினார்.

கேள்வி: தமிழில் படம் எடுப்பதென்றால், அதுவும் புது இயக்குநர்கள் என்றால் நிச்சயம் வியாபார ரீதியில் வெற்றி பெறும் படமாக எடுக்கவேண்டும் என்றுதான் முடிவு செய்வார்கள். நீங்கள் குழந்தைகள் படம் எடுத்திருக்கிறீர்கள். படம் இப்பொழுது வெற்றிதான் என்றாலும், ஆரம்பத்தில் வியாபார ரீதியாக இது போகும் என்ற உறுதி இருந்திருக்காது. என்ன திட்டத்துடன் இறங்கினீர்கள்?

பாண்டிராஜ்: நான் திட்டமிடல் எதுவும் செய்யவில்லை. அதுவா அமைஞ்சுது. அப்படித்தான் சொல்லணும். எல்லா இயக்குநர்களுக்குமே முதல் படத்துல அவங்களை நிரூபிச்சாகணுங்கற கட்டாயம் இருக்கு. 'பசங்க' என்னோட முதல் கதை கிடையாது. 'ஆசான்', 'ஆறுவது சினம்'னு ரெண்டு படங்களுக்கான கதையைத் தயார் செஞ்சு வச்சிருந்தேன். அதுல 'ஆசான்' ஐம்பது வருஷ காலத்தையும் வாழ்க்கையையும் சூழலையும் உள்ளடக்கின படம், 'ஆறுவது சினம்' படத்துக்கு ரொம்ப பிரபலமான ஒரு கதாநாயகன் தேவைப்பட்டார். இந்த இரண்டும் அமையாததால் 'பசங்க' செய்தேன். 'ஆசான்' திரைக்கதைல வர்ற ஒரு சின்னப் பகுதிதான் 'பசங்க.'

**- பாலு சத்யா -**

எனக்கு புதுக்கோட்டைக்குப் பக்கத்துல விராச்சிலைதான் சொந்த ஊர். அங்க இருக்குற ஒரு ஸ்கூல்லதான் நான் படிச்சேன். அதைத் தாண்டிப் போறப்போல்லாம் எனக்கு என்னோட பால்ய காலம் நினைவுக்கு வரும். ஒரு தடவை அப்படிப் போறப்போ குழந்தைகளை வச்சே ஒரு படம் பண்ணினா என்னன்னு தோணிச்சு. அதுலயும் பத்து வயசுப் பையன்தான் கதாநாயகன். பத்து வயசுப் பையன்தான் வில்லன். இப்பிடி இருந்தா எப்பிடி இருக்கும்னு யோசிச்தேன். அதுக்கப்புறம் கதை பண்ண ஆரம்பிச்சேன். கதையை முழுசா யோசிச்சு, எழுதி முடிச்சதும் ஒரு நம்பிக்கை வந்துடுச்சு. கதைல ஆரம்பத்துலிருந்து கடைசிவரைக்கும் ஒரு துள்ளலும் நகைச்சுவையும் இருந்துச்சு. செஞ்சுடலாம்னு தீர்மானமா அப்போதான் முடிவு பண்ணினேன்.

கேள்வி: உங்களைப் போன்ற ஓர் அறிமுக இயக்குநருக்கு இந்த மாதிரியான குழந்தைகள் படம் கத்திமேல் நடப்பது போன்றது, இல்லையா?

பாண்டிராஜ்: குழந்தைகள் படம் எடுக்கறது இங்க தமிழ்ச் சூழல்ல ரொம்ப ரிஸ்கான சமாசாரம்தான். வியாபாரம் ஒரு பக்கம். குழந்தைகளை தப்பா படத்துல காமிச்சுட்டா ஊடகங்கள்ல இருந்து ஆளாளுக்குக் கிழிச்சு எறிஞ்சுடுவாங்க என்னும் பயம் இன்னொரு பக்கம்.

முழுக்க முழுக்கக் குழந்தைகள் உலகத்தைச் சொல்ற கதை என்பதால் குழந்தைகளோடயே வாழ ஆரம்பிச்சேன். அந்தப் படத்தை யோசிச்சதுலருந்து குழந்தைகள்தான் என்னோட உலகமா இருந்தாங்க. 'பசங்க' கதையை முதல் முதல்ல குழந்தைகள்ட்டதான் சொன்னேன். ஒரு பதினைஞ்சு குழந்தைங்களை ஒண்ணு சேத்தேன். முதல் பகுதிக் கதையை கிட்டத்தட்ட ஒண்ணரை மணி நேரம் சொன்னேன். எல்லாரும் ரொம்ப ஒன்றிப் போய் கேட்டாங்க. அதுக்கப்புறம் ரெண்டாவது பகுதியை ஒரு மணி நேரம் சொன்னேன். எல்லாருமே ரொம்ப நல்லா இருக்குன்னு சொன்னாங்க. அவங்களே நல்லா இருக்குன்னு சொன்னதுக்கப்புறம் நான் கொஞ்சம்கூடத் தயங்கல.

கேள்வி: உங்களுடைய சினிமா அனுபவம் எப்படி? யார் யாரிடம் வேலை பார்த்தீர்கள்?

பாண்டிராஜ்: நான் ப்ளஸ் டூ முடிச்சிருந்தேன். பட்டப்படிப்புப் படிக்கணும்னு ஆசைப்பட்டேன். ஆனா, குடும்பச் சூழ்நிலை அதுக்கு இடம் கொடுக்கல. ஊர்ல இருந்தப்பவே சினிமா ஆசை வந்துடுச்சு. சென்னைல எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு நண்பன்தான் இருந்தான். பேரு வெள்ளைச்சாமி. நேரா அவன்கிட்ட வந்தேன். அவன் மூலமா ஏ.வி.எம்.ல செக்யூரிட்டி வேலை கிடைச்சுது. அங்க இருந்தா சினிமாக்காரங்க நாலு பேரைப் பாக்கலாம்னு தோணிச்சு. அங்கதான் பாக்யராஜ் சார் எனக்கு அறிமுகமானார். 'பாக்யா' பத்திரிகைல ஆபீஸ் பாயா வேலைக்குச் சேர்ந்தேன். அங்க என்னோட எழுத்தார்வத்தைப் பாத்துட்டு பாக்யராஜ் சார் என்னை ஆசிரியர் குழுவுல போட்டார். கதைகளைப் படிச்சு பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கறது, கடிதங்களுக்கு பதில் போடுறதுன்னு வேலை பாத்தேன். அதுக்கப்புறம் இயக்குநர் சேரன்கிட்ட உதவி இயக்குநரா வேலை கிடைச்சுது. அவர்கிட்ட 'வெற்றிக்கொடி கட்டு', 'பாண்டவர் பூமி', 'ஆட்டோகிரா·ப்'னு மூணு படத்துல வேலை பார்த்தேன். அதுக்கப்புறம் தங்கர்பச்சான் சார்கிட்ட 'சொல்ல மறந்த கதை', 'தென்றல்', 'சிதம்பரத்தில் அப்பா சாமி'ன்னு மூணு படத்துல வேலை பார்த்தேன். 'சிதம்பரத்தில் ஒரு அப்பா சாமி'ல நான் இணை இயக்குநர். அப்புறம் இயக்குநர் சிம்புதேவனோட 'இம்சை அரசன் 21-ம் புலிகேசி'ல இணை இயக்குநரா வேலை பார்த்தேன்.

கேள்வி: இயக்குநர் வாழ்க்கை என்றாலே வலி, வேதனை, இழப்பு, அவமானம் எல்லாம் இருக்கும், இல்லையா? உங்கள் அனுபவம் எப்படி?

பாண்டிராஜ்: உதவி இயக்குநரா இருக்கற ஒருத்தருக்கு முப்பது வயசுல, குறைந்த பட்சம் மூவாயிரம் ரூபாகூட சம்பளமா கிடைக்காது. இது தமிழ் சினிமா உலகத்துல நடக்கற ஒரு பரிதாபம். ஒவ்வொரு நாளும் ஊருக்குத் திரும்பிப் போயிடலாமான்னு இருக்கும். திடீர்னு ஒரு நூறு ரூபா கிடைக்கும். பரவால்ல, ஒரு மூணு நாளை ஓட்டிடலாம்னு நம்பிக்கை வந்துடும். பொதுவா சினிமா பட்ஜெட்ல கை வைக்கணும்னா, முதல்ல உதவி இயக்குநர் சம்பளத்துலதான் கை வைப்பாங்க. நான் உதவி இயக்குநரா இருந்தப்போ ஏற்பட்ட இழப்பு கொஞ்சம் நஞ்சமில்ல. என் அம்மா இறந்து போனாங்க. நான் காதலிச்ச ஒரு பொண்ணு, 'சினிமாவை விட்டுட்டு வா! கல்யாணம் பண்ணிக்கறேன்'னு சொன்னா. நான் மறுத்துட்டேன். அவ விலகிப் போயிட்டா.

நான் பட்ட அவமானமும் கொஞ்ச நஞ்சமில்லை. தயாரிப்பாளர் கதை கேக்க வரச் சொல்வார். கதை சொல்லிக்கிட்டு இருக்கும்போதே தூங்கிடுவார். கதையைக் கேட்டுட்டு ரெண்டு நாள்ல முடிவு சொல்றேம்பாங்க. கடைசி வரைக்கும் சொல்ல மாட்டாங்க. தன்மானத்தை எல்லாம் இழக்கவேண்டி வந்துச்சு. இத்தனை வருஷம் கஷ்டப்பட்டதுக்கு ஒரு பெட்டிக்கடை வச்சிருந்தாக்கூட, அது மளிகைக் கடையா வளந்திருக்கும். திரைத்துறை போராடினதுக்கு பதிலா, வேற துறைல போராடியிருந்தா நிச்சயம் பெரிய ஆளா, நிறைய சம்பாதிச்சிருப்பேன்.



சினிமாவுல இருக்குறவங்களே இன்னொரு சினிமாக்காரனுக்கு மரியாதை குடுக்க மாட்டேங்கறாங்க. கதை கேட்டுட்டு நல்லாயிருக்கு, நல்லா இல்லைன்னு சொல்ல எவ்வளவு நேரமாகும்? தேவையில்லாம அலைய விடுறாங்க. அதுதான் வருத்தமாயிருக்கு. 'பசங்க' படம் வெளியானதுக்கப்புறம் ரஜினி சார், ஷங்கர் சார் எல்லாரும் கூப்பிட்டுப் பாராட்டினாங்க. இது ஒரு பக்கம் சந்தோஷமா இருந்தாலும், இன்னொரு பக்கம் மனசுக்கு வேதனை தர்ற சம்பவங்களும் நடக்கத்தான் செஞ்சுது. அவர் ஒரு தயாரிப்பாளர், இயக்குநரும் கூட. என் கதையை கேட்டுட்டு 'இதைப் படம் பண்ண முடியாது'ன்னு சொன்னவர். படம் வெளியானதுக்கு அப்புறம் அவர் செஞ்ச முதல் காரியம் என்ன தெரியுமா? ஒவ்வொரு ஏரியா விநியோகஸ்தரையும் கூப்பிட்டு, 'படம் எப்பிடிப் போகுது?'ன்னு விசாரிச்சிருக்கார். அப்புறம் 'பசங்க' படத்தைப் பத்தி நல்லபடியா விமர்சனம் எழுதின பத்திரிகைக்காரங்ககிட்ட 'ரொம்ப அதிகமா தூக்கி வைக்கிறீங்களே!'ன்னு கோபப்பட்டிருக்கார். அவர்கிட்ட ஒருத்தர் கேட்டிருக்கார்: 'ஏன் சார் இந்தப் படத்தைப் போய் வேணாம்னு சொன்னீங்க?'ன்னு. அதுக்கு அவர் சொல்லியிருக்கார். 'கதை எனக்குப் பிடிச்சிருந்துச்சு. ஆனா, அந்த பாண்டிராஜோட உருவத்தைப் பார்த்து எனக்கு நம்பிக்கை வரலை.' இவர் இப்படின்னா இன்னொரு தயாரிப்பாளர் வேற மாதிரி. படம் வெற்றின்னவுடனே, எங்க யூனிட்ல வேலை பார்த்த எல்லாருக்கும் ஒரு பாராட்டுக் கடிதமும் பூங்கொத்தும் குடுத்து விட்டார். எனக்கு மட்டும் எதுவும் அனுப்பலை.

கேள்வி: எப்படி இயக்குநர் சசிகுமாரிடம் அறிமுகமானீர்கள்?

பாண்டிராஜ்: 'பசங்க' கதையை முதல்ல மோசர் பியர் கம்பெனிலதான் படமா எடுக்கறதா இருந்தாங்க. என்ன காரணமோ திடீர்னு பயந்துட்டாங்க. கிட்டத்தட்ட பன்னிரெண்டு தயாரிப்பு நிறுவனங்கள்ல ஏறி, இறங்கிட்டேன். எதுலயும் நல்ல பதில் கிடைக்கல. இனிமே இதை நம்பி பிரயோசனமில்லன்னு, நான் வேற ஒரு கதை பண்றதுக்கான முயற்சிகள்ல இறங்கினேன். அப்போதான் ஒளிப்பதிவாளர் கதிரும், வாசுன்னு ஒரு நண்பரும் அறிமுகமானாங்க. அவங்ககிட்ட யதார்த்தமா 'பசங்க' கதையைச் சொன்னேன். அவங்க சசிகுமார் சார்கிட்ட என்னைக் கூட்டிட்டுப் போனாங்க. அவருக்குக் கதை ரொம்பப் பிடிச்சிருந்துது. அது 'சுப்ரமணியபுரம்' வெளியாகற நேரம். ஒரு மூணு மாசம் பொறுக்க முடியுமான்னு கேட்டார். நான் சரின்னேன். அவரோட 'சுப்ரமணியபுரம்' வெளியாகி நூறு நாளைத் தாண்டினதும் என்னோட பட வேலையை ஆரம்பிச்சோம்.

கேள்வி: பசங்க படத்தின் மொத்த செலவு எவ்வளவு?

பாண்டிராஜ்: மூணே கால் கோடி.

தொடர்ச்சி 23ஆம் பக்கம்



# திரை விமர்சனம் - வண்ணத்துப்பூச்சி



பொருளீட்டுவதும், அதை பாதுகாப்பாக சேமிப்பதும், பாதுகாப்பான எதிர்கால வாழ்க்கைக்கு திட்டமிடுவதும் என்று... இவை மட்டுமே வாழ்க்கை என வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால பெற்றோர்களுக்கு, 'பொருளாதாரம்' மட்டுமே வாழ்வின் அடிப்படையல்ல என்பதை உணர்த்தும் விதமாக வந்திருக்கும் படம் 'வண்ணத்துப்பூச்சி'. இந்தக் குழந்தைகள் திரைப்படம், குழந்தைகளுக்கானது அல்ல, பெற்றோர்களுக்கானது.

தமிழகத்தில் குழந்தைகள் சினிமா மட்டுமின்றி, குழந்தைகள் இலக்கியமும் அரிதாகவே





**- பிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

இருக்கும் நிலையில் இது ஒரு ஆச்சரிய வரவு. தாத்தா - பாட்டிகளுக்கும் பேரன், பேத்திகளுக்கும் இடையேயான பாசப் பிணைப்புதான் 'வண்ணத்துப்பூச்சி'யின் மையக் கதை. மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரியும் தம்பதி அருண் - சித்ரா. இவர்கள் மகள் ஸ்ரீலஷ்மி. தங்கள் மகளுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று திட்டமிட்டு ஸ்ரீலஷ்மியை வளர்க்கிறார்கள் அருணும் சித்ராவும். அவளின் இளமைப் பருவப் பாதுகாப்பிற்காக இப்போதே கடுமையாக உழைத்து பொருள் தேடி சேமிக்கிறார்கள். ஆனால், மகளின் எதிர்கால பாதுகாப்பைத் திட்டமிட்டவர்கள், நிகழ்காலத்தில் அவளின் தேவை என்ன என்பதை கண்டுணராமலேயே இருக்கிறார்கள். குழந்தையைக் கவனிக்க கூட நேரமில்லாமல் அலுவலக வேலைகளில் மூழ்கிவிடுபவர்களுக்கு அவள் பாசத்துக்காகவும் சுதந்திரத்துக்காகவும் ஏங்குகிறாள் என்பது தெரியவில்லை.

தனிமையும் ஏக்கமுமாக வளரும் ஸ்ரீலஷ்மி, பள்ளி விடுமுறையில் அப்பா வழி தாத்தா ஊருக்குச் செல்கிறாள். அங்கே அவள் வேறொரு உலகத்தைப் பார்க்கிறாள். தன் பெற்றோர்களிடம் எதிர்பார்த்து கிடைக்காத பாசமும் சுதந்திரமும் அவளுக்கு அங்கே தாத்தாவிடமும் சுற்றியுள்ளவர்களிடமும் கிடைக்கிறது. பெற்றோரின் கண்டிப்புக்கும் நகரத்து தனிமைக்கும் மாறாக சுதந்திரமும் அழகும் ஒருங்கே காணப்படும் வெள்ளந்தியான கிராமத்துச் சூழல் அவளை வசீகரிக்கிறது. இதனால் தன் தாத்தாவை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் அங்கேயே இருக்க விரும்புகிறாள். மீண்டும் குழந்தையை அழைக்க வரும் தம்பதி, வரமாட்டேன் என்ற அவளது முரட்டு பிடிவாதம் கண்டும் நிலைகுலைந்து போகிறார்கள்.

மகள், அப்பாவிடம் இருந்து வர மறுப்பதால், ஸ்ரீலஷ்மியைக் கடத்தியதாகத் தன் தந்தை மீதே காவல்துறையில் புகார் கொடுக்கிறார் அருண். இதனால் குடும்பத்துக்குள் பெரும் பிரச்சினை ஏற்படுகிறது. "இங்கிருந்து என் மகளை அழைத்துச் செல்ல என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்கிறார் அருண். தன் தந்தையினால் தன் தாத்தாவுக்கு ஆபத்து ஏதாவது வந்துவிடுமோ என்று பயப்படும் ஸ்ரீலஷ்மி, தன் பெற்றோர்களுடன் தனக்கு வாழப் பிடிக்கவில்லை என்றும் என்னிடம் பாசத்தைக் காட்டாத அவர்களுக்குத் தண்டனை தரவேண்டும் என்றும் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்கிறாள்.

இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்கும் நீதிபதி, கடைசியில் குழந்தையை அவளது தாத்தாவிடமே வாழும்படி தீர்ப்பு சொல்கிறார்.

கவிஞராகவும் பத்திரிகையாளராகவும் தமிழ்நாட்டுக்குள் பரவலாக அறியப்பட்ட ராசி. அழகப்பன், அழகப்பன்.சி. என்னும் பெயரில் இந்தப் படத்தில் இயக்குநராக அவதாரம் எடுத்திருக்கிறார். முதல் முயற்சியிலேயே இப்படி ஒரு குழந்தைகள் பிரச்சினையை எடுத்து படம் செய்ததற்காக நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர். குழந்தைகளின் மழலை ஆச்சரியத்தைக்கூட ரசிக்காமல், அவர்களை மறந்து எந்திரத்தனமாக வாழும் நகர்புற பெற்றோர்களையும் பிள்ளைகளின் ஆசாபாசங்களையும் உயிரோட்டமான காட்சிகளுடன் படமாக்கியுள்ளார்.

ரேவதி, பாலசிங், சித்தார்த், மாதவி ஷர்மா, நரேன், சிவதாணு, யுவான் சுவாங் மற்றும் பலர் நடித்துள்ளனர். ஸ்ரீலஷ்மியின் தாத்தாவாக வருபவர் வில்லன் நடிகர் பாலா சிங். ஏற்கெனவே, பல படங்களில் தன் நடிப்புத் திறனை நிரூபித்துள்ள பாலாசிங்குக்கு, மீண்டும் ஒருமுறை தன் தேர்ந்த நடிப்பு வெளிப்படுத்தும் வாய்ப்பு. சரியாகவே செய்துள்ளார். பேத்தியின் குழந்தை மனசோடு ஒரு குழந்தையாகவே அவர் கலந்துவிடுவது வயதானவர்கள் உலகத்து யதார்த்தம். இவரைப் போலவே, மீண்டும் தன் திறமையை நிரூபித்துள்ளவர் ஒளிப்பதிவாளர் பி.எஸ்.தரண்.

குழந்தை நட்சத்திரமான ஸ்ரீலஷ்மி, அதிகம் நடிக்காமல் குழந்தையாகவே வந்து போகிறார். ஓய்வுபெற்ற ஆசிரியராக நடித்திருக்கும் ஓவியர் அமுதபாரதியும் நிறைவாக செய்திருக்கிறார். பட்டணத்து பெற்றோராக வரும் சித்தார்த்தும் மாதவியும் சா.ஃ.ப்ட்வேர்காரர்கள் வேடத்துக்கு கச்சிதமாக பொருந்துகின்றனர். இசையமைப்பாளர் ரேஹான் இசையில், 'காற்றில் காற்றில்...', 'மழை வரும் வெயில் வரும...' பாடல்கள் நன்றாக வந்திருக்கின்றன.

நோக்கம் சரியானது என்றாலும், திரைக்கதையில் இருக்கும் பெரிய பலவீனங்கள் காரணமாக படம் சறுக்குவதுதான் சோகம். அப்பா - அம்மாவுடன் வாழப் பிடிக்கவில்லை, அவர்கள் வேண்டாம் என்று குழந்தை சொல்வதுடன் நிற்காமல் பெற்றோர் மீதே வழக்கு தொடுப்பதும், அதை தாத்தா ஆமோதிப்பதும்... நம்ப முடியவில்லை. அதுபோல் நகரத்து பள்ளிகளுக்கு இணையாக கிராமத்து பள்ளிகளையும் தூக்கிப் பிடிப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அப்படி இருக்க வேண்டும் என்பதுதான் எல்லா சமூக ஆர்வலர்களின் ஆசையும் என்றாலும், தமிழ்நாட்டு நடைமுறை அம்மாதிரி இல்லை என்பதுதானே யாதார்த்தம். அதுவும், குறைந்த பட்ச மருத்துவ வசதிகூட இல்லாத ஒரு கிராமத்தில், பெண் துணை ஏதுமில்லாத வீட்டில், ஒரு குழந்தையை தங்க வைக்க நீதிபதி உத்தரவிடுவது தமிழ் சினிமாக்களுக்கே உரிய இறுதிக்காட்சி சறுக்கல். நாடகத்தனமான காட்சிகளும் நீளமான வசனங்களும் இன்னொரு பலவீனம்.

இவ்வளவு பலவீனங்கள் இருந்தாலும்... நகரத்து நெரிசல்களிலும் வேலை நெருக்கடிகளிலும் சிக்கி குடும்ப உறவுகளையும் வாழ்க்கையையும் இயந்திரமாக்கிக் கொள்ளும் மனிதர்களுக்கு சாட்டை அடி கொடுக்க முயன்றதற்காக 'வண்ணத்துப்பூச்சி' திரைப்படக் குழுவினரைப் பாராட்டலாம்.

வீடு, மனை, நிலம் வியாபாரம்,
வியாபாரக்கட்டிடம் வாங்க, விற்க
அழையுங்கள் Ratheesh





Ratheesh Subramaniam, B. Sc (Hons)
Sales Representative
Cell: 416-303-4005 Office: 416 - 321-6969
Email: ratheesh_maniam@hotmail.com
HomeLife GTA Realty Inc., Brokerage*
HOMELIFE HIGHER STANDARDS
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga - 905.712.2666
*Independently owned & operated
கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது

# பறவைகளின் சொர்க்கம் - கோடியக்கரை



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 62

தமிழகத்தில் உள்ள சரணாலயங்களின் அழகும் எழிலும் அவற்றின் பல்வகையான, பல தேசங்களைச் சேர்ந்த உயிரினங்கள்தான். நீலகிரி, ஆனைமலை, பொதிகைமலை போன்ற மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசங்கள் தொடங்கி, பழவேற்காடு, வேடந்தாங்கல், கோடியக்கரை, நாங்குநேரி எனக் கிழக்கு கடற்கரையோரமாக உள்ள புதர்க்காடுகள், ஏரிகள், நதிகள், கழிமுகங்கள், உப்பங்கழிகள், கடற்கரைகள், சதுப்பு நிலங்கள் என பல்வேறு விதமான புவியமைப்புகள், தமிழகத்தில் எண்ணிலடங்கா உயிரினங்களுக்கு உறைவிடங்களாக அமைந்துள்ளன. எல்லாமே தனித்தனி சிறப்புகள் வாய்ந்தவை என்றாலும், தமிழக சரணாலயங்களுக்குள்ளும் தனிச் சிறப்பு வாய்ந்தது கோடியக்கரை சரணாலயம்! வன விலங்குகள் சரணாலயம், பறவைகள் சரணாலயம் இரண்டுமே ஒன்றிணைந்ததாக உள்ள சரணாலயம் இது என்பதுதான், கோடியக்கரையை நோக்கி உலகம் முழுவதும் இருந்து பறவைகளை மட்டுமல்ல, சுற்றுலா பயணிகளையும் கவருகிறது. இந்த வாரம் நாமும் கோடியக்கரை சென்று பார்ப்போம்.

கோடிக்கரை ரயில் நிலையத்திலிருந்து மேற்கே அரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது சரணாலயம். 1967ஆம் ஆண்டு கலைமான்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சரணாலயம் இது. இதன் மொத்த பரப்பளவு 17.26 சதுர கி.மீ.தான். ஆனாலும், அதற்கு மேற்கே 80 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ராஜாமடம் வரைக்கும் சதுப்பு நிலக் காடுகள் உள்ளன. இந்தக் காடுகள் இரண்டு இடங்களில் உப்பங்கழிகளாக கடல் நீர் புகுந்து உப்பு ஏரியாக 30 கிலோமீட்டர் நீளம் 5 கிலோமீட்டர் அகலத்துக்கு நிற்கின்றது. இந்த உப்பு ஏரிகளில் முத்துப்பேட்டை, திருத்துறைபூண்டி மற்றும் மேல்மருதூர் பகுதியிலிருந்து மூன்று நதிகள் சங்கமம் ஆகின்றன. ஆகவே, இந்த உப்பேரியில் நிற்கும் தண்ணீர் கடல் நீர் அளவு உப்பாக இல்லை. ஏரியும் அதிக ஆழம் இல்லை. உயரமான அலைகளின் போது கடல் நீர் நிலப்பகுதியில் ஏறி இங்கே வரும். பிறகு வடியும். இப்படி வடியும் போது பள்ளப் பகுதியில் ஏறி வந்த நீர் கடலுக்குத் திரும்பாது. பள்ளங்களில் அப்படியே தேங்கிவிடும். இப்படித் தேங்கும் நீரில் சிக்கிக் கொண்ட மீன்கள் கடலுக்குத் திரும்பிப் போக இயலாமல் தவித்து நிற்கும். எனவே, இந்தப் பகுதியில் ஏராளம் மீன்கள் காணப்படுகின்றன. இப்படி கூட்டம் கூட்டமாக தவித்து நிற்கும் மீன்கள் பறவைகளுக்கு நல்ல விருந்தாகும். இதனால், தங்களுக்கு எளிதாக உணவு கிடைக்கும் இந்த இடத்தை நீர்ப்பறவைகள் மிகுதியாக விரும்பி இங்கே வந்து குவிவதில் ஆச்சரியம் இல்லை.

கோடியக்கரையைச் சுற்றியுள்ள தனிச்சிறப்பு வாய்ந்த சதுப்பு நிலங்களில் பல்வேறு வகையான அரிய பறவையினங்களைக் காணலாம். நூற்றுக்கும் அதிகமான பறவை யினங்கள், இங்கே மரங்களில் கூடுகள் அமைத்துக்கொண்டு வாழுகின்றன. பூநாரை போன்று வட அரைக்கோளத்தை சேர்ந்த பறவைகள் தொடங்கி அண்டார்டிக்கா பகுதியில் உள்ளவை வரைக்கும் உலகம் முழுவதும் இருந்து, ஆண்டுதோறும் வடகிழக்குப் பருவமழை காலத்தில் பறவைகள் இங்கு வலசை வருகின்றன. குறிப்பாக, நீர் தேங்கும் சமயங்களான அக்டோபர் முதல் பிப்ரவரி வரையான மழை காலங்களில் பல்லாயிரக் கணக்கில் ரஷ்யா, சைபீரியா, ஈரான், இலங்கை, அட்லாண்டிக் போன்ற பல நாடுகளிலிருந்தும் பூ நாரை, செங்கால் நாரை, கூழைக்கடா, நத்தை கொத்தி நாரை, ஊசிவால் சிறவி, பணங்கொண்டை நாரை, சிறவி, மூக்குநாரை, நீல இறகு சிறவி, சேன்பயரின் 30 வகையான உள்ளான்கள், பீஸ் இனப்பறவைகள், வாத்துகள் என பல்லாயிரக்கணக்கில் இங்கு வருகின்றன. பறவைகளின் தந்தை என்று அழைக்கப்படும் டாக்டர் சலீம் அலி இப்பகுதியை 'பறவைகளின் சொர்க்கம்' என்று அழைத்தார்.

இங்குள்ள பறவைகளில் சுவராசியமான ஒன்று, ராஜஹம்சம். ஹம்சம் என்றால் அன்னம். இது மரங்களில் கூடுகட்டி வாழக் கூடியது அல்ல. பகல் இரவு எந்த நேரமும் தண்ணீரில் இருக்கக் கூடியது. தண்ணீரிலேயே தூங்கவும் கூடியது. இதன் பிரதான ஆகாரம் மீன். இதற்கு தங்குவதற்கான நீர் வசதியும் மீனும் இங்கே கிடைப்பதால் அவையும் இங்கே தேடி வருகின்றன. குஜராத்தின் கட்ச் பகுதியிலிருந்து அக்டோபரில் அதிகமான ராஜஹம்சங்கள் இங்கு வரத் தொடங்குகின்றன. நான்கு மாதங்கள் இங்கு வசிக்கின்றன. பிறகு, ஜனவரி, பிப்ரவரியில் திரும்பிப் போய் விடுகின்றன. நெடுந்தூரம் பறந்து செல்லும் சக்தியை இழந்த நிலையில் உள்ள வயதான அன்னங்கள் மட்டும் இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிடுகின்றன. வருடம்தோறும் சுமார் 40 ஆயிரம் ராஜஹம்சங்கள் இங்கே வந்து போகின்றன எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

நீர் வாத்துக்களும் கோடியக்கரையை விரும்பி வருகின்றன. வருடம் சுமார் இரண்டாயிரம் நீர் வாத்துக்கள் பருவ காலத்தில் இங்கு வந்து போகின்றன என்கிறார்கள்.

கோடியக்கரையில் உள்ள சில நாரைகளின் கால்களில் வளையங்கள் பொருத்தப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். இந்த நாரைகள் போகும் இடம், போகும் பாதை எல்லாவற்றையும் கணிப்பதற்காக பறவையியலாளர்கள் இவற்றைப் பிடித்து, அதன் கால்களில் சிறு வளையங்கள் பொருத்தி விட்டிருக்கிறார்கள். வருடாவருடம் இந்த வளையம் பொருத்தும் வேலை நடக்கிறதாம். "பறவைகள் உலகில் உள்ள இந்தப் புலம்பெயரும் வழக்கம் இன்றுவரைக்கும் அறிவியலுக்கு விளங்காத பெரும் புதிராகவே இருக்கின்றது. சிட்டுக்குருவி அளவு உள்ள புள்ளினத்திலிருந்து, வல்லூறு, நாரை போன்ற பல இனப் பறவைகள் வரை இவ்வாறு கண்டம் விட்டு கண்டம் வலசை போகின்றன. ஒரு பறவை இனம் எந்த நாட்டில், எந்த இடத்தில் கூடுகட்டுகின்றதோ அந்த இடத்தைச் சேர்ந்தது. குளிர்காலத்தில் தரை பனியால் மூடப்படும் போது இந்த நாரைகள்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்




# பறவைகளின் சொர்க்கம்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

வெப்ப நாடுகளுக்கு வலசை போகின்றன. அக்டோபரில் இந்தியா வந்து சேரும் இவை மார்ச், ஏப்ரல் மாதங்களில் திரும்பிப் போகின்றன. அங்கே கூடு கட்டி இனப்பெருக்கம் செய்து விட்டு, மறுபடியும் அக்டோபரில் பயணத்தை ஆரம்பிக்கின்றன. எப்படி ஒவ்வொரு ஆண்டும் அதே இடத்திற்கு வலசை போகின்றன, எப்படி வழி கண்டு பிடிக்கின்றன என்ற கேள்விகளுக்கு இன்னும் பதிலில்லை. இயற்கையின் பெரிய புதிர் இது. பறவைகளின் காலில் மாட்டப்படும் ப்ளாஸ்டிக் வளையத்தின் நிறத்தை வைத்து இது எந்த நாட்டில் பொருத்தப்பட்டது என்றறிய முடியும். இதற்கு அந்தப் பறவையைப் பிடித்துப் பார்க்க வேண்டிய தேவை இல்லை" என்கிறார் இங்குள்ள சரணாலய அலுவலர் ஒருவர்.

கோடியக்கரை வன விலங்குச் சரணாலயத்தில் கலைமான், நரி, புள்ளி மான், காட்டுப்பன்றி, முயல், காட்டுக் குதிரைகள், ஆமை, குரங்கு போன்ற பல்வேறு விதமான விலங்குகளையும் காணலாம். முக்கியமாக கருமான்கள் மற்றும் காட்டுப் பன்றிகள் அதிகமாக உள்ளன. இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள், தங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போகும்போது, தங்களின் பல உடமைகளை இந்தியாவிலேயே விட்டுவிட்டு சென்றார்கள். அப்படி அவர்கள் விட்டுச் சென்றவற்றில் ஒன்று அவர்கள் பயன்படுத்திய வளர்ப்புக் குதிரைகள். அந்தக் குதிரைகள் கோடியக்கரை காடுகளில்தான் உள்ளன. நாளடைவில் காட்டுக் குதிரைகளாக மாறிவிட்ட ஆங்கிலேயர்களின் குதிரைகளை இங்கு மட்டுமே காண முடியும்.

தாவரவியலாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் கூட கோடியக்கரை முக்கியமான இடம் ஆகும். இப்பகுதியின் காடுகள் வெப்பமண்டல உலர் பசுமைமாறா காடுகள் ஆகும். இக்காப்பகத்தில் 150 வகையான தாவர வகைகள் காணப்படுகின்றன. சதுப்பு நிலப் பகுதிகளில் சுமார் 12,000 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள மாங்க்ரோ காடுகள் தனித்தனி மேடுகளில் பரந்து இருப்பதால் புயலின் கொடூரமான வேகத்தை தடுத்து, சேதத்தைக் குறைப்பதோடு தூய்மையான காற்றையும் மழையையும்



தருகின்றன. நரிகண்டன், பெரும் மாங்க்ரோ, நீர்முள்ளி, உமுரி, பிறண்டை, சங்கலை, தூதலை அப்பக்கோவை தண்ணீர்விட்டான் கிழங்கு போன்ற உயிர்காக்கும் மூலிகைகள் வளரவும் வாய்ப்புள்ள பகுதியாகும் இது. கடல்வாழ் உயிரினங்களான ஆழி நண்டுகள், இறால்கள், சிற்பிகள், தவளைகள், பாம்புகள், ஆமைகள், வெள்ளான்பொடி, பலாக் கொண்டை, கத்தலை, கெலுத்தை, சிறிய கொண்டை, கெண்டை பொடி, பண்ணா, மூக்கு மீன், கெலுத்தி, தோவைப்பொடி, திருக்கை, மடவாக் கெண்டை, சடையன், சூலூரி, மோட்ராள், கருப்பு இறால், கழி நண்டு, டால்பீன்கள், கடல்பசுக்கள் உலாவுவதற்கும் குஞ்சு, பொரிப்பதற்கும், வளர்ப்பதற்கும் கோடியக்கரை சதுப்பு நிலப் பகுதிகள் பாதுகாப்பான இடமாகப் திகழ்கின்றன.

சரணாலயங்களுக்கு அடுத்ததாக இங்குள்ள குழகர் கோயிலாலும் கோடியக்கரை பிரசித்தமானது. இதன் இறைவன் அமுத கடேஸ்வரர் என்றும் குழகேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறான். இறைவியார் திருப்பெயர் அஞ்சனாக்ஷி என்றும் மைத்தடங்கண்ணி. தேவாரப் பாடல்களில் பாடப்பெற்ற சிறப்புள்ளது இந்தக் கோயில். சேரமான் பெருமாள் நாயனாருடன் இத்தலத்திற்கு வந்த சுந்தரர், கோயில் கடலருகே தனித்திருப்பதைக் கண்டு உள்ளம் வருந்தி பாடியதாக வரலாறு சொல்லப்படுகிறது. அருணகிரிநாதரின் திருப்புகழ்



பெற்றத் தலமுமாகும். நவீன தமிழ் இலக்கியத்திலும் கோடியக்கரைக்கு சிறப்பு உண்டு. பொன்னியின் செல்வனில் கல்கி கோடியக்கரை கடற்கரை பகுதிகளை சுவைபட விவரித்திருப்பார்.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமுதக் கலசத்தை வாயு பகவான், தேவருலகிற்கு எடுத்துச் சென்றான். அப்போது அமுதம் சிதறிக் கீழே விழ, அது சிவலிங்கமாக ஆயிற்று என்று குழகர் கோயில் தலவரலாறு கூறுகிறது. இத்தலத்து முருகப்பெருமான் ஓர் முகமும் ஆறு கரங்களும் கொண்டவர். ஏனைய ஆயுதங்களுடன் ஒரு திருக்கரத்தில் அமுத கலசமும் ஏந்தியிருக்கிறார். இத்தலத்து விநாயகரும் "அஷமிர்த விநாயகர்' என்றே அழைக்கப்படுகிறார். கோடியக்கரை கடற்கரையிலுள்ள சித்தர் கோயிலில் சித்தர்கள் பலர் இன்னும் வாழ்வதாக நம்பப்படுகிறது. ஆயிரம் ஆண்டுகள் பழமையான சோழர் காலத்து கலங்கரை விளக்கம் ஒன்று சிதைந்த நிலையில் உள்ளதையும் கோடியக்கரையில் பார்க்கலாம்.

உலகப் பிரசித்திப்பெற்ற முத்துப்பேட்டை நீர் நிலைகள், கோடியக்கரைக்கு அருகாமையில் தான் உள்ளது. அதை இன்னொரு நாள் பார்ப்போம்.

காவேரி வடிநிலப் பகுதிக்கும், இயற்கை வளங்களுக்கும், விலங்குகள் மற்றும் பறவைகளுக்கும் பாதுகாப்பு அரணாக இருக்கும் கோடியக்கரை பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களுக்கும் வாழ்வின் ஆதரமாகவும் திகழ்கிறது. இங்குள்ள மீனவர்களுடன் பேசினால், அவர்கள் சொல்லும் கதைகள் கோடியக்கரையை இன்னும் சிறப்புடையதாக்குகின்றன.

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரமான திருச்சியில் இருந்து 232 கிலோமீட்டர் தூரத்திலும், தஞ்சாவூரிலிருந்து 110 கி.மீ தொலைவிலும், நாகப்பட்டிணத்திலிருந்து 68 கி.மீ தொலைவிலும் உள்ளது, கோடியக்கரை. இந்த ஊர்களில் இருந்து வேதாரண்யத்துக்கு அடிக்கடி பேருந்து போக்குவரத்து உள்ளது. வேதாரண்யத்திலிருந்து கோடியக்கரைக்கு பேருந்துகள் நிறைய உள்ளன. நவம்பர் முதல் ஏப்ரல் வரை மிகவும் ஏற்ற காலமாகும். நாகப்பட்டிணம் அல்லது வேதாரண்யத்தில் தங்குவதற்கு சிறந்த விடுதிகளும் உணவகங்களும் உள்ளன.

**வழிப்போக்கன்**

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

Independently owned & operated

*"Dream is yours responsibility is ours"*

• எமது நிறுவனத்தின் வீட்டு முகவர்கள் மூலம் வீடு, மனை, வியாபார நிலையம், வியாபாரம் வாங்குவதன் அல்லது விற்பதன் மூலம் நீங்களும் அதிர்ஷ்டசாலி ஆகலாம்.










• some conditions may apply

*To Join the Success full & Respectful Team*

**Please Call @ 416.321.6969 / 905.712.2666**

www.homelifegtarealty.com Email: gtarealty@gmail.com

1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 29, Mississauga

# காது

10ஆம் பக்கத்தொடர்ச்சி

சாலைகளில் புதிய பொறியியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக ஒலியை குறைக்க வேண்டியது முக்கியம். அழற்சி காரணமாக சிலருக்கு அடிக்கடி காது அடைப்பு, உட்புறத்தில் புண் காணப்படும். இவ்வேளையில் சிந்தித்து செயலாற்றிக் கொள்ளுங்கள். மூக்கு, தொண்டை என்பவற்றில் ஏற்படும் அழற்சி தொண்டையையும், காதையும் இணைக்கும் Eustachian Tube வழியாகப் பரவி காதினை மிகமிகப் பாதிக்கும்.

ஒருவருக்கு காது நன்கு கேட்டால் தான் தொண்டையின் உதவியால் வாயால் கதைக்க முடியும். காது கேட்காத குழந்தை வாயால் பேசாமல் இருக்கும். எனவே நிதானமாக கவனித்து வைத்தியரிடம் சென்று காரணத்தை நன்கு அறிந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

சிலருக்கு காதினால் இரத்தம் வருவதுண்டு. இவ்வேளை காதைக் கண்டபடி குடையக்கூடாது. எண்ணெய் விடக்கூடாது. இப்படி செய்தால் காதினுள் சீழ் பிடிக்கும். பூஞ்சையும் (fungus) வரலாம். நாளடைவில் காது கேட்கும் சக்தி குறைந்துவிடும். எனவே தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சிலருக்கு காதினுள் மணிஓசை போன்று ஒலிதென்படும். இந்நிலை வயது முதிர்ந்தவர்களுக்கு நரம்பு தளர்ச்சியால் ஏற்படலாம். மேலும் நரம்பைப் பாதிக்கக்கூடிய மருந்துவகையாலும், வைரஸ்கிருமிகளினாலும் ஏற்பட இடமுண்டு. உட்காதுகளில் கட்டி சிலருக்கு ஏற்படலாம். காரணம் உள்காதிற்குத் தேவைப்படும் இரத்தோட்டம் குறைவதேயாகும். இப்படியான வியாதிகள் ஏற்படும்போது தாமதியாமல் வைத்தியர்களை நாடிச்சிகிச்சை பெற்று உறுப்புக்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

மேலும் சிலருக்கு காதுக்குள் இரைச்சல் ஏற்படுவதுண்டு. இச்சத்தத்தில் இருதன்மைகள் உண்டு. ஒன்று இரைச்சல் ஏற்படும் போது தனக்கு மாத்திரம் கேட்கும். அடுத்து காதில் ஏற்படும் இரைச்சல் அருகில் இருப்பவருக்கும் கேட்கும். இந்நிலையானது இரத்த நாளங்களில் ஓடும் இரத்தோட்டத்தினைப் பொறுத்ததாக இருக்கும். அல்லது காது மூக்கு துவாரங்கள் திறக்கும் சத்தமாகவும் இருக்கும். இந்த இரைச்சலானது தனக்குள்ளே கேட்குமாயின் உட்காதில் உள்ள ஒலி வாங்கி உறுப்பில் ஏற்பட்ட நச்சுத்தன்மை காரணமாக அமையலாம். காதில் நீர் சென்றாலும் இரைச்சல் நிலை வருவதற்கு இடம் உண்டு.

உட்காதில் நிணநீர் அதிகம் தேங்கும் போதும் காது அடைப்பதுடன், ஒருவித மயக்க நிலையுடன் இரைச்சலும் ஏற்படும். இது பெரும்பாலும் திரும்பத் திரும்ப வரலாம். நாளடைவில் காது கேட்பது குறைந்து காணப்படும். எதற்கும் உரிய வைத்தியர்களிடம் சென்றால் முன்கூட்டியே எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சிலர் முற்கோபத்தினால் காதுப்பக்கத்தில் கையால் சடுதியாக அடிப்பதை நாம் அறிவோம். இது நல்லது அல்ல. தயவு செய்து தவிர்த்துக் கொள்வது மிக நன்று. இல்லையேல் காதில் காற்று அழுத்தம் அதிகமாகிச் செவிப்பறைப் பகுதியில் கிழிவு ஏற்பட்டு காது கேட்காத நிலை வந்துவிடும் என்பதை முன் கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.

சிலருக்கு விமானத்தில் செல்லும்போது காது அடைப்பு, வலி ஏற்படுவதுண்டு. அவ்வேளை உரியவர்கள் மூக்கை ஓரளவு அழுத்திக் கொண்டு, வாயின் உள்ளேயுள்ள காற்றை பலமாக காதினுள் அழுத்திச் செலுத்த வேண்டும். அவ்வேளை காதுத் துவாரம் திறந்து நடுக்காதினுள் காற்று சென்று, காதடைப்பு, வலி உடன் நின்று விடும். நடுக்காது காற்றால் நிரப்பப்பட்ட ஒரு இடமாகும். மூக்குக்குழாய் மூலம் தொண்டையில் உள்ள காற்று காதுக்குள் செல்லுகின்றது. இவ்வாறு இயற்கையாக காற்று நிரப்பப்பட்ட நடுக்காதுதான் ஒலி கடத்துவதற்கு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. விமானத்தின் காற்றின் அழுத்தம் விமானம் மேல் உயர்ந்து செல்லும் போது மாற்றம் அடையும். காற்று அழுத்தத்திற்கு ஏற்ப நாம் வாயை அசைந்தால் அல்லது உமிழ்நீரை விழுங்கினால் காது, மூக்கு வடிகால்கள் திறக்கும். அவ்வேளை காற்று அழுத்தம் சமநிலைக்கு வந்து விடும். காது மூக்கு வடிகாலின் அடைப்பு இருந்தால் நடுக்காதுக்கு காற்று செல்லாமையினால் செவிப்பறை உள்நோக்கி உறிஞ்சப்பட்டு வெற்றிடம் ஏற்படுகின்றது. இதனால் காது அடைப்பு வலி ஏற்படுகின்றது. எதற்கும் சிந்தித்து செயலாற்றிக் கொள்ளுங்கள்.


## Preschool

**NEILSON & McLEVIN**

Ready your kids to school. We help them to write, recognize letters & numbers, develop their fine motor skills, physical activities & more.
Cheap as $5 per day (2½ hrs).
Call - ***Sujanthy: 416.332.1254***
***416.844.9178***



## CARS FOR SALE

- 2001 Toyota Corolla, 73 K
- 1995 Toyota Camry, 143K
- 1995 Chevy Lumina, 145 K

Many more.
Pl. Call: ***905.770.2575***
9:00am - 6:00pm
***416.399.6640*** After 6:00 pm



## REDEVELOPMENT PROPERTY WITH MOTEL FOR SALE



- Prime property by river in downtown Niagara Falls.
- A short walk from train and bus stations.
- Designated "Major Commercial" in the Official Plan.
- Potential for high-rise residential redevelopment.
- Eligible for local and regional government incentives under City's Community Improvement Plan.
- Currently houses 33-room motel with outdoor heated pool and attached four-bedroom house.

Inquires Tel: ***416-669-3101***

*கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்*
*Tamil Writers' Association of Canada*
*Reg. # 00110116*
*4-2800 Eglinton Ave. E, Scarborough, On. M1J - 2C8*
*416-546-1394 / 647-444-9608*

*தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களின் கவனத்திற்கு*

*'கணனி மூலம் தமிழ் கற்பித்தல் - செயல்முறை விளக்கம்'*
*பேராசிரியர் சிவா பிள்ளை*
*Department of Education, Goldsmith College,*
*University of London, UK*

*இடம் : அற்லான்ரா மண்டபம்*
*1240 Ellesmere Road, Scarborough, Ontario.*

*திகதி : 29-08-2009 - சனிக்கிழமை பி.ப. 5:30 – 9:00*

*மேற்படி நிகழ்வில் பங்குபற்ற விரும்புவோர் பின்வரும் தொலைபேசி எண்களை அழைத்து உங்கள் முழுப் பெயரையும் தொலைபேசி எண்ணையும் பதிவு செய்யவும் மட்டுப்படுத்தப்பட்ட ஆசனவசதிகளே இருப்பதால் முன்பதிவு அவசியம். நன்றி*

*தொலைபேசி : 416 284 9158 / 416 546 1394*



## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# BASEMENT RENT

**WARDEN & ELLESMERE**
2 bedroom bsmt for rent - bungalow house. Sep. entrance. 4 pc washroom, parking. Wood & carpet. Avail. immediately. Close to ttc, hwy 401, mall, public & catholic schools, stores. 416.510.6932 / 416.819.6431 weekdays after 6:30pm / weekends anytime

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, tamil stores, malls, doctors & more. Avail. September 01st, 2009. Also 1 room with food available for students. தொடர்புகட்கு: 647.219.4558

**WALK - OUT BASEMENT**
**MIDDLEFIELD & McNICOLL**
2 Bedroom walk-out bsmt. available for immediate rent. Very clean and spacious. Close to Aiyappan Temple. தொடர்புகட்கு: 416.293.1401

**WARDEN & FINCH**
New 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking & cable. In front of Bridletowne Mall. Only for ladies. Avail. immediately. தொடர்புகட்கு: 416.828.4147.

**McCOWAN & SHEPPARD**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, washer & dryer. Close to Babu Catering. Cheap rent. Avail. immediately. Also 1 room available at **McCowan & Finch.** 416.720.5933/416.564.8119

**BELLAMY & LAWRENCE**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, internet, washer & dryer. School in front, Close to TTC, Cedarbrae mall. Avail. September 01st, 09. தொடர்புகட்கு: 416.431.5062

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, internet, washer & dryer. Malvern Mall, TTC & school very near. Avail. immediately. தொடர்புகட்கு: 416.282.7436

**TAPSCOTT & McLEVIN**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Behind Malvern Mall. Doctors & TTC near by. Avail. immediately. Also 1 room available for rent. தொடர்புகட்கு: 416.754.8947

**FINCH & NEILSON**
2 Bedroom bsmt for rent. Kitchen, laundry, sep. entrance for immediate rent. Minute walk to school & bus. Suitable for couple or small family. Affordable rent. தொடர்புகட்கு: 647.830.1915

**EGLINTON & MIDLAND**
2 Bedroom walk-out bsmt. for rent. Parking, cable & laundry. Close to kennedy subway. All facilities close by. Avail. immediately. 647.886.3920/905.471.0958

**McCOWAN & DENISON**
Brand new 1 bedroom thermally insulated bsmt. apt. for rent. Living & dining rooms. Sep. entrance. Parking, cable, internet & laundry & utilities inclusive. Single or couple preferred. Close to TTC & YRT. Avail. immediately. 905.948.9574/647.239.9088

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry.Close to mall, school, Aiyappan temple & tamil stores. Avail. immediately. 416.299.5871 / 416.562.0781

**BIRCHMOUNT & EGLINTON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Close to bus, school, many stores & subway. Convenient location. Avail. immediately. தொடர்புகட்கு: 416.906.8086

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Living, dining kitchen with stove & fridge. Parking & washer. Walk to subway,TTC & banks.Suitable for couple. Avail. immediately. 416.285.4695 (call after 6 pm)

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to YRT, TTC, doctors, bank & plaza. Avail. September 1st, 2009. தொடர்புகட்கு: 647.822.7722

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking & laundry. Large kitchen. Close to school, TTC, YRT, doctors & shopping. Avail. immediately. 905.944.9727 / 647.242.9727

**MCCOWAN & 16TH AVE.**
ஒரு அறை கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to ttc, mall, school. Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 416.414.5562

**VICTORIA PARK & FINCH**
2 Bedroom walk-out bsmt. for rent. Parking, cable & laundry. Utilities inclusive. Close to TTC, school. Avail. September 1st, 2009. தொடர்புகட்கு: 416.499.6893

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to TTC & tamil stores. Avail. immediately. No pets & smoking. Contact: 416.226.1597

**WARDEN & FINCH**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately. தொடர்புகட்கு: 416.495.9775

**BIRCHMOUNT & SHEPPARD**
New 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Also 1 room available for rent. Parking, cable & laundry. Close to mall, school, TTC. etc. High ceiling bsmt. Avail. September 01st, 2009. தொடர்புகட்கு: 416.298.4945

**BRIMLEY & LAWRENCE**
1 Large bedroom bsmt. apt. for rent. Large living room. Sep. entrance, parking, laundry. Steps to school, mall & TTC. Avail. immediately. 416.799.3221/647.344.2435

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry, cable, TVI included. Close to TTC, school. Family preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.737.3891

**WARDEN & SHEPPARD**
1 bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to 24 hrs bus, stores, etc. Couple /single preferred. தொடர்புகளுக்கு: 416.494.7547

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, internet, cable & parking. Close to mall, TTC, tamil stores & hospital. Avail. immediately. தொடர்புகட்கு: 905.554.2496

**MAVIS & EGLINTON**
New 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to Square One mall. Avail. immediately. தொடர்புகட்கு: 416.752.0863

**LAWRENCE & MORNINGSIDE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school, mall, & library. Avail.immediately 416.724.7595/416.998.2760

***MORNINGSIDE/LAWRENCE/KINGSTON***
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. High ceiling. Parking, internet, laundry, utilities inclu. Couple or small family preferred. Very close to TTC - 3 bus routes, shopping mall, school. Avail. August 15, 09. தொடர்புகட்கு: 416.283.2124

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, Spiceland grocery store, School. Avail. September 01, 09. Also 1 room avail. for rent. 416.291.9964 / 416.520.2754 cell

**MARKHAM & STEELES**
New 1 Bedroom walk-out bsmt. apt. for rent. Parking & laundry. Close to TTC, school, nofrills, Wal-mart etc. Avail. immediately. 416.951.0034 / 416.799.4915

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.708.2377

***LAWRENCE & Scarboro. Golf Club Rd***
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. parking, laundry. Available immediately. Close to Bank, TTC, shopping, school, etc. 416.219.4936 / 416.454.9986

**STEELES & 9th LINE**
2 Bedroom basement apt. for rent. Available from September 2009. Close to all amenities. Call for details: 416.931.3444

## BUSINESS FOR SALE

***VARIETY PLUS***
**DONMILLS & McNICOLL**
நல்ல வியாபார நிலையிலும், நிரந்தர வாடிக்கையாளரை கொண்டதும், நல்ல வருமானம் ஈட்டுகின்ற மேற்படி வியாபார நிலையம் விற்பனைக்குண்டு.
விலை $45,000.
416.491.1931/647.281.0846

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# CONDO. FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom condo. for rent. 2 full washroom. Parking & laundry. Close to Aiyappan Temple, Tamil stores, GTA mall & 24 hour bus. Avail. October 01st, 2009. 416.438.4979/416.846.4979

**WARDEN & FINCH**
3. Bedroom condo. for rent. 1½ washroom. Cable, parking, security, water, gas included. Washer, Dryer included. 1 min. walk to intersection. Avail. September 1st, 2009. 2050 Bridletowne circle . Call - JEY: 416.274.9726

**உடனடி வேலை வாய்ப்பு**
**A1 கொழும்பு போட்டோ & வீடியோ**
முதல்தர அதிக அனுபவம் உள்ள
வீடியோ எடிற்றர், போட்டோ டிசைனர் - **1Hr $15.**
வீடியோ எடுப்பவர் **1Hr $15 +** கமரா **Rent**
போட்டோ எடுப்பவர் **1Hr $15 +** கமரா **Rent**
L. L. 3- 2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD,
**Mobile: 416-752-4444 Tel: 416-755-2333**

# JOB JOB JOB

**LAWRENCE & PHARMACY**
உணவகத்தில் இடியப்பம், பலகாரவகை மற்றும் சமையல் தெரிந்த ஆட்கள் தேவை.
தொடர்புகட்கு: 416.288.0303

ஸ்காபரோவில் அமைந்திருக்கும் Computer நிறுவனத்துக்கு ஆங்கிலமும் தமிழும் நன்கு தெரிந்தவரும் தமிழிலும், ஆங்கிலத்திலும் Typing தெரிந்தவரும் வேலைக்குத் தேவை.
Email: a1inkrainbow@hotmail.com
Fax : 416.286.0334

# JOB! JOB! JOB!

Ladies & Men Hair cutter wanted. Facial, Waxing, Manicure, Pedicure, Hair-cut செய்யக்கூடிய பெண்கள் தேவை.
முடிவெட்டத்தெரிந்த ஆண்களும் தேவை.
***R & M Beauty Saloon***
விபரங்கட்கு: ***647.238. 2381***

# Car For Sale

1996 Honda Civic DX, 2 door 220 k, automatic with emission test. Good test. Price $1,500.
Contact: 647.999.1236

# WANTED CHEF, HELPER & DRIVER

Wanted Japanese chef, Kitchen helper and driver.
**AKI DA JAPANESE SEA FOOD HOUSE**
1911 Queen street East.
Contact: ***Kevin: 416.918.9936***

# VAN FOR HIRE

***WEDDING, AIR PORT, TEMPLE, SPECIAL OCCASION*** போன்ற தேவைகளுக்கும்
Limousine தேவைகளுக்கும்
அழையுங்கள் ***416.835.6951***

மேலும் பக்கங்கம் 21

# ROOM RENT

**MCCOWAM & FINCH**
2 அறைகள் BSMT இல் வாடகைக்கு உண்டு. Living room, sep. entrance. Parking, laundry. Avail. immediately. Close to ttc, stores, school, etc.
416.720.2171 / 416.298.1872

**NEILSON & McLEVIN**
1 Room in luxury condo for rent. All facilities. Ladies preferred.Avil. immediately. Close to ttc, mall, school, etc.
தொடர்புகளுக்கு: 416.284.9358

**EGLINTON & DANFORTH**
1 படுக்கை அறை உடன் வாடகைக்கு உண்டு. தனி நுழைவாயில். தெரு ஓரம் பஸ் தரிப்பு நிலையம். சமையல், வாகன தரிப்பிடம். இலவச கேபிள் ரி.வி, வயது கூடிய அல்லது பென்ஷன் பெறும் ஆண்கள் மட்டும் அழைக்கவும். வாடகை utility உட்பட $350
தொடர்புகட்கு: 416.431.5156

**1 Room in condo. townhouse**
for immediate rent. Internet & cable available. Close to TTC, University, Centennial College, mall, HWY & tamil stores. Ladies preferred.
call: 416.388.5484
MORNINGSIDE & ELLESMERE

**KENNEDY & EGLINTON** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள BSMT இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, cable. No alcohol, no smoking. Avail. anytime. Rent $375. Close to bus, Kennedy subway, stores, etc.
647.290.8636 / leave message

**WARDEN & FINCH**
Condo. இல் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Parking. Close to bus, Tamil stores, Tamil restaurant. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.499.6437
416.844.6437 / 647.308.7829

**NEILSON & FINCH**
அறை உடன் வாடகைக்கு உண்டு. தனி குளியலறை. சமைக்கும் வசதி அல்லது உணவு தரலாம். வயதான பெண்கள் விரும்பத்தக்கது. குறைந்த வாடகை.
தொடர்புகட்கு: 416.554.4416

**HURONTARIO & DUNDAS**
1 Bedroom in an apt. for rent. Parking & cable available. Close to all facilities. Ladies only. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.279.4960

**MARKHAM & SHEPPARD**
1 Room for rent. Parking available. Close to 3 schools, TTC, many malls. Ladies or elders preferred. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.754.7172

**TAPSCOTT & NEILSON**
1 Room in main floor for rent. Parking, laundry, cable & internet. Close to malvern mall & TTC. Girls or working ladies preferred. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.283.9817

**JANE & FINCH**
Room available in condo. with all facilities. Near York university, TTC, Mall & school. Avail. immediately. பெண்கள் மட்டும்.
தொடர்புகட்கு: 416.856.5504

**BRIMLEY & EGLINTON**
Windowed room in bsmt. for rent. Washer & dryer, parking & cable included. $350. Non smokers only.
தொடர்புகட்கு: 416.268.5014

**MARKHAM & SHEPPARD**
1 Room in condo for rent with all facilities. All amenities close by. Avail. immediately.
Call: 416.412.7582

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.201.3111

**LAWRENCE & BELLAMY**
Room in main floor for rent. $350. Room in bsmt. for $290. TTC at door step. Avail. immediately.
416.289.3459 / 416.433.0491(cell)

**2** நேரச் சாப்பாட்டுடன் (**2 meals**) நாலு அறைகள் கொண்ட **BSMT** இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. **Free internet.** ***Close to all*** facilities. Avail. immediately.
**PHARMACY & LAWRENCE**
தொடர்புகட்கு: 416.288.0303

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள், வயதானவர்கள், சிறு குடும்பம் விரும்பத்தக்கது. விபரங்கட்கு:
416.732.6931/416.281.9888

**BRIMLEY & STEELES**
தனி வீடு ஒன்றின் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Parking, Laundry, cooking facilities. Close to bus, school, தமிழ் கடைகள். Avail. immediately.
தொடர்புகட்கு: 416.844.7550

**NEILSON & TAPSCOT**
1 Room for rent. Meals on request. Internet, parking. Cooking facilities. Close to Centennial College. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.500.6409

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance.Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.885.0454

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

**NEILSON & FINCH**
1 room for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Only for woman. Avail. immediately.
416.297.4100/647.986.4100

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil. (JK – Gr. 3)
Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

மேலும் பக்கங்கம் 20

# CARE GIVER WANTED

***WARDEN & STEELES***
Live-in trust worthy care giver wanted to look after elderly lady. வயது வந்த அம்மாவை பராமரிக்க நம்பிக்கையான பெண் தேவை. விபரங்கட்கு: 905.946.9456
Weekdays 6:00pm - 9:00 pm
Weekends 9:00Am - 8:00pm

# TUTION CLASSES

***McCOWN & FINCH***
Math & Tamil Language ( Jk - Gr.9). Individual or group classes available. By Qualified, Trained & Experienced teachers
Call: 416.519.4336

# APPLIANCES FOR SALE

1. Eectric hot water tank- 40 gal.
2. Washer & dryer
3. Bar speaker
4. Freezer

**MIDLND & EGLINTON**
Rooms Available For Rent.
For details contact: 416.896.2511

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில், வேளாளர் குலத்தில் பிறந்து, தற்போது பிரான்ஸில் நிரந்தர பிரஜையாக வசிக்கும் 5'.8" உயரமும், 37 வயதும் உடைய ஆணுக்கு பொருத்தமான பெண் தேவை, மூலம் 4ம் பாதம்.
விபரங்கட்கு: 416.284.8369

# LEARN COMPUTER

Learn Photoshop, Windows, Internet, Email. For residents of Malvern & Markham only. Virus removal and software installation undertaken. Call in the mornings.
தொடர்புகட்கு: 905.554.5567

# தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள்.
தொடர்புகட்கு: 905.554.2496

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# HOUSE FOR RENT

**WARDEN & FINCH**
4 Bedroom house with basement for rent. Rent $1500. Available immediately.
Contact: 416.458.0537

**MORNING & McLEVIN**
3 Bedroom house for rent. Close to Junior & High school, TTC & stores. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். உடன் வாடகைக்குண்டு.
416.286.3544/647.836.3440 ( Leave Mesage)

**BRIMLEY & McNICOLL**
3 Bedroom house for rent. Free cable & internet. Parking. Close to TTC, school & shopping. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.723.2532

**MARKHAM & SHEPPARD**
New 3 Bedroom house for rent. 2 washroom, parking & other facilities. Also a room for rent with or without meals. All facilities. Close to HWY 401, school & mall. Avail. September 1st 2009
தொடர்புகட்கு: 647.897.6421

**MORNINGSIDE & MCLEVIN**
3 bedroom house for rent main floor. Living room, kitchen, Parking. Small family preferred. Close to everything. பிறந்த குழந்தையையும் தாயையும் வீட்டில் வந்து பராமரிக்கக் கூடிய பெண் தேவையா? அழையுங்கள்.
416.724.1837 / 416.357.5683

# DAYCARE AVAILABLE

**MARKHAM & DENISON**
Well experienced, First Aid trained lady. Limited space. School drop-off & pick-up. Space available for kids on summer holidays.
தொடர்புகட்கு: **905.209.7012**

# FOR LADIES & KIDS ENGLISH TUITION CLASS

அடிப்படையிலிருந்து பேச்சு & இலக்கண (Spoken & Grammar) ஆங்கிலம் அனுபவமுள்ள ஆசிரியையால் 3 - 7 வயது பிள்ளைகளுக்கும், இளம், முதிய பெண்களுக்கு கற்றுத்தரப்படும்
தொடர்புகட்கு: **647.822.7722**

# TENNIS LESSONS

By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for scarborough, Markham & Richmond Hill Areas. 36 years of experience. Group Classes & Private Coaching Possible. Pl. Call: **David Selvadurai**
**416.495.1277/416.436.1765**



# ► K. G. S. MOVING ◄

**MOVING & DELIVERY**

- House
- Appartment
- Office
- Basement

- Toronto
- Kitchener
- Ottawa
- Montreal




Call: Sasi - ☎: ***416.844.7274***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774**

## Answers - 249 August 01, 2009

1) Since $\frac{a}{b+c}=\frac{2}{5}$, $\frac{b+c}{a}=\frac{5}{2}$, $\frac{b}{a}+\frac{c}{a}=\frac{5}{2}$, $But\ \frac{a}{b}=\frac{3}{4}$, $So\ \frac{b}{a}=\frac{4}{3}$

$\frac{4}{3}+\frac{c}{a}=\frac{5}{2}$, $\frac{c}{a}=\frac{5}{2}-\frac{4}{3}=\frac{7}{6}$, $a:c=7:6$

2) To lose 24 hours, the watch will lose 24×60 minutes or 24 × 60 × 60 seconds. Since 1 second is lost per day, this number is the number of days required. The number of years will be

$= \frac{24x60x60}{365} = 240\, years\ \ approximately$

3) $V^2 = 5^2 + 2^2 - 2\times 5\times 2Cos\ 45$

$=29-10\sqrt{2},$

$v=\sqrt{29-10\sqrt{2}}$

$= \sqrt{29-14.14} = 3.85\, km\ /\ h$




4) $\|x+y\|^2=\|x\|^2+2(x,y)+\|y\|^2$, $\|x-y\|^2=\|x\|^2-2(x-y)+\|y\|^2$

$\|x+y\|^2+\|x-y\|^2=2\left(\|x\|^2+\|y\|^2\right)$

5) $f(x)=\{\frac{\frac{x-2}{x-2}\ if\ \ x>2}{\frac{-(x-2)}{x-2}\ if\ \ x<2}$

$=\{\frac{1\ if\ x>2}{-1\ if\ x<2}$ Since the left and right hand limits are not the same, limit does not exit.




## Questions – 250 – AUGUST 15th, 2009

1) Fred has 17 coins with a total of 76 cents. The coins are nickels, dimes and pennies. He has 5 more nickels than dimes and as twice as many pennies as dimes. How many nickels he has? [For gr. 7 &8]
2) To make concrete, mix 4 shovels of stone, 2 shovels of sand and 1 shovel of cement. How many shovels of stone required to make 350 shovels of concrete? [For gr. 7&8]
3) Evaluate to each Limit (a) $\underset{x\to 1}{Lt}\ \frac{x^{\frac{1}{6}}-1}{x-1}$ (b) $\underset{x\to 0}{Lt}\ \frac{(x+8)^{\frac{1}{3}}-2}{x}$
4) Two cyclists depart at the same time from a starting point along routes making an angle of $\frac{\pi}{3}$ *radians* with each other. The first is traveling at 15 km/h, while the second is moving at 20 km/h. How fast are the two cyclists moving apart after 2h? [For gr. 12]
5) A box of 100 electronic components contains three that are defective. If a sample of five components is tested, what fraction of the possible samples contains at least one defective item? [For gr. 12]


## ENGLISH CLASSES FOR ALL

◆ **Grades 6 - 12 starting in September 1st week**

**AT SCARBOROUGH**

◆ By an Experienced Canadian Retired English Teacher Mr. Fred

**To Register call : 416.431.6774 or 647.831.0 070**




# கதையை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி



கேள்வி: உங்களின் அடுத்த படம் என்ன?

பாண்டிராஜ்: நகரத்தை மையமா வச்சு ஒரு காதல் கதை பண்ணியிருக்கேன். முழுக்க முழுக்கப் புது முகங்கள்தான் நடிக்கப் போறாங்க. இன்னும் தயாரிப்பாளர் முடிவாகலை. சீக்கிரமே முடிவாயிடும்னு நம்பறேன்.

# ஒரு நிகழ்விலிருந்து

கடந்த ஜூலை 26-ந் திகதி கனடியத் தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு மையம் (CTCEO) ஒழுங்கு செய்திருந்த படக் காட்சியும் அதன் பின்னான கருத்துக் களமும் இடம்பெற்றிருந்தது. இதில் தமிழ்த் திரைப்படக் கர்த்தாக்கள், திரைப்பட ஆர்வலர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

Road to Ladkh, Little Terrorist எனும் இரு குறும்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. Road to Ladkh; ஒரு உளவாளி எந்த உருவத்திலும் அமர்த்தப்பட்டிருக்கலாம் என்ற ஒரு வரிக் கதையைச் சொன்ன திரைப்படம். மண்ணே தட்டுப்படாத கல் மலைகளில் அமைந்த கற்பாதையில் பயணிக்கும் இருவரை மையப்படுத்தி திரைக்கதை அமைக்கப்பட்டிருந்தது. இத்தகையதொரு கடினமான சூழலில் எப்படி படமாக்கியிருப்பார்கள் என்ற வியப்பை ஏற்படுத்திய திரைப்படம். கார்ச் சக்கரத்துள் வைத்து ஏதோ ஒன்றைக் கடத்த முற்படும் ஒருவனாக நாயகனைக் காட்டி அவன் வெடிமருந்தை சுமந்து செல்லும் போராளி எனத் திருப்பத்தை ஏற்படுத்தி அதிர்ச்சியுடன் படம் முடிந்திருந்தது. 45 நிமிடப் படம் என்றாலும் அது படமாக்கிய விதமும் சிரமும் ஆவர்வலர்களின் அங்கலாய்ப்பாய் இருந்தது.

அடுத்தது Little Terrorist என்ற 15 நிமிடப் படம். தற்செயலாக இன்னொரு நாட்டின் எல்லைதாண்டி நுழைந்துவிட்ட ஒரு சிறுவனை ஆபத்தின்றி திருப்பி அனுப்பிவைக்கும் மனிதாபிமானத்தைப் பற்றியது. படப்பிடிப்பும் காட்சியமைப்பும் பிரமிக்க வைத்தன. இதில் சில காட்சிப் படிமத்தினூடாக மனிதாபிமானத்திலும் பார்க்க அவர்கள் தீண்டாமை மீது கொண்டுள்ள அதீத பிடிப்பை இயக்குனர் அழகுற காட்சிப்படுத்தியிருந்தார். இது பற்றியே ஆர்வலர்களால் பெரிதும் அலசப்பட்டிருந்தது. நீண்ட வசனங்களிலும் பார்க்க வசனமற்ற இத்தகைய காட்சிப் படிமங்கள் வலிமையானது என்றும் இதை எங்களது படங்களிலும் கையாள்வதே எமது திரைப்படங்களை தரமுயர்த்தும் என சுமதி ரூபன் கருத்துரைத்தார். எமது கலாச்சார பின்புலத்தையும் செறிவையும் இத்தகைய சிறு காட்சிகளால் மட்டும் காட்டி புரியவைக்க முடியாதென்றும் ஒரு படத்தை பிறிதொரு படத்துடன் ஒப்பிடுவது சரியானதாக இருக்காது என்றும்



- சௌமி -

விவேக் மறுப்புக் கருத்துச் சொன்னார். இப்படி பல கருத்துகளுடன் நிகழ்வு இனிதே நிறைவெய்தியது. எது எப்படியெனினும் இந்நிகழ்வு திரைப்படம் பற்றிய பலமுகப் பார்வையையும் புதிய அனுபவத்தையும் பாடமாகச் சொல்லிவைத்தது. இத்தகைய ஆரோக்கியமான திரைப்பட நிகழ்வை ஒழுங்குசெய்திருந்த CTCEO வினருக்கு மனமார்ந் பாராட்டு உரித்தாகுக.

இலவசம்! இலவம்! இலவசம்!
**Free Accident Claim Services**

***Motor Vehicle Accident***

- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?
- உங்கள் வாகன விபத்துக் கோரிக்கையை முற்றிலும் இலவசமாக செய்து கொள்ள விரும்புகிறீர்களா (Free Accident Claim)
- வாகன விபத்தில் வலி, வருத்தம், காயம், உடல் உபாதை அல்லது மனநல பாதிப்பு ஏற்பட்டதா?
- வாகன விபத்தினுள், விபத்து உங்கள் தவறானாலும் அல்லது உங்கள் தவறாக இல்லாவிட்டாலும் பெரும் தொகை பணத்தினை நட்ட ஈடாக பெற விரும்புகிறீர்களா?
- பல வருட அனுபவம் மிக்க எங்கள் வழங்கறிஞர்களின் (Lawyers) இலவச ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
- Licenced and Excellent Physiotherapy, Doctors, Lawyers & Assessment Services.



***Legal Defence Team Inc.***
*220 Duncan Mills Dr.*
*Suite 519, Toronto, ON (Donmills &Sheppard)*

**Call: Suresh : 416-276-0059**
[24 மணிநேர தமிழில் சேவை]
**Fax: 416-385-1804**

***Our Services:*** Scarborough, Markham, Mississauga, Richmond Hill, Aurora, New Market, Brampton, Pickering
- உங்களுக்கு உதவுவதே எங்கள் நோக்கம். பிறரிடம் சென்று ஏமாறு முன் எங்களை ஒரு முறை அழைத்து ஆலோசனை பெறுங்கள்.
- எமது அனைத்து சேவைகளும் 100% சட்ட ரீதியானவை.

கடன் பிரச்சினையில் தவிக்கிறீர்களா?

- கடன் சுமை தாங்க முடியவில்லையா?
- உங்கள் Credit பழுதாகிவிடும் என்ற கவலையா?
- உங்கள் வீடு, வாகனம், குழந்தைகளின் கல்வி என்பன பறிபோய் விடும் என்று ஏக்கமா?
- கவலை வேண்டாம். ஒருமுறை எங்களை அழைத்து இலவச ஆலோசனை பெற்ற பின் உங்கள் முடிவை எடுங்கள்.



**இதோ உங்களுக்கு உதவ சில சட்டரீதியான வழிவகைகள்**

***1. Consumer Proposal:*** உங்கள் Credit ஐயும் வீட்டையும் வாகனத்தையும் இதர சொத்துக்களையும் பாதுகாத்தபடியே உங்கள் கடனை சட்டரீதியாக 60% த்தால் குறைத்து மிகுதி 40% த்தை மட்டும் மாதாந்தம் மிகச்சிறு தொகையாக கட்ட வழிசெய்தல்.
***2. Debt Consolidation:*** உங்கள் அனைத்து கடன்களையும் ஒரு கடனாக்கி மாதாந்தம் மிகச் சிறிய வட்டியுடன் சிறு தொகையாக கட்ட வழி செய்தல். இதன் மூலம் உங்கள் Credit ஐ பாதுகாத்த படியே பெரும்பாலான வட்டிப் பணத்தை நீங்கள் சேமிக்க முடியும்.
***3. Bankruptcy:*** அனைத்துக் கடன்களிலிருந்தும் 100% சட்டரீதியாக விடுபட உதவுதல்.
***4. Line of Credit***

Call: **பிரபு பொன்னம்பலம்** - **416-822.2610**
**24 hrs. Hotline / Fax: 416-385-1804**
நிதித்துறையில் பல வருட அனுபவம் கொண்டவர், தமிழர் மத்தியில் பிரபலமானவர்

# கூதிர்காலக் குலாவல்கள் _ குறுநாவல்

## சென்ற இதழ் தொடர்ச்சி

### iv

அடுத்த சில நாட்களில் திலகராசாவும் தேவசிகாமணியும் அடிக்கடி சந்தித்து ஊருலாத்துவார்கள். ஒருநாள் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பெரியவீடு. மருமகள் ஒரு சட்டத்தரணி. அத்தோடு மனித உரிமைபேணும் சங்கத்தின் இயக்குனர் சபைத் தலைவி. மகன் டாக்டர் - நரம்பியல் நிபுணர். இரு குழந்தைகள்.ஒருபகுதியில் திலகராசாவும் மனைவியும் மறுபகுதியில் இவர்கள். மேல்வீட்டில் திலகராசாவுக்கு இரண்டு அறைகளும் ஒரு ஹோலும், அவர்களுக்கு 3 அறைகள், கீழே ஒரு அறையில் திலகராசாவின் மனைவி. நிலக்கீழ் அறையில் வீட்டுத்தியேட்டர், பந்து விளையாடல் முதலிய விளையாட்டுச் சாமான்கள். ஆடைகள் துவைக்கும் இயந்திரம் எனப் பலதும் பத்தும்.

நடுவில் வரவேற்பறை, சாப்பாட்டறை, குசினி, குடும்ப அறை, கணப்பு என. வேலைக்கும் போய் எப்படி வீட்டை நிர்வகிப்பது?. வாரத்தில் இருநாட்கள் வீடு சுத்தம் செய்ய ஒரு பெண் வருவாள். அதைவிட தாய்க்கு குளிக்க முழுக வார்க்க துணிதுவைக்க சுற்றாடலை துடைத்து அழகாக்க, வாரத்துக்கு 3 நாட்களுக்கு இரண்டு மணிநேரம் அரசாங்கம் அனுப்பிய பயிற்றப்பட்ட பெண் வருவார். சமையலுக்கு பன்னாட்டுச் சமையலும் தெரிந்த ஒரு பெண் வந்து அவரவர்க்குத் தேவையான உணவை இருநாட்களுக்கு போதுமானதை செய்து வைத்துப் போவார். இவர்களுக்கு அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட குறைந்த வேதனமாகிலும் கொடுக்கப்பட வேண்டும். எடுக்கிற வேதனம் இப்படிப் போகத்தான் சரி.

"அதுசரி, சுந்தரிக்கு என்ன நடந்தது?" "கனடா வந்து அவ வலும் விரக்தியாகத் தான் இருந்தவ. வயது போனவர்களுக்கு இங்கே பலமன்றங்கள் இருக்கின்றன. நாங்கள் இருவரும் நல்லாய் போய் வந்தோம். கூட்டங்கள், விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகள் என நடைபெறும். சிற்றுண்டி களும் கோப்பி முதலியனவும் தருவார்கள். புளோறிடா, ஜமேக்கா, கியூபா என சுற்றுலா சேர்ந்து போவோம். மாதம் ஒன்றாக ஒன்ராரியோ சுற்றுப்பிரயாண இடங்களுக்கும் போய்வருவோம். மகன் வீட்டுக்கு வந்த பின் சரியான தூரம், பிரயாண வசதிகள் குறைவு. குடிமனைப்பகுதியல்லவா. யாராவது காரில் தான் கொண்டுபோய் விட வேண்டும். குளிர்காலம் வந்தால் வீட்டுக்குள் தான். செத்தவீடு, கல்யாண வீடு போல பல அழைப்புகள் வரும். ஒன்பது மாதம் வெளியே காலடி வைக்க முடியாது. என்ன காரணமோ தெரியாது. அவவுக்கு மெலிவும் இயலாமை யும் வந்துவிட்டது. சோர்வு அதிகமாகி நடக்க முடியாமலும் வந்து விட்டது".

முதியோர் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கலாமென்றால் வீட்டை விட்டுப் போகமாட்டாவாம். பேரன்மாரின் சத்தத்தைக் கேட்பதே மகிழ்ச்சியாம். ஓம்! திறமையான வைத்தியர்கள், நரம்பியல், மனநல வைத்தியர் கள் என எல்லாரும் பார்த்துப் போகிறவர்கள்.

சுந்தரியைப் பார்க்க என திலக் தேவாவை கூட்டிச் செல்கிறான். மெல்ல நிமிர்த்தி தலையணையில் சார்த்தி இருத்த, "எப்படி தேவா இருக்கிறியள்".

"எங்கடை சுந்தரிதானா என்று பார்க்கிறன். அந்தநாளையில் சரோஜாதேவி மாதிரி என்றும் இவன் லக்கி என்றும் சொல்லுவன் இல்லையா?" அந்த வாடி வதங்கிய முகத்திலை மகிழ்ச்சியும் நாணமும் ஒருங்கே தவழ்கிறது. சிரித்துக் கொண்டே

"நீங்கள் அப்படியே இருந்திட்டியள். பிறகு வேற கலியாணம் ஏதாவது"... கெக்கட்டம் விட்டுச் சிரிக்கிறான் தேவா. திலக்கும் புன்முறுவல் பூக்கிறான்.

"பாருங்கோ சுந்தரி, இந்த மொட்டைத் தலையன் உங்களைப்பற்றியே கவலைப்பட்டுப் பட்டு சந்தோஷமில்லாமல் வாழ்கிறான். நான் சிறகடித்து உலகமெல்லாம் சுத்தி வருகிறேன். ஒவ்வொரு துறைமுகத்தி லும் இறங்கி, பசி இருந்தால் தீர்த்துக்கொண்டு புறப்பட்டு விடுவேன். மூன்று துறைமுகங்களில் நண்பிகள் இருக்கினம். பிரியும்போது ஒரு துன்பமுமில்லை. வேறென்ன வேண்டும். சில சமயங்களில் மட்டும் ஒரு பிள்ளை இருந்திருக்கலாமோ என ஏங்கும். அவ்வளவு தான். பாருங்களேன் இவனுக்குக் கவலையிலே வழுக்கை போட்டிட்டுது. நான் அப்படியே இருக்கிறன்."

"நீங்களும் ஒன்றும் மாறவில்லை. அப்படியே வெளிவாய்தான்" சிரிக்கிறாள் சுந்தரி.

"இஞ்சாருங்கோ இவரும் இங்கே இருக்கட்டுமன். அவருக்கும் நாங்கள் தானே" திலக் தேவாவைப் பார்க்கிறான்".

"அது சரிவராது. முதலிலை இது உங்கடை வீடில்லை. அடுத்தது சுந்தரி ஒரு இல்லத்தரசி போல நடக்கமுடியாது' தேவா.

"நான் நினைச்சதைத் தான் அவவும் சொல்கிறா. இங்க வீடு எங்கள் பொறுப்புத் தான். அவையள் ஏதோ விடுதி மாதிரித்தான் வந்து போவினம். சிலசமயம் இரவுச் சாப்பாட்டில் கூட சந்திக்கமாட்டினம். எதுக்கும் நான் முரளியோடை கதைப்பன். அவன் என்ன சொல்றது ok'

டிலிக்கு நல்ல சந்தோஷம், "அப்பாவும் அம்மாவும் சந்தோஷமாயிருந்தால் காணும்" என்று மருமகள் சொன்னாவாம்.

"நானொரு நாடோடி, காடோடி. ஒரு கட்டுக்குள் நின்று பழக்கமில்லை. கொஞ்ச நாளைக்கு நின்று பார்ப்பம். ஊர்ச்சங்கம், பழையமாணவர் சங்கம் என்றெல்லாம் வைக்கிறவையாம். பார்த்து மனம் அமைதியானால் நின்றிடுவன். அல்லாவிட்டால் கடைசிக் காலத்தை காசி, இராமேஸ்வரம் என்று கழிக்க வேண்டியது தான். கடகட-வெனச் சிரித்தார் திலக். "நீயாவது காவி உடுப்பதாவது? இத்தனை வருடத்தில் எத்தனை நாள் போயிருப்பாய்'

"கதிர்காமத்துக்கு ஒரு நாள் போயிருந்தன். அங்கை எங்கடை...இஞ்சைபார் சுந்தரியின்ரை ஆவலை.அரைவாசி வருத்தம் மாறிவிட்டுதோ"

"சொல்லுங்கோ சொல்லுங்கோ" சுந்தரி.

"என்ன சொன்னனான் அ, மறந்துவிட்டன்."

"இப்படித்தான் ஒன்றுக்குள்ளாலை ஒன்று என்று புழுகித்தள்ளிக் கொண்டே போறது. பிறகு எங்க விட்டனான் என்று வாறது" திலக்.

"திலக், ஒருக்கா வெளியிலை போட்டு வருவமோ? தம் அடிக்க வேணும்" சுந்தரி முகத்திலை ஏமாற்றம்.

'இஞ்சைதானே இருக்கப் போறன். கப்பல் கதையெல்லாம் அவிழ்த்து விடுவன் பாருமன். புகைப்பதிலை மனம் போனால், பிறகு ஒன்றும் செய்யத் தோன்றாது.

"சரி சுந்தரி உந்த ஆறு மட்டும் போய் கொஞ்ச நேரம் நின்றிட்டு வாறம். சுந்தரி மகிழ்ச்சியோடு விடை கொடுக்க, திலக் மெல்லக் கட்டிலில் சரித்து விடுகிறார். மெலிந்த கைகளால் அவன் கரங்களைத் தடவி கருணையோடு பார்க்கிறாள். தேவாவின் வருகை அவனிடமும் மாற்றத்தை உண்டாக்குகிறது. வழக்கமாக கடமையைச் செய்து போட்டு ஒரு புன்முறுவல்கூடக் கொடுக்காது பாராமுகமாகப் போய்விடுவான். இன்று தன் கரங்களைச் சிறிது அழுத்தி ஒரு அறிசெயல் காட்டிப் போகிறான். அவள் உள்ளத்தில் உற்சாகம். நிம்மதியாக நித்திரை வருகிறது.

**- வாலின்-**

### V

ஆற்றோரத்தில் போட்டிருந்த வாங்கில் இருவரும் அமர்ந்து கொண்டனர். "தேவா, எனக்குத் தெரியும், நீ ஏதோ சொல்லவந்து நிறுத்திப் போட்டாய். சுந்தரிக்காகத் தானே.... அல்லது எனக்கும் சொல்லக் கூடாதோ". பெருமூச்சொன்று பறந்தது. தேவாவின் முகம் வழக்கத்தைவிடச் சிறிது சோகமாகவும் ஆழ்ந்த யோசனையுடனும் காணப்பட்டது.

"திலக், என்னை மன்னித்துவிடு. சிலவேளை நீ மறந்து போன காரியங்களை நான் நினைவூட்டி துன்பப்பட வைப்பேனோ என அஞ்சுகிறேன். ஆனாலும் சொல்லாமல் இருக்கமுடியவில்லை".

"சே, சே, நான் எதையும் மறக்கவில்லை. சிறுவயது ஞாபகங்கள் துல்லியமாகத் தெரிகின்றன. நீ அறையில் குண்டூசி ஒன்றைத் தொலைத்துவிட்டு, இதைத் தேடி எடுக்காமல் விடமாட்டன் என்று நான் சிரித்து சிரித்து அதைரியப்படுத்தவும் நீ பிடிவாதமாக ஒருநாள் முழுவதும் மினக்கெட்டு கட்டில்சட்டங்கள் பொருத்தப்பட்ட நீக்கலுக்குள் கண்டுபிடித் ததைக்கூட மகாமகிழ்ச்சியோடு நினைப்பேன். பரவாயில்லை சொல்லு சொல்லு."

"சிறாணியின் கணவன்தான் அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்கள அத்தியட்சகராம்'.

"கேள்விப்பட்டன். ஆனால் அவன் D.S ஆக இருந்த போது சந்திச்சன். அதுக்கென்ன, அவன் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவன். நாங்கள் அவனைவிடப் புத்திஜீவிகளாக இருந்தாலும் அடிமை வர்க்கத்தவர்கள் தானே. நீ சொல்லு'

"முதல்முறை போனபோது உபாலியோடு தானே நின்றன். அப்ப குணசேகரா டி.எஸ். தான். கதிர்காமம் போனம். "அங்க வாறார் எங்கடை டி.எஸ். எங்களிலும் ஒருவருடம் யூனியர். நான் தொழிற்சங்கத்தின் தலைவர் என்று நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவியுயர்வுகள் தரப்படவில்லை. இவன் பிரதமரின் சொந்தக்காரன். டப்பட் என்று எல்லாப் பதவியுயர்வும் கிடைச்சு வருகுது" என்று உபாலி சொல்ல நான் திரும்பிப் பார்த்தேன்". அப்போது சிறாணி என்னை உற்றுப்பார்த்தாள். அடையாளங்கண்டதும் முகம் ஒருமுறை இருண்டு பின்தெளிந்தது. ஒரு புன்முறுவல் செய்தாள். கைகுலுக்கினோம்.

"குணா, இவரைத் தெரிகிறதா? இவர் தேவசிகாமணி. நமது கலியாணத்துக்கு வந்திருந்தாரே". என்றாள் சிறாணி.

"ஓ! இவர்தான் உங்கடை P.M ஆயிருந்த திலக் உடன் உங்க வீட்டுக்கு வாறவர் நினைவு வருகிறது மனிசா. man.

சம்பிரதாயக் கதைகள் முடிந்ததும், தொழிற்சங்கம் விடயமாக உபாலியுடன் பேசத் தொடங்கவே, கித்துள் கட்டி பார்ப்பது போல கடையருகே சிறாணி போக நானும் பின் தொடர்ந்தேன். சிறாணி எனது வாழ்க்கையைப் பற்றிக் கேட்டாள். கலவரத்துள் நடந்ததெல்லாம் தனக்குத் தெரியும் என்றாள். **பண்பாடாத மக்களும் பதவியாசை பிடித்த அரசியல் வாதிகளும் இருக்கும் வரை நமது நாட்டுக்கு சாபக்கேடுதான்** என்றாள். பின் தயங்கித் தயங்கி, "திலக் எப்படி இருக்கிறார். குழந்தைகள் இருக்குதென்று கேள்வி. விவாகம் பேசிச் செய்ததா அல்லது காதலா?'

"வில்லங்கப்படுத்தித்தான் கல்யாணம் செய்வித்தவை. இன்னொரு குடும்பத்தை வாழவைக்க வேண்டுமென்றுதான். மிகவும் கஷ்டப்பட்ட ஏழு பிள்ளைகள் உள்ள குடும்பம். அவ்வளவு படிக்காத பிள்ளை. வீட்டுக்கு மூத்தது. நல்ல குடும்பப்பொறுப்புள்ள பெண். அவன்மீது உயிரையே வைத்திருக்கு." அவள் கண்களில் சோகம் பரவியது. மெல்லக் கண்கலங்கிச்சு. மெல்லக் கேட்டாள்.

"என்னை மறந்திருப்பாராக்கும்" தொலைத்து விட்ட ஒரு பொருளுக்காக அழும் குழந்தையின் உணர்வு முகத்தில்.

"இருக்கமுடியாது அவன் ஆழ்ந்த சிந்தனைக்காரன். இப்பவும் வருந்திக் கொண்டிருப்பான் தேவா.

"ஒருமுறை நானும் திருகோணமலைக்குச் சென்றிருந்தேன். "இங்கேதான் திலக், குடும்பத்தோடு இருக்கிறானாம். போய் பார்த்து வருவோமா" என்று கேட்டார் குணா. அப்பா திலகராசா பற்றி அடிக்கடி கதைப்பார். தனக்குக் கீழ் வேலை செய்தவர், புத்திசாலி. ஆங்கிலத்தில் சொல்வதைத் தமிழுக்குப் பெயர்த்து துண்டுப் பிரசுரம் செய்து கூலிச் சனங்களுக்கு கொடுப்பார். நல்ல அரசியல் அறிவு. மாலையில் வந்து செஸ் விளையாடுவார். பிள்ளையளுக்குக்கெல்லாம் உடன்பிறந்த அண்ணன் மாதிரி என்றெல்லாம் சொல்லிவைத்தவர். அப்பாவுக்கு எல்லாம் தெரியும்தானே. யாராவது குணாவுக்கு ஏதும் சொல்லி சந்தேகம் கொள்ள வைத்தாலும் என்று முதலே சொல்லிற்றார். அதாலை இவரும் நட்புடன் தான் இருந்தார்" சிறிது நேரம் மௌனமாயிருந்தவள் தொடர்ந்தாள்.

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

# கூதிர்கால...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

....ஆனால் எனக்கு நினைத்தவுடனேயே கண்ணீர் வரும். கண்டுவிட்டாரானால் என்ன அப்பாட்டைப் போகவேண்டுமோ. வாறா வார விடுமுறைக்குப் போவம் என்பார். திலக் வீட்டுக்கு வரச் சொல்லிக் கேட்கவே, அவர் குடித்தனம் பண்ணுவதைக்கண்டால் எப்படிப் பிரதிபலிப்பேனோ என்ற அச்சத்தில் “வேண்டாம் வேண்டாம் காலங்கிடக்கிற கிடையிலை, எங்களையும் அவங்களையும் கண்ட துண்டமாக்கிப் போடுவான்கள். எனக்கு தமிழன்கள் என்றாலே வெறுப்பு. இனி ஒரு தொடர்பும் வேண்டாம். உத்தியோக ரீதியில் நீங்கள் வேண்டுமென்றால் போங்கள்” என்று மனச்சாட்சிக்கு விரோதமாய் நடுங்கி நடுங்கிச் சொன்னன். பாவம் அவர்.

“தமிழன் என்ற சொல்லுக்கே இப்படி நடுங்குகிறீர். இதுதானோ கண்டியின் இராசபரம்பரை” என்றார்.

“நானும் 85 ஆம் ஆண்டு கப்பலேறும் போது கண்டது. அதன்பின் லீவே எடுக்காமல் திரிவது தான் யாருக்காக ஊருக்குப்போக வேண்டும். இந்தமுறை மலேக்குப் போய் அவனைச் சந்திக்க வேணுமென்று தான் நினைச்சன். ஆனால் நாளைக்கே கப்பல் புறப்பட்டுவிடும். போகவர நேரங்காணாது.” என்றான் தேவா.

இப்படிப் பேசிக்கொண்டே இருக்கும் போது குணாவும் உபாலியும் ஏதோ வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதைக் கண்டு அங்கே போய் விட்டோம்”.

கதையிலேயே ஆழ்ந்து போயிருந்த திலக் அதன் சோகத்தைத் தாங்கமுடியாமல் அச்சிற்றாற்றில் ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

திலக்! திலக்!

நிமிர்ந்து பார்த்தான். கீழே கொட்டிக் கொண்டிருந்த கண்ணீர் கன்னம்வழியே வழிந்தது. தன்னை சுதாரித்துக் கொண்டே

“அவள் சந்தோஷமாய் இருக்கிறாளா? அப்படியானால் எனக்கும் மகிழ்ச்சி தான்”

“மன்னிச்சுக் கொள்ளடா திலக். நான் சொல்லாமல் மறைத்து விட்டேன். அவள் முன்னிலும் அழகாக தாய்மைப் பொலிவுடன் இருந்தாள். பழைய குறும்பு, கலகலப்பு ஒன்றும் என் முன்னால் வெளிப்படவில்லை. உடலால் அவனோடையும் மனதால் உன்னோடையும் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என நினைக்கிறேன்.

தேவசிகாமணி சிறிது நேரம் மௌனமானான்.

“சொல்லு, சொல்லடா’ - திலக்.

ஒரு வசனம் சொன்னாள். ஒரு கேலிச் சிரிப்போடை, ஒரு வெறுப்புக்கலந்த ஒலியோடை. இப்ப, நான் ஒரு பிரதம மந்திரியாய் வந்தால் எப்படி நடக்கவேணும் என்று விறைச்ச தலையோடை, நிமிர்ந்து, வலிந்த ஒரு புன்முறுவலோடை பயிற்சி செய்யுறன். குணாவுக்கு 24மணியும் வேலை நினைப்பும் அரசியல் நினைப்பும். 2 மணி சென்றாலும் படுக்கைக்குப் போகமாட்டார். விருந்துபசாரங்களின் போதுதான் அவருக்குப் பக்கத்திலை இடங்கிடைக்கும். போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகப் போகிறார். அமைச்சர் பதவி அவரை நாடிவரும். 15 வருடத்துள் நான் பிரதமமந்திரியின் மனைவியாகி விடுவேன். யார் கண்டது? அடுத்ததாக நானே பிரதமமந்திரியுமாகலாம்” என்று சிரித்ததோடல்லாமல்” அதனால் பேராதனைப் பூந்தோட்டமும் தொங்குபாலமும் உங்கள் நினைவுகளும் பசுமை நிறைந்த கனவுகளாக என்றும் வந்து போகும்’. சலிப்பு விரக்தி கலந்த குரலில் சொன்னாளப்பா’

மௌனத்தைக் கலைப்பது போல, “திலகராஜ்! அங்கே சுந்தரி காத்துக் கொண்டிருப்பாள். ஆழ்மன வியாபாரத்தை விட்டிட்டு வெளியே வா. நானுந்தான் மூன்றையும் கொடுத்திட்டு, அத்தகைய ஒரு வாழ்வைத் தேடாது, நனவு நிலையில் வாழ்கிறேனே. பாவம் சுந்தரி, ஒருவீட்டில் இருந்தும் வந்திருந்து நாலு வார்த்தை கதைக்கத் தன் மகனுக்கு நேரம் இல்லையே என்ற கவலையே பெரிய கவலை. அத்தோடு நாமும் பிந்திப் போனால்.... எழும்பு, எழும்பு.

தொடரும்


## COMMERCIAL KITCHEN FOR SALE

NORTH OF **STEELES & WARDEN**
1335 Sq.ft
Rent w / TM $1735 per month



Full equipment - Walk in Cooler, Hood, Gas Burners, 3 Refrigerators, 2 Freezers, Stem Tables, 3 Compartment Sinks, 3 Work Tables, Shelves.
Lots of free parking

For Appt. Call Ursula: **905.940.0180**
Cell: **416.554.0930**

## வயோதிபருக்கான வாகன சேவை

- பிள்ளைகள் வேலையில் லீவு எடுப்பது கஷ்டமா?
- லீவு எடுத்தால் வேலை போய்விடும் என்ற பயமா?

கவலை வேண்டாம் என்னை அழையுங்கள்



குடும்ப வைத்தியர், உடல் பரிசோதனை நிலையம், விசேட வைத்தியர் (Specialist), வைத்தியசாலை மற்றும் அரச காரியாலயங்கள் உட்பட வைத்தியர் பிறமொழியாயின் மொழிபெயர்ப்பும் செய்து மருந்து மாத்திரைகளையும் வாங்கி கொடுத்து தங்களின் தங்குமிடங்களில் பாதுகாப்பாக கொண்டுசென்று விடுவேன். **முன்கூட்டியே நாள், நேரம் என்பதை அறியத்தரவும்.**

தொடர்புகளுக்கு: **மாறன்** - **647.205.8502**


# விளையாட்டு...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

உலக கிரிக்கெட் கூட்டமைப்பின் தலைவர் டோனி லெவிஸ் கூறியதாக அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசையில் முதலிடம் நோக்கி இந்தியா

ஐ.சி.சி. வெளியிட்டுள்ள ரிலையன்ஸ் மொபைல் ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசையில் இந்தியா, அவுஸ்த்திரேலியாவை பின்னுக்கு தள்ளி 2-வது இடத்திற்கு வந்துள்ளதோடு, முதலிடம் வகிக்கும் தென் ஆப்பிரிக்க அணியைக் காலூலும் ஒரே ஒரு புள்ளி மட்டுமே பின் தங்கியுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பான ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் தற்போது வரும் ஆகஸ்ட் மாத போட்டிகள் வரை இந்த தரவரிசைக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த 3 ஆண்டுகள் கிரிக்கெட்டில் கடைசியாக விளையாடும் போட்டிகளில் பெற்ற வெற்றிகள் தரவரிசைப் புள்ளிகளை தீர்மானிக்கும். ஆனால் இந்த முறை விரைவில் கைவிடப்பட்டு ஆகஸ்ட் முதல் ஆகஸ்ட் வரை என்று 12 மாத போட்டிகளில் பெற்ற புள்ளிகள் என்றவாறு மாற்றப்படவுள்ளது. இதனால் ஒரு நாள் போட்டிகளை எதுவும் விளையாடவிட்டாலும், ஒரே இரவில் தரவரிசை நிலை மாற்றம் அடையலாம். கடந்த 12 மாதங்களில் இந்திய அணியின் ஒரு நாள் போட்டி வெற்றிகள் தற்போது ஆஸ்ட்ரேலியாவை பின்னுக்குத் தள்ளச் செய்து தென் ஆப்பிரிக்காவிற்கு நெருக்கமாக கொண்டு சென்றுள்ளது.

இங்கிலாந்து அணி 6-வது இடத்திலிருந்து 4-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இதனால் நியூசிலாந்து 5-வது இடத்திலும், பாகிஸ்தான் 6-வது இடத்திலும் உள்ளது. ஒரு நாள் போட்டிகளுக்கான பேட்டிங் தரவரிசையில் பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லை. முதலிடத்தை தோனி தக்கவைத்துள்ளார், இரண்டாவது இடத்தில் யுவ்ராஜ் சிங், 3-வது இடத்தில் மைக் ஹஸ்ஸியும் உள்ளனர்.

கௌதம் கம்பீரும், நியூஸிலாந்தின் ராஸ் டெய்லரும் 17-வது இடத்தில் உள்ளனர். பந்து வீச்சில் வங்கதேச கேப்டன் ஷாகிப் அல் ஹஸன் 3-வது இடத்தில் உள்ளார். ஆல்ரவுண்டர் தரவரிசையில் இவர் முதலிடம் வகிக்கிறார்.

ஜெயவர்தனே அபார சதம் தொடரை வென்றது இலங்கை

தம்புல்லாவில் நடைபெற்ற இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் நிர்ணயித்த 289 ரன்கள் இலக்கை இலங்கை 4 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து எட்டியது. மகேலா ஜெயவர்தனே 108 பந்துகளில் 123 ரன்களை விளாசி ஆட்ட நாயகன் விருதைத் தட்டிச் சென்றார். இலங்கை ஒரு நாள் தொடரை கைப்பற்றியது.

289 ரன்கள் இலக்கை நிர்ணயித்த நம்பிக்கையில் களமிறங்கிய பாகிஸ்தான், இலங்கை அணியின் துவக்க வீரராக உபுல் தரங்காவுடன் மகேலா ஜெயவர்தனே களமிறங்குவார் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. மோசமான கள வியூகம், மோசமான ஃபீல்டிங், இலக்கற்ற பந்து வீச்சு ஆகியவற்றால் ஜெயவர்தனேயும், உபுல் தரங்காவும் அதிரடி முறையில் துவங்கினர். விக்கெட்டுகள் விழுமா அல்லது இலக்கை விக்கெட் இழப்பின்றியே இருவரும் எட்டி விடுவார்களோ என்ற நிலைதான் இருந்தது.

ஆமீர், ரசாக், நவேத் உல் ஹஸன், அ.ஃபிரீடி, அஜ்மல், மாலிக் ஆகிய பந்து வீச்சாளர்களில் அஜ்மல் மட்டுமே சுமாராக வீசி 54 ரன்களை விட்டுக் கொடுத்து இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். மற்ற வீச்சாளர்களின் பந்துகள் மைதானம் முழுதும் சிதறடிக்கப்பட்டன. 6 பவுண்டரி ஒரு சிக்சருடன் மகேலா 44 பந்துகளில் அரைசதம் எடுத்தார். தரங்கா 55 பந்துகளில் 8 பவுண்டரிகளை விளாசி அரை சதம் எடுத்தார். 18 ஓவர்களில் 109 ரன்களை எட்டிய இலங்கை 25-வது ஓவரில் 150 ரன்களையும், 33-வது ஓவரில் 200 ரன்களையும் விக்கெட் இழப்பின்றி அடைந்தது.

ஜெயவர்தனே 91 பந்துகளில் 12 பவுண்டரிகள் ஒரு சிக்சர் சகிதம் அபார சதத்தை நிறைவேற்றினார். பாகிஸ்தானுக்கு எதிராக 2-வது சதத்தை எடுத்த ஜெயவர்தனே, ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட்டில் தன் 11-வது சதத்தை எட்டினார். உபுல் தரங்கா 96 பந்துகளில் 76 ரன்கள் எடுத்து அஜ்மல் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். ஆனால் அது அவுட் இல்லை. பந்து ஆ.ஃப் ஸ்டம்பிற்கு வெளியே பிட்ச் ஆனது ரீ-ப்ளேயில் தெரிந்தது. உடனேயே 123 ரன்கள் எடுத்த ஜெயவர்தனே, ரசாக் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்ததாக சமரவீரா அஜ்மல் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். இந்த சமயத்தில் 210/3 எனும்போது சற்றே பாகிஸ்தானுக்கு வாய்ப்பு உருவானது போல தெரிந்தது. சங்கக்காராவும், கண்டாம்பியும் இணைந்தனர். இருவரும் இணைந்து 9 ஓவர்களில் 56 ரன்களை சேர்த்தனர். கண்டாம்பி 32 ரன்கள் எடுத்து ஆமீர் பந்தில் ஆட்டமிழந்தார்.

ஆனால் ஸ்கோர் 268 ரன்களை எட்டியது. இறுதியில் சங்கக்காரா 37 ரன்கள் எடுத்தும், கபுகேதரா 8 ரன்கள் எடுத்தும் ஆட்டமிழக்காமல் வெற்றி தேடித் தந்தனர். தொடரை இழந்தது பாகிஸ்தான். சங்கக்காரா தலைமையில் இலங்கை அணி முதன் முறையாக டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது. டெஸ்ட் கிரிக்கெட்டில் இரண்டு முறை நாட் அவுட்டாக திகழ்ந்து அதில் ஒரு முறை மராத்தான் சதம் எடுத்து தோல்வியிலிருந்து காத்த இலங்கை கேப்டன் சங்கக்காரா, ஒரு நாள் கிரிக்கெட்டில் 3 போட்டிகளிலும் இன்னமும் வீழ்த்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


றிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS



தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும்
சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது
**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

Niru Niru
நிரு பிராண்ட்

# பேரண்டக் கதை

பல தொலைக்காட்டிகள் விண்வெளியை ஆராயத் தொடங்கின. நாளுக்குநாள் புதிய, வலுக்கூடிய தொலைக்காட்டிகளின் ஊடாக விண்வெளி அவதானிக்கப்பட, புதுப்புதுப் பரிமாணங்களில் பேரண்டம் தென்படத் தொடங்கியது. 1755ஆம் ஆண்டளவில் இமானுவேல் கென்ற் (Immanuel Kent) என்பவர். புதிய தகவலைத் தந்தார். நமது கதிரவன் தனியான ஒரு விண்மீன் இல்லை. பால்வெளியில் உள்ள பல்லாயிரக்கணக்கான விண்மீன்களில் கதிரவனும் ஒன்று என்பதனைக் காட்டினார். அந்தப் பல்லாயிரக்கணக்கான விண்மீன்களின் மத்தியில் சூரியனாகிய நம் கதிரவன் உள்ளது என்று கூறினார். அதுமாத்திரமல்லாது, பால்வழி கலக்சியில் உள்ள விண்மீன்கள் எல்லாம் சக்கரவடிவில் இருக்க, அதன் மத்தியில் எமது கதிரவன் தன் குடும்பத்துடன் இருக்கின்றது என வானவியலாளர்கள் கூறினார்கள். ஆக மொத்தத்தில் எமது பேரண்டத்தின் வடிவ மானது இப்போது ஒரு சக்கர அமைப்பிற்கு வந்து விட்டது. அத்துடன் இப்பேரண்டத்தின் மையம் கதிரவன் என்றும் ஆகிவிட்டது.

ஆய்வுகளும் விண்வெளி அவதானிப்புகளும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. பேரண்டத்தின் பருமை அளக்கும் முயற்சியும் வானவியலாளர்களிடையே காணப்பட, அதன் முடிவாகப் பேரண்டத்தின் பருமனும் கணிக்கப்பட்டது. சக்கரவடிவில் அமைந்திருந்த பேரண்டத்தின் அகலம் சில ஆயிரம் பாசெக் (Parsec) ஆக இருக்கும் என அக்கால வானவியலாளர்கள் குத்துமதிப்பாகக் கணித்துக் கொண்டார்கள். பாசெக் என்பது தூரங்களை அளக்கும் அலகு. ஒரு பாசெக் என்பது 3.26 ஒளிஆண்டு தூரத்திற்குச் சமனாகும். பேரண்டமானது சக்கரவடிவப் பால்வெளி என வானவியலாளர்கள் கருதி, முடிவு செய்து கிட்டத்தட்ட 100 வருடங்களின் பின்னரே பேரண்டத்தின் பருமனைக் குத்துமதிப்பாகக் கூடக் குறிப்பிட முடிந்தது.

இந்தச் சக்கர வடிவப் பேரண்டவடிவமானது ஏறக்குறைய 200 வருடங்களுக்கே உயிர்வாழ்ந்து. முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னராக Harlow Shapley



**பிரபஞ்சம் - 46**

என்பவர் பேரண்டம் எனப்பட்ட அல்லது என்று எண்ணப்பட்ட பால்வழியினைப் பற்றிப் புதிய தகவல்களைக் கண்டறிந்து கூறினார். மில்கி வே எனப்படும் பால்வெளியானது நாம் எண்ணுவது போல சில ஆயிரம் பாசெக் அகலமானதல்ல. பல ஆயிரம் பாசெக் அகல-மானது. அது மாத்திரமல்ல, கதிரவனும் பால்வெளியின் மையத்தில் இல்லை. கதிரவனும் ஏனைய விண்மீன்களும் பால்வழியின் மையத்தைச் சுற்றிக் கொண்டு வருகின்றன. அதாவது நமது கதிரவன், பால்வழியின் ஒரு சுருளின் ஓரத்தில் இருந்து கொண்டு பால்வெளியின் மையத்தினைச் சுற்றிக் கொண்டு இருக்கும் சாதாரண ஒரு விண்மீன். ஆம்! பால்வழியானது சக்கரவடிவினது அல்ல. சுருள் (Spiral) வடிவினது. பல சுருள்களைக் கொண்டது.

இப்படியாக Shapley கூறியது வானவியலாளர்களைக் கவர்ந்து கொண்டது. மிகவும் பரபரப்புடன் விண்வெளியானது புதிய நவீன தொலைக்காட்டிகளின் ஊடாக கவன-மாக அவதானிக்கப்பட, Shapley கூறியது உண்மையே என்பது அறியப்பட்டது. அம்முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எவ்விதம் 2000 ஆண்டுகளாக நம்பப்பட்டு வந்த அரிஸ்ரோற்றலின் பூமி மையப் பேரண்டக்கொள்கையானது, கொப்ப நிக்கசின் சூரிய மையப் பேரண்ட வடிவத்தால் மாற்றப்பட்டதோ அவ்வாறே 200 வருடங்களில் சக்கரவடிவ பேரண்ட வடிவமானது சுருள் வடிவப் பேரண்டமாக அல்லது சுருள் வடிவில் விண்மீன்களைக் கொண்ட பேரண்ட வடிவமாகத் திருத்தப்பட்டது. அத்துடன் நமது கதிரவனும் (பூமி உட்பட) பேரண்ட மையத்தில் இல்லை என்பதும் வானவியலாளர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இம்முறை மதத்தலைவர்கள், மதவாதிகளின் இடைஞ்சல்கள் இல்லாதிருந்தது.

இம்முடிவானது விஞ்ஞானிகளினால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பல ஆய்வுகள், அவதானிப்புக்கள், கணிப்புகள் எனச் செய்து அதன் முடிவிலேயே இந்த முடிவானது ஏற்றுக்கொள்ளப்பட்டு பேரண்டத்திற்கான புதிய வடிவம் கூறப்பட்டது.

பேரண்டக்கதையின் விவகாரம் இத்துடன் முற்றுப்பெறவில்லை நான் முன்னர் கூறிய ஒருவிடயத்தை மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியம் ஒன்று இப்போது ஏற்படுகின்றது. மேலே கூறப்பட்ட முடிவுகள் எல்லாமே நிரூபணமாவதற்கு நியூட்டனின் விதிகள் பெரும் பங்களிப்பினைச் செய்திருந்தன. ஆனாலும் புவியீர்ப்பு விதியானது கதிரவனுக்கு மிக அண்மையில் உள்ள புதன் கிரகத்திற்குப் பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை. காலத்திற்குக் காலம் விஞ்ஞானிகள் இது பற்றிச் சிந்தித்து ஆய்வுகளும் செய்தாலும் சிக்கல் தீர்ந்த பாடில்லை. புதன் கோள் மாத்திரம் தானே இப்படி நடக்கிறது எனக் கூறி தங்களைத் தாமே தேற்றிக் கொண்டனர். ஆனால் ஒருவர் மட்டுமே இந்தப் பிரச்சினை பற்றித் தீவிரமாக சிந்தித்தார். விடையும் கண்டார். அதற்கான விளக்கமும் தந்தார்.

அவரது விளக்கம் முழு உலகினையுமே ஒரு உலுப்பு உலுப்பியதுடன் பேரண்டத்தின் அமைப்பிற்கு புதிய ஒரு வடிவத்தினையும் தந்தது. இனி வரும் நாட்களில் அவை பற்றிப் பார்ப்போம்.



**- கனி -**






ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஜோதிடம் - கேரளா

திருப்பதி சாஸ்திரியார் குருஜி

647 894 5922 905- 201 5740

ஐரோப்பிய நாடுகளில் புகழ்பெற்ற திருப்பதி சாஸ்திரியார் அவர்கள்

கனடா வருகை தந்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சாஸ்திரியார் அவர்கள் கைரேகை, சாதகம் என்பவற்றை 1941ம் ஆண்டில் இருந்து சரியாக கணித்து கூறி வருகின்றார். 2009 ம் ஆண்டு வரைக்கும் சாதகம் இல்லாதவர்களுக்கும் சாதகம் கணித்து தரப்படும்.

முகநாடி கொண்டு நடந்தவை, நடக்க இருப்பவை, நடப்பவை பற்றி துல்லியமாக கூறுவார். உங்கள் விவாக யோகம், வியாபாரம், கல்வி, ஆரோக்கியம், சந்தான யோகம், குடும்பத்தில் வரும் சஞ்சலங்கள் ஆகியவை பற்றி விபரமாக கூறுவார்.

கடவுள் எவ்வளவு உண்மையோ அதே போல், கிரகங்களும், தோஷங்கள் சோதிடங்களும் உண்மை. நீங்கள் பலபேரிடம் சோதிடம் பார்த்திருப்பீர்கள். இவரிடமும் ஒரு முறை கேட்டுப்பாருங்கள். உண்மை விளங்கும் அத்துடன் வீடுகளுக்கும் சாந்தி செய்து கொடுக்கப்படும்.

Embassy's Convenience & grocery (Near the SAMOSA KING)
5200 Finch Ave, East Unit 101 – 103 Scarborough, Ont M1S 4Z3 (Millefield / Finch)
Tamil, Hindi, English – From 9:30am to 8:30 Pm
7 days a Week

**ASTROLOGER PALMISTRY**
Sri Kamachi Ampal Jothidam From Kerala
**Thirupathy Shasthiriyar Guruji**
**Tel: 647 894 5922, 905- 201 5740**




*shasthiriyar Came from India. and he is able to read your past. present and futureand also face reading. Hand reading. money problem. love problem Family & Education Problems Businessand etc.he has experience in horoscope making from 1941 to 2009 and he performs poojas and prayers for the protection of your home from enemies. After touring all across Europe he has now come to Canada to help you have seen many astrologers but give him a try.*

# Chop Shop - (2007)

Directed by Ramin Bahrani
Produced by Lisa Muskat, Marc Turtletaub & Jeb Brody
Written by Ramin Bahrani & Bahareh Azimi
Director of Photography, Michael Simmonds
Edited by Bahrani

ஏன்ஞ்ல் ஒலிவிராஸ் என்ற நான்கு வயது குழந்தை அமெரிக்காவின் நியு மெக்ஸிக்கோ மாநிலத்தின் மிளகாய் தோட்டத்தில் வேலை பார்த்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புறுஸ் லோரன்ஸ் என்ற எட்டு வயது சிறுமி கடந்த மூன்று வருடங்களாக புளோரிடா பீன் தோட்டத்தில் வேலை பார்த்தது தெரிய வந்துள்ளது. Campbell Soup Co., Chi-Chi's Mexican restaurants, ConAgra, Costco, H.J. Heinz, Newman's Own, J.C. Penney, Pillsbury, Sears and Wal-Mart போன்ற நிறுவனங்களில் குழந்தை தொழிலாளிகள் வேலை செய்வது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்த நிறுவனங்கள் 155 மில்லியன் டொலர்களை சேமித்துள்ளார்கள். கொஸ்கோ நிறுவனம் தங்களுக்கு பொருட்கள் உற்பத்தி செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களின் குழந்தை தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்துவதை தீவிரமாக கண்காணிப்பதாக கூறுகின்றார்கள். அவர்களுக்கு பொருள் விநியோகிக்கும் உள்ளூர் வோசிங்டன் நிறுவனத்தை கவனத்திற் கொள்ளவில்லை. (இது ஒன்றும் ஆச்சரியமல்ல) ரெக்சாஸ் மாநிலத்தில் நான்கு குழந்தைகள் நாளொன்றிற்கு சுமார் 12 மணித்தியாலங்கள் வேலை செய்வது தெரிய வந்துள்ளது. இதில் மிகச் சிறியவரது வயது ஒன்பதாகும். 16 வயது மெக்சிக்கோ யுவதி நாளொன்றிற்கு சுமார் 10 மணித்தியாலங்கள் 50 டொலர்களுக்காக, அமெரிக்கா - குயின்ஸ் பகுதி தொழிற்சாலையில் வேலை பார்த்துள்ளார்.

சி.ஐ.ஏ அறிக்கையின் படி 50,000 பேர் இதில் 5 வீதம் குழந்தைகள் (மீதி பெண்கள்) அமெரிக்காவிற்கு ஒவ்வொரு வருடமும் கடத்திவரப்பட்டுகின்றனர். இவர்கள் இலங்கை, சீனா, தாய்லாந்து. மெக்சிக்கோ, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து கடத்தி வரப்பட்டுகின்றனர். 1997 இன் அறிக்கையின் படி சுமார் 290,000 சிறுவர்கள் அவ்வாண்டில் சட்டத்திற்கு புறம்பாக வேலை செய்கின்றனர்.

10 வருடங்களுக்கு முன்பாக சுமார் 100,000 சிறுவர்கள் அமெரிக்காவில் மட்டும் குழந்தை பாலியல் தொழிலாளிகளாக உள்ளனர். இவை யாவும் அமெரிக்க ஊடகங்களூடாக வெளியான விபரங்கள்.

நியு யோர்க் நகரத்தின் ஐந்து பகுதிகளுள் (Manhattan, Bronx, Brooklyn, Queens, Staten Island) ஒரு பகுதி Queens - இராணி. 56 வீதமான இப்பகுதி மக்கள் வெள்ளையரல்லாதவர். இப்பகுதி வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களை பெருமளவு கொண்டது. 2007 இன் கணக்கெடுப்பின் படி மொத்த நியு யோர்க் மாநிலத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் 13.7 வீதம், இதில் குயின் பகுதியில் மாத்திரம் 12 வீதமானோர் வாழ்கின்றனர். மன்காட்டன் பகுதியில் உள்ள அதி உயர் கட்டிடங்கள் இப்பகுதியை உலகத்திலிருந்து மறைத்துவிடுகின்றது. உலகத்திற் கெல்லாம் அரசன் அமெரிக்கா. குழந்தை தொழிலாளிகள் பற்றி மூன்றாம் உலக நாடுகளை திட்டி தீர்க்கின்றது அமெரிக்கா. குழந்தை போராளிகள் பற்றியும் பொங்கி எழுகின்றது. தனது நாட்டில் தனது நிழல் நகர் நியு யோர்க்கில் பற்றி எரியும் குழந்தைகளைப் பற்றி கவலை கொள்ளவும் இல்லை, கவனத்தில் எடுக்கவும் இல்லை.

குயின் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குழந்தைகளின் (0-17 வயது) வீதம்

| 2001 | 2002 | 2003 | 2004 | 2005 |
|---|---|---|---|---|
| 22.2% | 22.6% | 21.0% | 20.9% | 16.8% |

நியு யோர்க்கின் குயின் புறுக்கிளின் பகுதிகளில் காலை நேரங்களில் குழந்தைகள் 'கடின வேலை சப்பாத்து' அணிந்து வீதியோரங்களில் நிற்பதைக் காணலாம். அங்கு வரும் வாகனங்கள் இவர்களை நாட் கூலி வேலைக்கு சுற்றுப்புறத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் செல்கின்றன. இது நாள் தோறும் காணும் காட்சி.

இவ்வாறு ஒரு நாள் வேலைக்கு காத்து நிற்கின்றான் 12 வயது அலி என்ற லத்தீன் அமெரிக்க தோற்றத்தைக் கொண்ட சிறுவன். மெல்லிய தோற்றத்தைக் கொண்ட சுறுசுறுப்பான சிறுவன். இவனது நண்பன் ஒருவன் மூலம் இவனுக்கு ஒரு வாகனம் திருத்துமிடத்தில் வேலை கிடைக்கின்றது. அதே வேலைத் தளத்தில் மேல் உள்ள ஒரு சிறிய அறையில் இவன் தங்குகின்றான். இவனது 16 வயது சகோதரிக்கும் பாதுகாப்பான இடம் தேவை என்பதனால் இதனை தேர்வு செய்கின்றான். வாகனம் திருத்துவதை விட வேறும் இரு இடங்களில் வேலை பார்க்கின்றான். சுரங்க இரயில் நிலையங்களில் பொருட்கள் விற்பது, சட்டத்திற்கு மாறான விடியோ பிரதிகள் விற்பது போன்றனவும் இவனது நாளாந்த வேலைகள். இவனது சகோதரி ஒரு துரித சாப்பாடு விற்பனை வண்டியில் வேலை பார்க்கின்றார். ஆனாலும் இவளது நடவடிக்கைகள் சில இவனுக்கு புதிராக உள்ளது. ஒரு பழுதடைந்த துரித உணவு விற்பனை வண்டியை சுமார் 4,500 டொலர்கள் கொடுத்து வாங்குகின்றான். இதனை இவனது நெருங்கிய நண்பனே ஏற்பாடு செய்கின்றான். உழைத்து இதனை திருத்தி வியாபாரம் செய்ய வேண்டும் என்பதே இவனது கனவு. அலிக்கு வாகனத்தை பழுது பார்க்க முடியும், சகோதரிக்கு சமைக்கத் தெரியும். இருவரது கனவும் இதுதான். மற்றொரு வாகனம் திருத்தும் நிலைய முதலாளி இந்த வாகனத்தைப் பார்த்து விட்டு இதனை திருத்த சுமார் 10,000 டொலர்களுக்கு மேல் செலவாகும் எனக் கூறுகின்றார். கோபமடையும் அலி தனது அடித்து விடுகின்றான். அலியின் சகோதரி இரவு நேரங்களில் பாலியல் தொழிலிலும் ஈடுபடுகின்றாள். இது அலிக்கு தெரிய வருகின்றது. அவ்வப்போது சிறு களவுகள் செய்த அலி பெண்களின் பணப்பையை பறித்தல் என அடுத்த கட்டத்தை நோக்கி நகர்கின்றான். இருவருக்கும் மற்றவரது உண்மை தெரிய வர யதார்த்த உலகை நோக்குகின்றனர்.

இதுதான் யதார்த்தம். அலிக்கு தன்னைப்பற்றி உண்மைகள் தெரியும் என்பது சகோதரிக்குத் தெரியும். சகோதரிக்கு தான் செய்யும் களவுகள் தெரியும் என்பது அலிக்குத் தெரியும். படத்தின் முடிவில் இருவரது புன்னகையும் அதனை வெளிப்படுத்துகின்றன. என்ன செய்ய முடியும்? அன்றாட வாழ்விற்கு தொடர்ந்து போராடத்தான் வேண்டும்.

யதார்த்தவாத படம் இது. இப்படத்தில் காட்டப்படும் இடம் உண்மையானது. (Willets Point) களம் அமெரிக்க கொலிவூட்டிற்கு புதிது. படத்தில் வரும் காட்சிகள் உண்மையானவை.

## தூறல்

## வானரன்

வாகனம் திருத்தும் நிறுவன முதலாளியாக நடிப்பவர் உண்மையில் ஓர் முதலாளி. படத்தின் தலைப்பு வாகனங்களை களவெடுத்து உதிரிப்பாகங்கள் விற்கும் இடம் என்பது. இன்றும் இவ்விடத்திற்கு சென்றால் இப்படத்தை காணலாம். (படத்தில் வரும் காட்சிகளை) முதலாளி நாள் முடிவில் சம்பளம் தரும் பொழுது பணத்தை எண்ணக் கூடாது. அவர் சென்ற பின்னரே எண்ண வேண்டும். இது உண்மையில் அப்பகுதியில் அப்படித்தான் நடைபெறுகின்றது. இதனை தான் நேரில் பல தடவைகள் கண்டதாக இயக்குனர் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

இப்படம் படமாக்கப்பட்ட இடத்தில் இருந்து நியு யோர்க் மெட்ஸ் பேஸ் போல் (New York Mets Base Ball) போட்டிகள் தூரத்தே தெரியும். இல்லையெனில் இரசிகர்கள் போடும் கூப்பாடு கேட்கும். இதன் விளம்பரப் பலகையில் மிகப் பெரியதாக "Make dreams happen" என்ற வாசகங்கள் பளபளக்கும். யாருடைய கனவுகள் பலிக்கும்? இவ்விடத்தில் மாலை நேரங்களில் ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் வந்து செல்வார்கள். இவ்விடத்தில் வேலை பார்க்கும் சிறுவர்களை அரசும் அறியும் குடியும் அறியும். இவர்களுக்கான விடிவு எதுவுமற்றது. இதனை தற்போதைய நியு யோர்க் நகர மேஜர் "the bleakest point of New York" (மிகவும் கடினமான) எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

### குழந்தைத் தொழிலாளர்கள் சிலர்



A recent study has shown that female farmworkers are three times more likely to develop breast cancer than non-farmworkers.



Perla, 12, struggles with heavy buckets of onions. In an average day, farmworkers harvest and carry approximately two tons of onions.

**விற்பனையாகின்றன!**
**கனி விமலநாதனின்**
**மூன்று நாவல்கள்**



❶ வேற்றுக்கிரக மனிதர்கள்
யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்?
அவர்களின் பின்னணி என்ன?
வேற்றுக்கிரக மனிதர்களை
சந்தித்தவர்கள் உண்டா?
வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

❷ பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்
எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது?
தோன்றியபோது எப்படி இருந்தது?
எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது?
பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

❸ இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்
பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா?
அவை எங்கிருந்து வருகின்றன?
பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்

**கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை**
*1241 Ellesmerer Road - Midland & Ellesmere*
*GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch*

# ஈழத்து தமிழ் மேடைச் சொற்பொழிவுகள் இருபதாம் நூற்றாண்டு

## ஓர் ஆய்வு!

இந்தியத் தமிழ் நாட்டின் அரசியல் மேடைப் பேச்சுப்பற்றிய ஓர் ஆய்வினை அமெரிக்க நாட்டு ஆய்வாளர் பேர்னாட்பேட் என்னும் அறிஞர் செய்து கொண்டிருக்கிறார். இவர் தமிழ் மொழி அறிவும் உடையவர். தமிழர்களுடன் பேசும் போது தூய தமிழில் பேசுகிறாராம். இந்தச் செய்தியை குமுதத்தில் கண்டதும் நமது ஈழத்துத் தமிழ் மேடைப் பேச்சுப்பற்றிய சிந்தனை ஆய்வு நோக்கில் எழுந்தது. இது இயல்பானதே.

சொற்பொழிவு என்பதையே பொது உரையாடலில் பேச்சு என்பர். ஆயின் பேச்சுக்கும் சொற்பொழிவுக்கும் நீண்ட இடைவெளி உண்டு. ஈழத்தில் யான் கண்ட 'சொற் செல்வர்கள்' என்னும் நூலை 1962ஆம் ஆண்டு யான் எழுதி வெளியிட்டிருந்தபோது சொற்பொழிவாளர், பேச்சாளர் என்பவர்களின் வேறுபாடும், ஒரு நல்ல சொற்பொழிவை வேறு எதனோடு ஒப்பிடலாம் என்ற கேள்வியும் அந்த நூலின் அறிமுக அரங்குகளில் அன்பர்களால் கேட்கப்பட்டது.

சொற்பொழிவை பேச்சு என்றும் பொதுவாகச் சொல்வதுண்டு. பேச்சுக்கும் சொற்பொழிவுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஒரு கருத்தை வெளிப்படுத்தும் போது அக்கருத்துக்கும் அதனை வெளியிடும் உணர்வுக்கும் ஒத்த பொருத்தமான சொற்களைத் தேர்ந்து 'கேட்டார் பிணிக்கும் தகையவாய் திறனறிந்து சொற்செட்டு, சொல் அலங்காரம், சொற்சுவை முதலியன கலந்து மிளிர ஆற்றுவதே சொற்பொழிவு' எனப்படும். இவற்றின் கூட்டமைப்பையே சொல்வன்மை என்பார் திருவள்ளுவர்.

சொற்பொழிவின் இலக்கணத்துக்கு இசையாத மாறிய போக்கு பேச்சு எனப்படும். மேலை நாடுகளிலும் சொற்பொழிவாளர் வேறு, பேச்சாளர் வேறு என்ற பகுப்புமுறை இருக்கிறது. கருத்தை முறையாக வெளிப்படுத்தும் திறமை மட்டும் உடையவரை 'ஸ்போக்ஸ்மென்' என்றும், கருத்துக்குரிய



சொற்களைத் தேர்ந்து சோர்வில்லாது அஞ்சாது நிரந்தினிது சொல்பவர் 'ஒறேற்றர்' என்றும் கூறுவர்.

சொற்பொழிவை சிறுகதையோடு ஒப்பிடலாம். கரு, உரு, உத்தி, உணர்ச்சி, ஆரம்பம், மத்தி, நிறைவு முதலியன சிறு கதையின் தேவை போல் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு, உருவம், உள்ளோட்டம், உணர்ச்சிக்கோவை, ஓசைச் சிறப்பு, நேரம் ஆகிய தேவைகள் சொற்பொழிவுக்கு உண்டு. சிறுகதை வார்ப்பில் சறுகல் உண்டானால் அது கதை என்று கொள்ளப்படுவது போன்று சொற்பொழிவின் ஒழுங்கில் வழுக்கல் விழுமானால் பேச்சு ஆகிவிடும். எழுத்தாளர் சிலர் சிறுகதை ஆளர்களாய் இல்லாதது போல, பேச்சாளர்களில் சிலர் சொற்பொழிவாளர்களாய் இல்லாமல் போய்விடுகிறார்கள்.

ஈழத்தில் யான்கண்ட சொற்செல்வர்கள் என்னும் நூலை 1962இல் தவத்திருக்குன்றக்குடி அடிகளாருக்கு அனுப்பிவைத்தபோது அவர் எழுதிய கடிதத்தில் 'கருத்தில் கொள்கையின் நடையில் தடம் புரளாத ஈழத்துச் சொற்பொழிவாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்' என்று எழுதியிருந்தார். பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை முதலியார், செ. சின்னத்தம்பி, கலாநிதி சு. வித்தியானந்தன், வித்துவான் க. வேந்தனார், சத்திய தேவி துரைசிங்கம் (பண்டிதை), வித்துவான் பொன் அ. கனகசபை, வித்துவான் க. ந. வேலன், வ. பொன்னம்பலம், M.A வித்துவான், பொன் முத்துக்குமாரன், புஷ்பா செல்வநாயகம் B.Sc., இ. மகாதேவன் (தேவன், யாழ்ப்பாணம்) டி. எம். பீர் முகமது, பத்மா சோமகாந்தன், சுபைபர் இளங்கீரன், த.நா வேந்தன், மட்டக்களப்பு செ. இராசதுரை, க.பே. முத்தையா, புதுமை லோலன், வித்துவான் சி. ஆறுமுகம், வட்டுக்கோட்டை அ. அமிர்தலிங்கம், க. சிவராமலிங்கம் B.A. ஆகிய இருபத்தொரு சொற்பொழிவாளர் அந்த நூலில் அடங்கினர்.

1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் ஆராச்சி மாநாட்டில் பூம்புகார் திடலிலே வைத்து எனது 'ஈழத்துச் சொற்பொழிவுகள்' என்ற நூலை வெளியிட்டு வைத்த அன்றைய முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா 'ஈழத்துச் சொற்பொழிவுகள் எங்களுக்கும் சொந்தமானவை' என்று கூறியமையும் இங்கு பதிவுக்கு உரியது. (ஈழத்துச் சொற்பொழிவுகளில் சென்னை தமிழ் பண்ணையின வெளியீடாகும்.) ஈழத்துச்சொற்பொழிவுகளில் மொழிவளம், ஆளுமை என்பதனோடு மண்வாசனை,



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -

(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 30ஆம் பக்கம்



# கணினி...

**05ஆம் பக்கத்தொடர்ச்சி**

நினைவகங்களின் கொள்ளவு கிலோ பைற்றுக்கள், மெகாபைற்றுக்கள் என்பது போல் கூறப்படும். மெட்ரிக் அளவு முறையில் கிலோ என்பது ஆயிரத்தைக் (1000) குறிக்கும். ஆனால் கணினி துறையில் இது 1024 ஐக் ($2^{10}$) குறிக்கும். கீழ்வரும் பட்டியல் பல சொற்களின் மதிப்பை காட்டுகிறது.

| பெயர் | குறுக்கம் | அளவு (பைற்றுக்கள்) |
|---|---|---|
| கிலோ (Kilo) | K | 2^10 |
| மெகா (Mega) | M | 2^ 20 |
| கிகா (Giga) | G | 2^ 30 |
| ரேறா (Tera) | G | 2^ 40 |
| பீட்டா (Peta) | P | 2^ 50 |
| எக்ஸா (Exa) | E | 2^ 60 |
| ஸீற்றா (Zetta) | Z | 2^ 70 |
| யோற்றா(Yotta) | Y | 2^ 80 |

இரண்டின் பத்தாம் மடிப்பு எனப் படிக்கவும்.

ஒரு 2GB (கிகாபைற்றுக்கள்) அளவு உள்ள வன்வட்டில் மொத்தம் 2,147, 483, 648 பைற்றுக்கள் சேமிக்கலாம். தற்போது பல ரேறா பைற்றுக்கள் அளவு கொண்ட தகவல் தளங்கள் இன்னும் வரவில்லை.

## பதின்மநிலை எண்முறை

நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் எண்கள், பத்தின் அடிப்படையில் (Radix) அமைந்தவை. இது 0 முதல் 9 வரையில் உள்ள பத்து இலக்கங்களை கொண்டது. பத்து அல்லது அதற்கு மேலும் உள்ள மதிப்பானது ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கங்களால் குறிப்பிடப்படுகிறது. இதில் ஒரு இலக்கத்தின் மதிப்பு அது இருக்கும் இடத்தைப் பொறுத்து மாறுபடுகிறது. இதனால் இது 'இடம் சார்ந்த குறியீடு' (Positional Notation) எனப்படும். இந்தக் குறியீடு இந்தியாவில் தான் உருவானது. ஒரு இலக்கம் வலது பக்கத்திலிருந்து மூன்றாவது இடத்தில் இருந்தால் அந்த இலக்கத்தை பத்தின் மூன்றாவது மடிப்பால் (Power of 3) பெருக்க வேண்டும்.

948 என்ற பதின்மநிலை எண்ணின் மதிப்பை இவ்வாறு கணக்கிட வேண்டும். இங்கு அடிப்படை எண் கீழ் குறியீடாகக் காட்டப்படுகிறது.

$$948_{10} = 9x10^2 + 4x10^1 + 8x10^0$$

பின்னங்களையும் இதுபோலவே குறிப்பிடலாம். இதில் பதின்மப் புள்ளிக்கு (Decimal Point) வலதுபுறம் வரும் இலக்கங்களுக்கு மடிப்பின் மதிப்பு எதிர்மறையில் இருக்கும். எடுத்துக்காட்டாக 948.23 என்பதன் மதிப்பை இவ்வாறு கணக்கிட வேண்டும்.

$$948.23_{10} = 9x10^2 + 4x10^1 + 8x10^0 + 2x10^{-1} + 3x10^{-2}$$

பொதுவாக

$$x = (....x_2\ x_1\ x_0....x_{-1}\ x_{-2}\ x_{-3})$$

என்னும் பதின்ம எண்ணின் மதிப்பினை

$X = x_i \ x\ 10_i$ where i = 2, 1, 0, -1, -2...

என்று கணக்கிட வேண்டும்.

### இருநிலை எண் முறை

இருநிலை முறையில் 0, 1 இரண்டு இலக்கங்கள் மட்டுமே உள்ளன. இதில் இரண்டு என்ற எண்ணைக்கூட ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கங்களால்தான் குறிப்பிட வேண்டும். இந்த முறைக்கு இரண்டு தான் அடிப்படை (Radix). இந்த முறையில் ஒரு எண்ணின் மதிப்பு இடம் சார்ந்த குறியீட்டு முறைப்படிதான் கணக்கிடப்படுகிறது. பதின்மநிலை முறையில் பத்து என்பதைப் பயன்படுத்தியது போல் இந்த முறையில் 2 பயன்படுகிறது. எடுத்துகாட்டாக $10111_2$ என்ற இருநிலை முறை எண் 2310 என்றும் பதின்ம முறை எண்ணுக்கு சமம்.

$$10111_2 = 1 \times 2^4 + D \times 2^3 + 1 \times 2^2 + 1 \times 2^1 + 1 \times 2^0 = 16 + 0 + 4 + 2 + 1 = 23_{10}$$

இருநிலை முறையில் எழுதப்படும் பின்னங்களையும், பதின்மநிலை முறையில் குறிப்பிடப்பட்டது போலவே மதிப்பிடலாம் எடுத்துகாட்டாக,

$$0.1011_2 = 1 \times 2^{-1} + 0 \times 2^{-2} + 1 \times 2^{-3} + 1 \times 2^{-4}$$

$$= 0.5 + 0 + 0 + 0.125 + 0.0625 = 0.6875_{10}$$

அடுத்து நாம் காண இருப்பது பதினாறு நிலை எண்முறை அதை நாம் அடுத்த இதழில் காணலாம்.

# Chop Shop...

**28ஆம் பக்கத்தொடர்ச்சி**

சகோதரி பாலியல் தொழில் செய்வதை அறிந்த அலி தான் சேர்த்து வைத்திருந்த பணத்தை ஒளித்து வைத்திருந்த இடத்தில் இருந்து எடுத்து, அவள் வேலை பார்க்கும் வண்டிக்கு சென்று 'உனக்கு பணம் தேவைப்பட்டால் வைத்திரு' எனக் கூறி கொடுத்து விட்டுச் செல்கின்றான். அச்சிறுவனின் உலகத்தில் அவனுக்குத் தெரிந்த விடை அது. இவர்களுக்கிடையிலான அன்பு அலாதியானது. விளையாடும் பொழுது, தூங்கும் பொழுது, ஓடி, ஓடி வேலை செய்யும் தனது தம்பிக்கு என தான் வேலை பார்க்கும் இடத்தில் இருந்து சாப்பாடு எடுத்து, தம்பி வண்டியை கடந்து செல்லும் பொழுது கவனித்து கொடுத்து 'முழுதையும் சாப்பிடு' என இவர்களது பாசத்தை கவித்துவமாக்கியுள்ளார் இயக்குனர். இவர்களது பெற்றோர் யார், பிறந்த இடமெது எதுவும் பார்வையாளர்களுக்குத் தெரியாது. தேவையு மற்றது. அவர்களது வாழ்வின் கொடூரங்கள் பல லட்சம் அமெரிக்க சிறுவர்களின் வாழ்வை வெளிப்படுத்துகின்றது.

**குழந்தைத் தொழிலாளர்கள் சிலர்**



படத்தைப் பார்க்கும் பொழுது இது இரு சிறுவர்கள் பற்றிய படம் என்பதற்கு அப்பால் அவர்கள் பின்னணியையும் தேடத் தூண்டுகின்றது. இயல்பான எளிய சிக்கலற்ற திரைக்கதை.

அமெரிக்காவில் பிறந்து ஈரானில் சில காலம் வாழ்ந்த இயக்குனர் ரமின் பகாரானி நவீன ஈரானிய இயக்குனர்களால் கவரப்பட்டுள்ளார். 'நான் பெரும்பாலானவர்களைப் பற்றித்தான் படங்களை படைக்கின்றேன். கொலிவூட்டைப் போன்று கனவுலக மக்களின் விடயங்களை படைக்கவில்லை' எனத் தெளிவாக இயக்குனர் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

படம் பார்வையாளர்களை சிந்திக்க வைக்கும் வகையில் பல கேள்விகளை பார்வையாளர்களிடம் விட்டுச் செல்கின்றது. அமெரிக்கா? குழந்தை தொழிலாளர்களை தடுக்கும் சட்டங்கள் என்ன செய்கின்றன? அமெரிக்காவின் மையத்தில் பலரும் அறியும் பகுதியில் நடக்கும் சட்ட மீறல்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இதனை நுகர்வோர் பெரும் முதலாளிகள். இவர்கள் தான் அரசு ஊடகங்களிலும், நீதி மன்றங்களிலும் பெட்டிச் செய்தியுடனும், சில ஆயிரம் அபராதங்களுடனும் தொடரும் சட்ட மீறல்களை சட்டங்களும் ஊடகங்களும் பாதுகாத்து வருகின்றன (பெட்டிச் செய்திகள், அபராதங்கள்) யார் யாருக்கு காவல்?

கடந்த சில வருடங்களாக புறுக்கிளின் பகுதியில் தொடர்மாடிக் கட்டிடங்களில் வாழ்ந்த வறுமைக் கோட்டின்கீழ் உள்ள பெரும்பாலானோர் வெளியேற்றப் பட்டார்கள். நவீன நகரமயமாக்கல் முறையில் இவர்கள் வெளியேற்றப்பட்டு, இக்கட்டிடங்கள் பல பெரிய நிறுவனங்களுக்கு விற்கப்பட்டன. புதிதாக கட்டப்பட்ட இக் கட்டிடங்களில் உயர் வர்க்கத்தினர் குடியமர்த்தப்பட்டனர். பல ஆண்டு காலமாக அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் வீடற்றவர்களாகி வீதிக்கு வந்து விட்டனர். இதனை அரசு கண்டு கொள்ளவேயில்லை. இன்றும் போராட்டம் தொடர்கின்றது. (ரொரண்ரோவின் றிஜன்ட் பார்க் பகுதியிலும் இவ்வாறான வெளியேற்றம் நடைபெற்றுள்ளது) யார் அதிபராக வந்தாலும் அமெரிக்காவின் வடிவம் மாறும் வரை எதுவும் மாறாது.



Sergio, age 10, already has three years of work experience in the fields.

மன்காட்டன் பகுதியிலோ அல்லது புறோட்வே வீதியில் நடமாடுபவர்களுக்குத் தெரிவது வான் உயர் கட்டிடங்களும், ரைம் ஸ்கூயரில் தெரியும் வான் உயர் விளம்பரங்களும், நவீன நாடக அரங்குகளும், கலைக் கூடங்களுமே. இது மிகச் சிறுபான்மை அமெரிக்கா. பெரும்பான்மை அமெரிக்காவை இப்படத்தில் காணலாம். இதனை அமெரிக்காவின் பல நகரங்களில் காணலாம். இது 9-11 க்கு முன்னரும் பின்னரும் ஒன்றே. வறுமைக் கோட்டை இந்த அரசியல் யுத்தங்கள் மறைத்தன. மாற்றவில்லை. இதனை இயக்குனர் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். இது தான் அமெரிக்கா.

# ஈழத்து தமிழ்...

**29ஆம் பக்கத்தொடர்ச்சி**

மனவாசனை என்பவையும் கலந்து வெளிவரும். செந்தமிழும் நாப்பழக்கம் என்பதற்கு ஏற்ப சொற்பொழிவு செய்வோர் மொழிப்பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றிருப்பார்கள். கருத்து நிலையில் கறாரான அழுங்குப்பிடியுடையோர் பலராவர். இவர்களில் சிலர் காலத்தின் யாதார்த்தின் தேவை கருதி சிறிது நெகிழ்வு காட்டுவர். நெகிழ்வில் தளம்பல் நீர்த்துப் போதல் இருப்பதில்லை. இதனை விட்டுப் பிடித்தல் என்னும் சமயோசித உத்தியாகக் கொள்ளலாம். ஒத்தோடி, மறுத்தல் என்னும் உத்தி இலக்கணமாயுள்ளது.

தடம்புரளாத, தளம்பாத சொற்பொழிவாளர்கள் சத்தியப்பிரவாகமே உள்ளத்தின் உண்மை ஒளியாய் வாக்கின் வல்லமையாய் வெளிக்கிளம்பும். இதனைக் கேட்கும் மக்கள் பிணிக்கப்படுவர், பின்பற்றுவர். மேடைச்சொற்பொழிவின் கருத்து நடையே வாழ்க்கை நடையாகவும் இருந்தமை ஈழத்துச் சொற்பொழி வாளரின் தனிச்சிறப்பாகும். ஊருக்கு உபதேசம் உனக்கு இல்லையடி என்ற போக்கு இவர்களிடம் இருந்ததில்லை. பேசுவது போலவே நடந்தனர், வாழ்ந்தனர். இவர்களை மனத்தால் வாழ்ந்த மாண்பினர் என்று குறிப்பிடுதல் பொருந்தும்.

'வாய்ச் சொல்லில் வீரரடிகிளியே நாளில் மறப்பாராடி' என்ற பாரதி கூற்றுக்குப் பயந்து தடம்புரளாத் தன்மையை தக்க வைத்துக் கொண்டனர். ஈழத்திலே கோவில்களில், கல்விக்கூடங்களில் சிறிய பெரிய மண்டபங்களில், பெரிய மைதானங்களில் சொற்பொழிவுகள் நிகழும். கோவில்களில் சமய விளக்கங்களும், கல்விக்கூடங்களில் கல்வியின் குறிக்கோள் பற்றியும் சிறிய - பெரிய மண்டபங்களில் பாரதிவிழா, வள்ளுவர்விழா, சேக்கிழார் விழா, கம்பர்விழா, நாவலர் விழா முதலியனவும் சஞ்சிகைவெளியீடு, நூல் வெளியீடு, விமர்சனம், ஆய்வுகள் என்றும் நடைபெறும். இவற்றோடு தனிச்சொற்பொழிவுகளுடன் பட்டிமன்றம், வழக்காடுமன்றம், இலக்கிய சமயப் பாத்திரங்களை இன்று சந்தித்தால், என்ன பேசிக் கொள்வார்கள் என்ற நாடகப் பாங்கான நிகழ்வுகளும் நடைபெறும். அனைத்து நிகழ்வுகளும் ஈழத்தமிழர்களின் மூலவேர்களை முன்னைப் பழம்பொருளை, பாரம் பரியத்தை, பெருமையை, வாழ்க்கைக் குறிக்கோளை, குடும்ப உறவு நிலைகளை, அன்பை - அறநெறிகளை பேணும் மனப்பான்மையை, ஒன்று பட்டு வாழும் அவசியத்தை மக்களுக்கு விளங்கவைக்கும் வகையிலேயே நடைபெறும். இந்தக் கோட்பாட்டு நெறியிலிருந்து தடம் புரளும் சொற்பொழிவுகளை மக்கள் கேட்டாலும் ஏற்பதில்லை.

தொடரும்...

ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - **416-286-2880**


Roadsport
HONDA
A Truly Professional Service Pr ovided to the Community.
Over 1000 satisfied customers
NEW & USED
Great Deals
BUY OR LEASE
Great Savings
Call
Dan Lanka
Retail Sales Manager
Serving the community since 1996
Direct: 416-454-1107
புதிய அல்லது பாவித்த வாகனங்களை
குறைந்த விலையில் வாங்க
உங்கள் நண்பனை அளையுங்கள்
டான் லங்கா
HONDA
Roadsport Honda
Used Cars
940 Ellesmere Road. At Kennedy
For New or Used Hondas in Toronto Call Dan
Direct: 416-454-1107 Or 416-291-9501 Ext. 2251
www.Roadsport.com
Design: J11.ca - 1-877-721-8910

# நன்றி! நன்றி! நன்றி!

இறைவனே! மன்னித்த எனது குற்றங்களை நான் மன்னிக்காது, அவற்றை ஒரு பணயக்கைதியாக்கி இதுவரை கட்டி வைத்திருந்ததற்காக என்னை மன்னித்திட இப்போ நான் உடன்படுகின்றேன்.

அன்புமிகு இறைவா! நான் குற்றமற்றவன் என்பதை எனக்கு ஞாபகமூட்டியதற்காக உனக்கு நன்றி! நான் அன்பைப் பெற்றிடத் தகுதி வாய்ந்தவன். மகிழ்ச்சி எனது பிறப்புரிமை. இவ்விரண்டும் எனக்குக் கிடைத்திடுவதை நீ விரும்புகின்றாய் என்பதற்கு நன்றி! நான் தவறுகள் புரிந்த போதும், அவற்றினால் நான் என்னைப்பற்றி அறிய வேண்டியவற்றை அறிந்து நல்ல பாடம் படித்து விட்டேன் என்பதை, எனக்கு உணர்த்தியதற்கு நன்றி.

நான் என்னையே சீர்தூக்கி எடைபோட்டுத் தீர்ப்பு வழங்கும்போது, பிறரும் அதைப்போலவே என்னை விமர்சித்து, பழித்துக்கூறி ஆமோதிப்பர் என்பதை எனக்குத் தெளிவுபடுத்தியதற்கு நன்றி! என்னிடம் இல்லாததைப்பற்றி நான் குறைகூறும்போது, என்னிடம் இருப்பவற்றிற்கு நன்றியாயிருக்கும் சந்தர்ப்பத்தினை நான் இழக்கின்றேன் என்பதை எனக்குத் தெளிவு படுத்தியதற்காக நன்றி நான் பிறரைக் குறைகூறிப் பிரலாபித்த சமயங்கள் யாவற்றையும் மன்னித்தற்கு நன்றி! பிறர் என்னை வசைபாடிப் பேசும் வார்த்தைகளில் எனது சொந்த நாவின் பேச்சு பிரதிபலிப்பதை எனக்கு உணர்த்தியதற்காக நன்றி! எனது



பொறுமையின்மையை சாந்தத்துடன் பொறுத்துக் ொகண்டதற்கு நன்றி! ஒன்றையுமே கொடுக்க விருப்பமில்லாத எனக்கு யாவற்றையும் கொடுத்ததற்காக நன்றி! என்னையே நான் இவ்வளவு கொடூரமாக விமர்சித்துக் கண்டிக்கும் போதெல்லாம், இத்தனை அன்புடனும் கருணையுடனும் என்னை வழி நடத்தியதற்காக நன்றி ஆண்டவரே! உனது அருளிற்கு நன்றி! நான் உள்ளபடியே என்னை முற்றிலும் அறிந்து, அங்கீகரித்து அன்பை வர்ஷிக்கும் பேரருள் நீ ஒன்றுதான் என்பதை எனக்குக் காண்பித்ததற்கு நன்றி.

நான் குற்றமற்றவன் என்பதை எனக்கு ஞாபகப்படுத்தியற்கு நன்றி. எனது ஆளுமை வளர்கின்றது. நான் கற்றுக் கொள்கின்றேன். எனது ஆன்மாவில் கலந்து ஊடுருவியிருக்கும் உனது நிதர்சனத்தின் உண்மையை இப்போ நினைவு கூர்கின்றேன். நான் உனது பிள்ளை, எனது குற்றங்கள் யாவும் உனதருளால் இப்போ நீங்கி மறைந்து விட்டன. ஏற்கெனவே இறைவன் மன்னித்த உனது தவறுகளுக்கு நீ தான் குற்றவாளி என இதுவரை நீ நினைத்திருக்கலாம். இறைமன்னிப்பை உணரக்கூடிய சக்தியை உனக்குத் தருமாறு கேட்டு இன்று பிரார்த்தித்துக் கொள்.

சுயமன்னிப்பே இறைமன்னிப்பு என்பதை ஏற்று, அனுபவித்து அதை வெளிப்படுத்திட இன்று முதல் முழுமூச்சுடன் முயற்சிக்கப் போகின்றேன்.

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 153

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX

Power of sale $299,900

• Vodden/Williams Pkwy /Hwy10
• 3 Bedrooms
• 4 Washrooms
• Finished bsmt
• Stove , Fridge , Washer , Dryer , All Elf , All Window Coverings

Condo. for Sale $95,000

• Kipling / Dixon
• 2 Bedrooms
• 1 Washroom
• Close To Highways, Bus Stop, Plaza, Schools.

FOR SALE $549,000

• Simcoe Rd / Canal
• 23 Acres Land
• 1,500 Sq Ft. House
• 2 Stoves , 2 Fridges , Washer , Dryer , All Elf Farm Equipments Can Be Sold Separately For A Reasonable Amount.

Condo. of Sale $154,500

• Mccowan / Hwy 401
• Bedroom : 1
• Washroom : 1
•One Parking & One Locker Included.
• Ttc At Door Step. Close To All Amenities. Scarboro. Town Centre Next Door.

CONDO.TOWNHOUSE FOR SALE $129,900

• Kennedy/Eglinton
• 2-Storey
• 2 Bedrooms
• 2 Washrooms
• Fridge , Stove , Washer , Dryer , All Elf , All Window Coverings

House of Sale $155,000

• Cedar/Wentworth
• Bungalow
• Bedrooms: 3+1
• Washrooms: 2
• 51 ft frontage x 100 ft depth

Condo Townhouse for Sale $192,500

• Keele / Finch
• 2 Bedrooms • 2 Washrooms
• Steps To York University, Public Transit, Shopping And Other Amenities.

Condo. of Sale $214,500

Middlefield/Dennison
• 2 Bedrooms
• 2 Washrooms
• Premium Stainless Steal Appliances
• Great Family Neighborhood, Steps To Shopping, Yrt, Ttc, Hwy, Doctor's Office, etc

House of Sale $479,900

• Hwy50/ Ebenezer
• 2 Storey
• 4+3 Bedrooms
• 3 Washrooms

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

MAX 2000
விடுமுறை காலங்களில் சுற்றுலா செல்லத் தயாராகுங்கள்!
ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது கிழமை U. S. A பயணம்

New York City சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், Shopping.
Vancouver & West Cost 14 days
August Civic Holiday Long Weekend
Plan Your Holiday Around These Dates
இவ்வாண்டு விடுமுறைக்கான பயண ஒழுங்குகள் ஏராளம் நீங்கள் தயாரா?
விபரங்களுக்கு: 416-609-2542